
கல்கி

KALKI 25-11-1973 45 காசு



உங்கள் மகனின் கனவை நனவாக்குங்கள்



உங்கள் மகன் பெரியவனானதும் எந்தத் தொழில் செய்யப்போகிறான்? என்ஜினியரா? கட்டடக்கலைஞரா? டாக்டரா? வக்கீலா? எதுவானாலும் சரி அதற்கு ஏராளமாகப் பணம் தேவை. அவனது எதிர்காலத்திற்கென்று பணம் சேமித்து வருகிறீர்களா? யூகோ பாங்கில் சேமித்து வாருங்கள்; உங்கள் பணம் பெருகிக் கொண்டே போகும்.

யூகோ பாங்க்
வளம் பெற வழி
வகுத்தளிக்கின்றது

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

தலைமை அலுவலகம் : கல்கத்தா

UCO-1/71.


HINDOOSTAN MILLS
100
1873 — 1973
தாக்கர்ஸீஸ் ஸூட்டிங்குகள்
& ஷர்ட்டிங்குகள்
க்ரோன்லீன்®
பாலியெஸ்டர்/பருத்தி
க்ரோனெஸ்டர்
பாலியெஸ்டர்/பருத்தி
ஈஸிலீன்®
80% பாலியெஸ்டர் & 20% பருத்தி
தாக்கர்ஸீஸ்
ஈஸிகேர்®
67% 'டெரீன்' 33% பருத்தி
தாக்கர்ஸீஸ்
எவர்ஃப்ரெஷ்®
67% 'டெரீன்' 33% பருத்தி
உள நிலைகளோடு ஒருங்கிணையும் துணிகள்!
TF
தாக்கர்ஸீ க்ரூப் ஆஃப் மில்ஸ்
ஸர் விதல்தாஸ் சேம்பர்ஸ், 16, பாம்பே ஸமாச்சார் மார்க், பம்பாய்-400 001.
TAMIL Dattaram TG-18D

என்றும் குறையா மதிப்பு!


அதுதான் உங்களுடைய பழைய லாரி அல்லது பஸ்!

அதன்மேல் சுந்தரம் பைனான்ஸ் பண உதவி அளித்து உங்களுக்கு ஒரு லாபகரமான முதலீடாக மாற்றுகிறது. இப்பண உதவி கொண்டு ஒரு புதிய டிரக்கை வாங்குவதால் உங்கள் வருவாயை பழையபடி மேலும் மேலும் பெருக்க உதவுகிறது. பழைய லாரி அல்லது பஸ் இல்லாவிடினும், சுந்தரம் பைனான்ஸ் உங்களுக்கு கீழ்க்கண்ட வகையில் உதவுகிறது ☐நீங்கள் முதலில் கட்டவேண்டிய தவணைத் தொகை பஸ் அல்லது லாரியின் விலையில் 25 சதவிகிதம் தான் ☐குறைவான தவணைக் கட்டணம் ☐எளிய இன்ஷ்யூரன்ஸ் தவணைச் சலுகைகள் ☐சுலபமாக 36 மாதங்களில் திருப்பிச் செலுத்தக்கூடிய சலுகை.

சுந்தரம் பைனான்ஸ் லேலண்ட், பிரிமியர், டாடா டிரக்குகள், பஸ்கள், அம்பாஸடர், பிரிமியர், ஸ்டாண்டர்ட் கேஜல் கார்கள் முதலியவைகளை வாங்க பண உதவி அளிக்கிறது.

மிக நேர்மையான, எளிய முறையில், சுலபமான நிபந்தனைகளின் பேரில், சுந்தரம் பைனான்ஸ் பண உதவி அளிப்பதில் முதன்மையில் திகழ்கிறது.

எனவே, பெரும்பாலான வாடிக்கையாளர்கள் சுமார் இருபது ஆண்டுகளாக சுந்தரம் பைனான்ஸ்-உடன் நீடித்த தொடர்பு கொண்டிருப்பதில் வியப்பில்லை.



சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
37, மவுண்ட் ரோடு
சென்னை 600006

SAA/SF/1077

பிரமாதீச, கார்த்திகை, 10 - நவம்பர், 26 '73



கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 - இதழ் 17

தொழிலாளர்களின் பொறுப்பு

நாட்டின் பொருளாதார நிலைமை நெருக்கடியான கட்டத்தில் இருப்பதால் எடுத்ததற்கெல்லாம் வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளும் போக்கைக் கைவிட வேண்டும் என்று தொழிலாளர் யூனியன் தலைவர்களைப் பிரதமர் இந்திரா காந்தி உருக்கமாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ரயில்வே வாகன்களின் போக்குவரத்து தடைப்பட்டதால் அவசியமான நிலக்கரியைப் பல பகுதிகளுக்கு அனுப்ப முடியவில்லை. துறைமுகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ததால் அத்தியாவசியமான அரிசி, கோதுமை முதலியவற்றை இறக்குமதி செய்ய முடியவில்லை. எத்தனையோ தொழிற்சாலைகளில் காரணமின்றி நடைபெறும் வேலைநிறுத்தங்கள் எண்ணிலடங்கா. உற்பத்தி தடைப்படுகிறது. அப்படி இருந்தும், தொழிலாளர் பற்றிப் பேசும்போதெல்லாம், அமைச்சர்களாகட்டும், பிரதமராகட்டும், மிகுந்த தயக்கத்துடனும், ஏன், பயப்பட்டுக் கொண்டும்தான் பேசுகின்றனர். வோட்டின் மீது உள்ள கண்ணை நாட்டின் மீது திருப்பினால் இந்தத் தயக்கமும் பயமும் அவசியமில்லை என்று தெரிய வரும். தொழிலாளர்கள் மேற்கொள்ளும் வேலை நிறுத்தங்கள் எல்லாம் நியாயமானவைதானா? வேலை நிறுத்தமே செய்யக் கூடாது என்று ஏன் தடையே விதிக்கக் கூடாது? மூன்றாண்டு காலத்துக்கு வேலைநிறுத்தம் செய்யும் போக்குக்கு ஓய்வு கொடுப்பது நல்லது என்று ராஷ்டிரபதி கிரி அவர்களே ஒரு சமயம் கருத்துத் தெரிவித்தார். பிரதமர் இந்திரா காந்தியின் வேண்டுகோள் இந்தப் பிரச்னையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் காட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழிலாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருந்தது உண்மையே. இதற்காகப் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால், இப்போது மிகுந்த சுயநலமுள்ள தொழிலதிபர்கள் கூட, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொழிலதிபர்களைப் போல் நடந்துகொள்ளுவதில்லை. குறைந்தபட்ச ஊதியம், வேலைநேரக் கட்டுப்பாடுகள், தொழிலாளர்களின் ஆரோக்கியம் போன்ற எல்லா அம்சங்களும் சட்டங்கள் மூலம் நன்றாகப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதிகளை மீறினாலும் சட்டப்படி தண்டனைக்குட்பட வேண்டியவைகளாகத் தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் வேலைநிறுத்தங்களும் கதவடைப்புக்களும் எதற்காக அனுமதிக்கப்பட வேண்டும் ?

நிர்வாகத்தினர் — தொழிலாளர் சச்சரவு எதுவாக இருந்தாலும், பேச்சு வார்த்தைகள், சமரசம், மத்தியஸ்தம், நியாயமான தீர்ப்பு போன்ற முறைகள் மூலமே, சட்டத்தின்படி தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே விவேகமுமாகும். இதை விடுத்து, வேலை நிறுத்தம் செய்வது விரும்பத்தகாத முறையே ஆகும். சமூக விரோதச் செயலாகத்தான் இருக்க முடியும்.

ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு விவசாயப் பெருங்குடி மக்கள் ஓர் ஆண்டுக் காலத்துக்கு வேலைநிறுத்தம் செய்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்நாட்டின் கோடானு கோடி மக்களின் கதி என்ன ஆகும்? உடனே அவர்களைச் சமூக விரோதிகள் என்று கருதிக் கடுமையான நடவடிக்கை எடுப்பதை அரசாங்கம் தன் கடமையாகக் கொள்ளுமல்லவா ?

விவசாயத்துக்குப் பொருந்துவது தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும். விவசாயத்துறையும் தொழில்துறையும் நாட்டுக்கு இரு கண்கள் போன்றன. இரண்டுமே சமமான அளவு முக்கியமானவை.

பொகாரோ உருக்கு ஆலையின் 15000 தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தால், அவர்கள் எஃகு உற்பத்தியை மட்டும் நிறுத்தி வைக்கவில்லை, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை முட்டுக்கட்டை போட்டுத் தடுத்து

விடுகின்றனர். இதன் மூலம் முதலாளித்துவ முறையினால் கிடைக்கக்கூடிய திறமையான நிர்வாக லாபமும் சமூகத்துக்குக் கிடைப்பதில்லை; சோஷலிஸ முறையினால் எதிர்பார்க்கக்கூடிய நன்மைகளும் கிடைப்பதில்லை. இந்தகைய இரண்டும் கெட்ட நிலையில் நமது பொருளாதாரம் இமர் வேலைநிறுத்தங்களின் காரணமாகத் திண்டாடிக் கொண்டிருக்கிறது.

தமிழ் நாட்டிலே...

தீரன்

சுகாதாரத்துக்குப் பொருந்தாது

நகரின் நல்லநீர் சப்ளைக்கான புழல் ஏரியின் அருகே ரெட்ஹில்ஸில் சென்னை மாநகராட்சியினர் மாமிசத்துக்காக மிருகங்களைக் கொல்லும் மிகப் பெரிய நவீன கசாப்புக்கூடம் ஒன்றைக் கட்டுவதற்கு முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. சுகாதார நோக்கில் பார்க்கும் போது இது பொருந்தாத காரியம்.

மேலும் புழலின் அருகே இந்தக் கசாப்புக் கூடத்தைக் கட்டுவதற்குத் தேர்ந்தெடுத்திருக்கும் இடத்தின் அருகே பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட ஒரு புராதனமான ஜைன ஆலயமும் இருக்கிறது. அஹிம்சையில் அசைக்க முடியாத நம்பிக்கை உடைய ஜைனர்களின் கோயில் அருகே கசாப்புக் கூடத்தைக் கட்ட நினைப்பது கொடுமை. அதே வட்டாரத்தில் இருக்கும் இந்து ஆலயங்களையும், அங்கே தொழ வருகிறவர்களையும் கூட இது புண்படுத்தும். எனவே இங்கே சொல்லப்பட்டிருக்கும் இந்த நிலைமைகளையும் காரணங்களையும் உத்தேசித்துப் புழலின் அருகே கசாப்புக்கூடம் கட்டும் யோசனையை உடன் கைவிடுமாறு சென்னை மாநகராட்சியை வேண்டுகிறோம்; வற்புறுத்துகிறோம்.

காங்கிரஸ் தேர்தல் கூட்டு

நவம்பர் இரண்டாவது வாரம் புதுடில்லியில் திரு காமராஜ் அவர்களும் பிரதமர் இந்திராவும் மீண்டும் சந்தித்து மனம் விட்டுப் பேசியிருப்பதை ஒட்டித் தமிழ்நாட்டில் நடைபெற இருக்கும் உபதேர்தல்களிலும் பாண்டிச்சேரி உபதேர்தல்கள் — தேர்தல்களிலும், இரண்டு காங்கிரஸ் கட்சிகளும் ஒத்துழைக்கும் என்று தெரிய வருகிறது. தி. மு. க. ஆட்சியின் தீமைகளை விமரிசிப்பதிலும், மாநில சுய ஆட்சி என்ற பெயரில் நடைபெறும் பிரிவினை வாதத்தை எதிர்ப்பதிலும் இரண்டு பிரிவுக் காங்கிரஸுக்கும் அடிப்படை ஒற்றுமை இருக்கிறது. தி. மு. க., அ. தி. மு. க. போலல்லாமல் இரண்டும் தேசிய அடிப்படையிலான கட்சிகள். பெரும்பாலான ஒரே நோக்கங்களை உடைய காங்கிரஸ் பிரிவுகள் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதனால் தமிழ்நாடு — பாண்டிச்சேரி — மக்களுக்குத் தி. மு. க. ஆட்சியிலிருந்து விடுதலையும் சுபிட்சமான நல்லாட்சியும் கிடைக்கும் என்று நம்புவோம். மறுபடியும் பிரதமரும் திரு காமராஜும் சந்திப்பார்கள் என்று தெரிகிறது. நாட்டு நலனில் உண்மையாகவே அக்கறையுள்ள இவ்விரு பெரும் தலைவர்களும் அடிக்கடி சந்திப்பதன் மூலம் தேசத்துக்குப் புதிய நன்மைகள் நிறைய உண்டாகட்டும்.

நேரு சிலை எங்கே?

தமக்குச் சிலைகள் வைப்பதைத் தாம் உயிரோடு இருக்கிறவரை அறவே எதிர்த்தவர் நேரு. இருந்தும் அவர் மேலிருந்த அளவற்ற அன்பின் காரணமாகச் சில இடங்களில் மக்கள் அவருக்குத் தெரிந்தும், தெரியாமலும் அவர் இருக்கும்போதும், மறைந்த பின்னும் அவருக்குச் சிலைகள் வைத்தார்கள். தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் நாமக்கல் நகரத்தில் அப்படி ஒரு சிலை வைக்கப்பட்டிருந்தது.

கடந்த ஆறாண்டு காலத் தி. மு. க. ஆட்சியில் நடந்த அலங்கோலங்களில் ஒன்றாக மூன்று வருஷங்களுக்கு முன் இந்தச் சிலை சேதப்படுத்தப்பட்டது.

"எப்படியும் இந்தச் சிலை மீண்டும் வைக்கப்பட்டுச் செம்மை செய்யப்படும்" என்று தானே கூறிய உறுதிமொழியை அரசாங்கம் காற்றிலே பறக்க விட்டு விட்டது. 'நிதிப் பற்றாக்குறைதான் காலதாமதத்துக்கான காரணம்' என இப்போது அரசாங்கத்தின் சார்பில் சாக்குப் போக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் நிதிப் பற்றாக்குறை இருந்தும் எத்தனையோ அநாவசிய ஆடம்பரமான காரியங்கள் இந்த அரசாங்கத்தில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. திரு பக்தவத்சலம் அவர்கள் சேலத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது வருத்தப்பட்டிருப்பது போல, "அரசாங்கத்துக்கு இந்த நேரு சிலையை மீண்டும் அமைப்பதில் உண்மையிலேயே அக்கறையும் சிரத்தையும் இருக்குமானால் சிரமம் இல்லாமல் வேண்டிய பணத்தைத் திரட்டியிருக்க முடியும்." தங்களுக்கு

'கல்கி'யின் விலை உயருகிறது

மனிதனுக்கு உணவைப்போல பத்திரிகைகளுக்கு அத்தியாவசியமான ஆதாரப் பொருள் காகிதம். இந்தக் காகிதத்தின் விலை ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டு போவது போதாது என்பதுபோல் இப்போது ஒரேமூச்சில் 60 சதம் வரை உயர்ந்திருக்கிறது. இந்த விலை உயர்வை ஓரளவுக்கேனும் ஈடு கட்டக் கல்கி பத்திரிகையின் விலையை 2-12-73 இதழ் முதல் பிரதி ஒன்றுக்கு 50 பைசாவாக உயர்த்துவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது. கல்கி வாசகர்களின் ஒத்துழைப்பையும் தொடர்ந்த ஆதரவையும் வேண்டுகிறோம்.


என்னை நம்புங்க... நான் ஒரு பாவமும் அறியாதவன்!...
பலே! நான் எதிர்பார்த்த ஜனநாயகவாதிகள் உங்களுக்கும் தெரிஞ்சிருக்கே!
நீங்களாவது உதைக்குக் கேட்டீங்க, நான் கேள்விதான் கேட்டேன்!

அக்கறையும் சிரத்தையும் உள்ள எத்தனையோ பிள்ளைகளுக்கு அப்படி அவர்கள் திரட்டியிருக்கிறார்களோ?

மாநகராட்சி ஊழல்

சமீப காலமாகச் சென்னை கார்ப்பரேஷன் என்பதை உச்சரிக்கத் தெரியாமல் வாய்குழறிப்போய்ச் 'சென்னைக் கரப்ஷன்' என்றே பலர் உச்சரிக்கிறார்கள். கேள்விப்படுகிற சில சமாசாரங்களோ அந்த உச்சரிப்பே சரிதானோ என்று சொல்லும் அளவுக்கு இருக்கின்றன.

சென்னை மாநகராட்சியின் மின்சாரப் பிரிவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார் இரண்டு கோடி ரூபாய் சுருட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த மின்சாரப் பிரிவின் அன்றாடக் கூலிகளின் பட்டியலில் தினக் கூலி பெறுவோர் என ஆறாயிரம் பேர்கள் எழுதப்பட்டிருந்தனவாம். அந்தப் பட்டியலில் உள்ள பெரும்பாலான பெயர்கள் கற்பனையான போலிப் பெயர்களாம். போலிப் பெயர்ப் பட்டியலின் மூலமாகக் கிடைக்கும் இந்த மோசடியான தொகையைப் பங்கு போட்டுக் கொள்வது வழக்கமாம். இந்தப் பங்கினால் யோகம் அடித்த ஒரு சாதாரண மாநகராட்சி ஊழியர் சொந்தமாக ஒரு சினிமாப் படத்தைத் தயாரித்து வெளியிடும் அளவு வசதி பெற்றிருக்கிறார். இதுபோல் இந்த மோசடித் தொகை வேறு பலருக்கும் பங்கிடப் பட்டிருக்கிறது. சில சாதாரணமான கார்ப்பரேஷன் ஆட்கள் இரண்டு மூன்று வீடுகள், நகரில் ஓடும் சில டாக்ஸிகள், ஐந்து விரல்களிலும் மோதிரங்கள் ஆகிய சொத்துக்கள் சகிதம் எப்படிச் சொகுசாக வாழ முடிகிறது என்று இப்போது புரிகிறதல்லவா? இந்த விஷயமாக மாநில அரசு சரியான முறையில் விசாரணை நடத்தும் என்ற நம்பிக்கை இங்குள்ள எதிர்க் கட்சிகளுக்கு இல்லை. ஏனெனில் இங்குள்ள இப்போதைய கார்ப்பரேஷனும், இப்போதைய மாநில ஆட்சியும் ஒரே கட்சியிடம்தான் இருக்கின்றன. எனவே, சென்னை கார்ப்பரேஷனின் 'வாட்டர்கேட்' ஆகிய இந்த இரண்டு கோடி ஊழலை மத்திய புலனாய்வுத் துறை எடுத்து விசாரிக்கவேண்டும் என்று ஆளும் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ் ஆகிய முக்கிய எதிர்க் கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.

விவேகமற்ற செயல்

மாநில சுயாட்சி எனப்படும் பிரிவினைவாதத்தின் முதற் படியாக 'தமிழ் நாட்டிலுள்ள வடவர் கடைகளின் முன்பாக மறியல் செய்யப் போவதாக' இங்கே சில அறிவிப்புக்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் தலைகாட்டுகின்றன. இது தற்கொலைக்கொப்பான முயற்சி. விவேகமற்ற காரியம். இங்கே செய்யப்பட்ட இந்த அறிவிப்பினால் பதிலுக்கு பம்பாயில் உள்ள சிவசேனையும், கர்நாடகத்தில் உள்ள வாட்டல் நாகராஜின் கன்னட சளுவாளிகர் இயக்கமும் அங்குள்ள தமிழர் கடைகள், நிறுவனங்களின் முன் மறியல் செய்வதென முடிவு செய்தால் என்ன ஆவது? இந்தியாவின் எந்த மாநிலத்தில்தான் தமிழர்கள், அவர்கள் கடைகள் எல்லாம் இல்லை? பிற மாநிலங்களில் உள்ள பெருவாரியான தமிழர்களின் நலனைப் பற்றியே அக்கறை காட்டாமல் கிணற்றுத் தவளைத்தனமான போராட்டங்களைக் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல நடத்திக்கொண்டிருப்பது பித்துக்குளித்தனமானது ஆகும். இந்தச் சமயத்தில் தமிழ்நாடு கவர்னர் திரு கே. கே. ஷா நவம்பர் மாதத் தொடக்கத்தில் சென்னை நகரில் கன்னட நண்பர்கள் மத்தியில் பேசிய ஒரு பேச்சில், ''உள்ளூர்க்காரர்களுக்கே உள்ளூரில் வேலை என்ற கோஷமும் வாதமும் ஆபத்தானவை. இத்தகைய தீய மனோபாவங்களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். ஒருவருக்குத் தாய் மொழி மேல் இருக்கும் அபிமானத்தைப் பிரிவினைச் சக்திகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள அனுமதித்து விடக் கூடாது. மொழியின் பெயரால் சில இடங்களில் பிறரைக் கட்டாயங்களுக்கு உட்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. இந்தியாவிலுள்ள அனைவரும் இந்திய தேசிய உணர்வையும், ஐக்கியத்தையுமே வளர்க்க முற்பட வேண்டும்'' என்று வற்புறுத்தி இருப்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். வடநாடு தென்னாடு என்று 1973ல் பேசுவது சுத்தப் பத்தாம் பசலித்தனமான மூட நம்பிக்கையாகும்.

ராஜாஜி சிந்தனை

நான் ஒரு தோட்டக்காரன் என்று வைத்துக் கொள்வோம். நான் சரியாக வேலை செய்கிறேனா என்று பார்க்க எனக்கு ஒரு மேல் பார்வை அதிகாரி இருக்கக் கூடாது. நானேதான் ஒழுங்காக என்னுடைய வேலையைச் செய்ய வேண்டும். தேனீக்களைப் பார்த்திருக்கலாம். ஒவ்வொன்றும் தேன் சேகரித்துக் கொண்டு வருகின்றன. விரைவில் தேனடை நிரம்பி விடுகிறது. ஈக்கள் சரியாக வேலை செய்கின்றனவா என்று யாரும் மேற்பார்வையிடுவது இல்லை. நாமும் அதுபோலவே இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் நாணயமாகவும், சுறுசுறுப்புடனும் நடக்க வேண்டும். யாருடைய தூண்டுதலும், மிரட்டலும் இல்லாமல் ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய வேலையை ஒழுங்காகச் செய்வதைப் பெருமையாகவும் கௌரவமாகவும் கருத வேண்டும்.



டெலிராட் விற்பனை நிலையத்திற்கு வருவீர்!
தரமுயர்ந்த ரேடியோ வாங்குவீர்!

Shilpi-TR 39A/73 Tam

Prestige

PREETT

பத்து லட்சத்துக்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் உபயோகிப்பது, பிரஸ்டீஜ்—இந்தியாவில் அதிகம விற்பனையாகும் பிரஷர் குக்கர்

காரணம் என்ன?

அதிகக் கொள்ளளவு:

பிரஸ்டீஜ் மூடி வெளிப்புறம் பொருந்துவதால் அதிக உணவு சமைக்க நிறைய இடம் கிடைக்கிறது. உள் அடுக்குகள் பெரியவை. காரணம் பிரஸ்டீஜின் கொள்ளளவு வேறு வகை குக்கர்களை விட 1/3 பங்கு அதிகம்.

அதி வேகம்:

பிரஸ்டீஜில் உபயோகிக்கப்படும் சிறப்பான அலுமினியக் கலப்பு உலோகம், சீராகவும் விரைவாகவும் சூடு பரவ உதவுகிறது. அதனால் நேரமும் எரிபொருளும் மிச்சம்.


அதிக பாதுகாப்பானது:

மூடுவதற்கு இரட்டிப்பு வசதியுள்ள மூடி. மூன்று கட்டங்களில் அமைந்துள்ள பிடியுடன் கூடிய ரப்பர் பாதுகாப்பு அடைப்பான், குக்கரை பாதுகாப்பானதாகச் செய்கிறது.

பிரஸ்டீஜ் 6 அளவுகளில் கிடைக்கிறது. வாழ்நாள் முழுவதும் உழைப்பதற்கு உறுதியளிக்கிறது.

உங்கள் பிரஸ்டீஜ்குக்கர் அதி நுட்பமானது. சிறந்த பயிற்சி பெற்ற பழுதுபார்ப்போர் தான் அதை சீராக்க முடியும். விற்பனைக்குப் பிறகும் உங்கள் பிரஸ்டீஜுக்கு விரைவாகவும் தரமாகவும் சீர்பணி புரிய, நாடெங்கும் 200க்கும் அதிகமான ஸர்வீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. உத்தரவாதமுள்ள 'ஸ்பேர்' பகுதிகளை பிரஸ்டீஜ்/பீரீத் பணி நிலையங்களிலிருந்தும், பிரபல விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே வாங்குங்கள்.






Prestige

PREETT

டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 560016

SAA/TTP/1008A



காமாக்ஷியின் கருணை

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

எந்த வர்ணமும் இல்லாத ஒளியிலிருந்து ஒளிச் சிதறல் (Refraction) மூலம் ஒரு வர்ணத்தைப் பிரித்தால், உடனே மற்ற ஆறு வர்ணங்களும் கூடப் பிரிந்து வெளிப்படத் தொடங்குகின்றன. இது ஒரு வேடிக்கை: எல்லா வர்ணங்களும் சேர்ந்தால் வர்ணமே இல்லாமற் போகிறது; அந்த வர்ணமில்லாத ஒளியிலிருந்து ஒன்று குறைந்து பிரிந்தாலும், மற்ற வர்ணங்களும், 'நானும் போகிறேன், நானும் போகிறேன்' என்று பிரிந்து வெளிப்படுகின்றன.

பிரம்மம் என்பது வர்ணம் இல்லாத சுத்த ஒளி மாதிரி. அதில் காரியமே இல்லை. ஆனாலும் சகல காரியங்களுக்கும் ஆதாரமான சகல சக்திகளும் அதில்தான் உள்ளன—எல்லா வர்ணங்களும் சுத்த ஒளிக்குள் இருக்கிற மாதிரி. காரியம் இல்லாத பிரம்மம் தன்னைத் தானே உணர்ந்து கொண்டதுதான் அதன் முதல் காரியம். இதுவே சாந்தமான பிரம்மத்தில் ஒரு சலனம்தான் — ஒளிச் சிதறல் மாதிரி. இந்த ஒளிச் சிதறலில் முதலில் **சிவப்பு பிரிகிறது. பிரம்மம் அம்பாளாகிறது.** காரியமற்ற பிரம்மம், காரிய மயமான சக்தியாகிறது. காமேசுவரி தோன்றுகிறாள். பிரம்மத்துக்குத் தன்னை அறிகிற ஆசை தோன்றியதல்லவா? இந்த ஆசையின் — காமத்தின்— வடிவமே காமேசுவரி. அவளே உலகத்தின் சிருஷ்டி, பரிபாலனம், சம்ஹாரம் எல்லாவற்றுக்கும் மூலம். உண்மையில் இந்த மூன்று தொழில்களும் மாயையில் உண்டானவை தான். மாயா சக்தியால் பிரம்மத்தை மறைத்து அதனிடத்தில் உலகம் என்ற கற்பனையைக் காட்டுகிறாள். இதை நாலாவது தொழிலாக, திரோதனம் அல்லது திரோபவம் என்று சொல்லுவார்கள். படைத்தல்— காத்தல் — அழித்தல் — மறைத்தல் இவற்றுக்கு மேலாக அநுக்கிரகம் (அருள்) என்கிற ஐந்தாவது தொழிலும் இருக்கிறது. பக்தர்களை மாயையிலிருந்து விடுவித்துத் தன்மயமாக்கிக்கொள்ளுகிறாளே, அதுதான் அநுக்கிரகம். இப்படி ஐந்தொழிலைச் செய்வதால் அம்பாள் 'பஞ்ச கிருத்ய பராயணா' எனப்படுகிறாள்.

சிருஷ்டி செய்கிற பிரம்மா, பரிபாலிக்கிற விஷ்ணு, சம்ஹார ருத்ரன், மாயையின் அதிபதியான ஈசுவரன் இவர்களை நாலு கால்களாகக் கொண்ட மஞ்சத்தில் சாக்ஷாத் பரப்பிரம்ம சக்தியான காமேசுவரி காமேசுவரனின் இடப்புறத்தில் அநுக்கிரக மூர்த்தியாக அமர்ந்திருக்கிறாள். காமேசுவரன் பிரம்மம்; காமேசுவரி பிரம்மசக்தி. இவர்கள் சதிபதிகள்.

காமேசுவர — காமேசுவரி என்கிற சிவப்பு பிரிந்தவுடன் செம்மஞ்சளான பிரம்மாவும் லக்ஷ்மியும் பிரிந்து வெளிப்பட்டார்கள். நீலமான மகாவிஷ்ணுவும் பார்வதியும் ஆவிர்ப்பவித்தார்கள். வெள்ளையான ருத்திரனும் சரஸ்வதியும் தோன்றி விட்டார்கள். பிரம்ம சக்தியிலிருந்து இரட்டையாகத் தோன்றிய இவர்கள் சகோதரர்கள். பிரம்மனுக்கும் லக்ஷ்மிக்கும் தங்க நிறம்; தாமரை ஆசனம். பிரம்மா ஜீவராசிகளைப் பெருக்கிறார்; லக்ஷ்மி ஐசுவரியத்தைப் பெருக்கிறாள். நீலமேக சியாமள வர்ணம் கொண்ட விஷ்ணுவும் பார்வதியும் இப்படியே உடன் பிறந்தவர்கள். பரிபாலனமும் மாயா விலாசமும் முக்கியமாக இருக்கிற ஒரு நிலை அது. சிவன் கோவில் வடக்குப் பிராகாரத்தில் உள்ள துர்க்கையைப் பாருங்கள். அவள் விஷ்ணு மாதிரியே சங்கு சக்கரம் வைத்துக்கொண்டிருப்பாள். நாராயணி, சியாம கிருஷ்ண சகோதரி என்றெல்லாம் இதனால் தான் பார்வதியைச் சொல்வது. சிவனும் சரஸ்வதியும் சகோதரர்கள். சிவன்கோவில் தெற்குப்பிராகாரத்தில் பார்வதியின் கலப்பில்லாமல் தனித்து ஸ்வச்சமாக இருக்கிற தக்ஷிணாமூர்த்தியைப் பார்த்தால் இது தெரியும். சரஸ்வதி மாதிரியே அவர் புஸ்தகமும் ஜபமாலையும் வைத்திருப்பார். இருவரும் ஞான மூர்த்திகள். இருவரும் வெளுப்பு.

பிரம்ம சக்தியிலிருந்து மூன்று ஜோடிகள் தோன்றியதற்குக் காரணம் உண்டு. இவர்களுக்குள் ஒவ்வோர் ஆணும் ஒரு பெண்ணை **மணந்தாக வேண்டும்.** இரண்டே ஜோடியிருந்தால் பெண் கொடுத்துப் பெண் வாங்கினதாகும். அது யுக்தமில்லை. அதனால்தான் மூன்று சகோதர ஜோடிகள் பராசக்தியிடம் பிறந்தன. பிரம்மா சிவனின் சகோதரியான சரஸ்வதியை மணந்தார். சிவன் மகாவிஷ்ணுவின் சகோதரியான பார்வதியை மணந்தார். மகாவிஷ்ணு பிரம்மாவின் சகோதரியான லக்ஷ்மியை மணந்தார். வெள்ளை என்பது சத்துவ குணம்; செம்மஞ்சள் ரஜோ குணம்; நீலம் தமோ குணம் என்பார்கள். பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்களை இப்படி அடியோடு தனித் தனியாக்கி முக்குணங்களாகப் பிரித்துவிடாமல் சமரசத்தைக் காக்கவே அவர்களுடைய சக்திகளான சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி ஆகியோர் அவர்களது குணங்களுக்கு மாறுபட்ட ரூபமாக இருக்கிறார்கள்.

பராசக்தியேதான் இத்தனையும். இருந்தாலும் அவளை 'மாயை, மாயை' என்று திரோதானத்தோடு ரொம்பவும் இணைத்துப் பேசுகிறோம். ஆனால் மூக கவியோ சம்ஹார ருத்ரனின் சக்தியான பார்வதியின் கருநீல நிறத்தைச் சிவப்புப் பராசக்தியின் வர்ணமாகச் சொல்கிறார். சியாமள வர்ணம் கொண்ட பார்வதியைச் சக்தியாகப் பெற்றே வெள்ளைச் சிவன் சம்ஹாரத்தில் இறங்குகிறார். அம்பாளையே சம்ஹார மூர்த்தியாகச் சொல்கிறபோதும் அவளைக் காளி என்கிறோம். காளி என்றாலே கறுத்தவள் என்று அர்த்தம். அநுக்கிரக மூர்த்தியான காமாக்ஷியை ஏன் அழிக்கும் தொழில் செய்கிறவளாகச் சொன்னார்?

(இக்கட்டுரை அடுத்த இதழிலும் தொடரும்)

ஒளியிழந்த கண்கள்

தாதர் எக்ஸ்பிரஸ் புறப்படத் தயார் என்று உறுமிக் கொண்டிருந்தது. என் அத்யந்த நண்பர்கள் என்னை வழியனுப்பிக் கொண்டிருந்தார்கள். சென்டிரல் நிலைய, ஜன வெள்ளத்திலிருந்து பம்பாயை நோக்கி இந்தக் கிளை நதி புறப்பட்டது.

கைக் குலுக்கல்கள், அன்பு அணைப்புக்கள், குறும்புத்தனமாக. கிண்டல்கள் அளவுக்கு மீறிய பாராட்டுதல்கள் இவைகளைத் தாண்டிக் கதவைச் சாத்திக் கொண்டு வாசற்படியில் நான் ஒரு கணம் நின்றேன்.

ரயில் வேகமாக ஓட ஆரம்பித்தது. பேசின் பிரிட்ஜ், பெரம்பூர் லோகோ ஒர்க்ஸ், கொரட்டூர் தாண்டிய பிறகு ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட என் முதல் வகுப்பு அறைக்குள் நுழைந்தேன்.

என் படுக்கைக்கு எதிரே கண்ணியமான தோற்றம் நிறைந்த ஒருவர் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். அவர் யாரோ? நான் யாரோ? ஆனால் இன்னும் முப்பது மணி நேரம் — இரண்டு இரவுகள், ஒரு பகல் நான் அவருடன் ஒட்டி உறவாடியாக வேண்டும். ஒப்புக்காகவோ அல்லது உள்ளம் மறந்தோ அவருடன் நான் பேசி மகிழ்ந்தாக வேண்டும். பம்பாய் போய்ச் சேருவதற்குள் அவரைப் பற்றி எனக்கு, என்னைப் பற்றி அவருக்குத் தெரிந்து விடும். சகஜமாகப் பழகுவாரோ? சங்கோஜப் பிராணியோ?

அவர் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தார். நான் மெதுவாக என் இருக்கையில் வந்து உட்கார்ந்தேன்.

''உங்களுடன் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என் பெயர் தாமோதரன். நான் பம்பாய் வரையில் செல்லுகிறேன்'' என்று என் கைகளை அவர் இதமாகக் குலுக்கியபோது நான் அதிர்ச்சியடைந்தேன். அவருடைய இதமான அன்பு காரணம் அல்ல. அவரது அழகிய முகத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த அந்தத் தங்கப் பிரேமில் பச்சைக் கண்ணாடிக்குப் பின்னால், இரண்டு ஒளியிழந்த கண்கள் இருப்பதை அறிந்து நான் அதிர்ச்சி அடைந்தேன். ஆனாலும் நான் அதை அவரிடம் காட்டிக்கொள்ளவில்லை.

''என் பெயர் இராமன். உங்களைப் போலவே நானும் பம்பாய்க்குச் சென்று கொண்டிருக்கிறேன். உங்கள் பயணமும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் வெற்றியுடையதாகவும் இருக்கட்டும் என வாழ்த்துகிறேன்'' என்று அவர் கைகளைக் குலுக்கியபடியே சொன்னேன்.

''ஓர் உன்னதமான மனிதருடன் பயணம் செய்யும் வாய்ப்புக் கிட்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. நான் கண்களை இழந்தவன் என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அதை நீங்கள் எடுத்த எடுப்பிலேயே புரிந்து கொண்டிருப்பீர்கள். எல்லாவற்றையும் சொல்லித்தான் தெரிய வேண்டிய இரண்டாந்தர மனிதர் தாங்களல்ல என்பதை நானும் புரிந்து கொண்டேன். இருந்தாலும் என்னுடைய 'அந்தகத் தன்மையை' நான் அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

''நான் பிறவியிலேயே கண்களை இழந்தவன். ஆனால் அதற்காக நான் இப்போது வருத்தம் அடையவில்லை. சமூகத்திடம் இதற்காக அன்பையோ, வாஞ்சையையோ கூட நான் எதிர்பார்க்கவில்லை. என் அந்தகத் தன்மைக்காக யாருடைய பரிதாபத்தையும் எதிர்பார்க்கவில்லை.''

நான் ஓர் அசாதாரணமான மனிதரைச் சந்திக்கிறேன் என்பதை உணர்ந்து கொண்டேன். சாமான்ய மனிதர்களைக் கவர்ந்து இழுக்கும் சாகஸம் இவரிடம் செல்லாது என்பதை உணர்ந்து கொண்டேன். மௌனமாக இருந்தேன். அபூர்வமான சமயங்களில் மௌனம் சாதிப்பதிலுள்ள சுகம் அலாதியானது. உதடுகள் பேசாமல் இருந்தாலும் உள்ளம் எத்தனையோ கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது.

'' இப்போது நிலவி வருகிற இந்த மௌனத்தை நமக்குள்ளே இருக்கிற 'இடைவெளி'யாக நீங்கள் நினைக்கிறீர்களா?'' என்று அவர் கேட்டபோது, நான் எதையாவது பேசியாக வேண்டும் என்ற அவசியத்தை அவசரமாக உணர்ந்தேன்.

'' நமக்குள்ளே இடைவெளி இருப்பது உண்மைதான். ஆனால் அதற்கு நாம் இருவருமே பொறுப்பல்ல. நாம் வெவ்வேறு நிலையிலிருந்து ஒருவரையொருவர் அணுகுகிறோம். இந்த நிலைகளுக்கு நாம் வசிக்கும் சமூகமே காரணமாகும். ஏதாவது ஓர் அங்கத்தை இழந்து விட்டவர்களுக்குப் பரிதாபத்தின் காரணமாகச் சலுகைகளை அளிப்பது நான் சார்ந்த சமூகத்தின் பழக்கம். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளாமல், போட்டியில் கலந்து, வேறு சில திறமைகளால் உந்தப்பட்டு நியாயமானவற்றைப் பெற வேண்டும் என்று நீங்கள் நினைப்பது உங்கள் சமூகத்தில் ஏற்பட்டுள்ள புதிய விழிப்பு! இவற்றுக்குள்ள இடைவெளியைத்தான் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அதன் விளைவே நான் சாதித்த மௌனம்'' என்று விளக்கினேன். என் விளக்கம் அவர் முகத்தில் ஒரு புதிய ஒளியைப் பாய்ச்சியது.

பொதுவான விஷயங்களிலிருந்து தனிப்பட்ட விஷயங்களில் நாங்கள் இப்போது கவனம் செலுத்தினோம்!

''நீங்கள் பம்பாய் செல்வதின் நோக்கத்தை நான் அறிந்து கொள்ளலாமா? இந்தக் கேள்விக்கு ஏதும் உள் நோக்கம் கிடையாது. பொதுவான அக்கறையே இதன் நோக்கம்'' என்றார் தாமோதரன்.

எனக்கு ஏனோ அந்தக் கணம் ஒரு தயக்கம் ஏற்பட்டது. நான் பம்பாய் போகும்

நோக்கத்தைச் சொல்லாமல் தவிர்க்கவே என் மனம் விரும்பியது.

''எனது மைத்துனி பம்பாயில் இருக்கிறாள். அவளது அழைப்புக்கு இணங்கி என் மனைவியும் குழந்தைகளும் சென்றிருக்கிறார்கள். இரண்டொரு நாட்கள் தங்கிவிட்டு அவர்களை அழைத்துக் கொண்டு போக வேண்டும். வேறு ஒன்றுமில்லை'' என்றேன்.

''உண்மையைக்கூட யோசனை செய்து கூற வேண்டியிருக்கிறது'' என்றார் தாமோதரன் சிரித்துக் கொண்டே...

நான் பொய் சொல்கிறேன் என்பதைக் குத்திக் காட்டுகின்றாரா? ''உங்களது பயணத்தின் நோக்கத்தைத் தெரிந்து கொள்ளலாமா?'' என்றேன் நான்.

''உங்களைப் போல் ஓர் இனிய சுற்றுலாவுக்குச் செல்ல எனக்கு வாய்ப்பில்லை. ஒரு பேட்டிக்காக பம்பாய் செல்கிறேன். செயற்கை ரப்பர் செய்யும் ஓர் அகில இந்திய நிறுவனத்தின் திருவனந்தபுரக் கிளை மானேஜராகப் பணியாற்றுகிறேன். எங்கள் நிறுவனத்தின் வியாபாரத்தைத் தென்னிந்தியாவில் பெருக்கச் சென்னையில் ஒரு ரீஜனல் அலுவலகம் ஆரம்பிக்கிறார்கள். அதற்கு மானேஜர் பதவிக்கான பேட்டிக்கு நான் பம்பாய் செல்கிறேன்'' என்று அவர் சொன்னதும் ஏற்பட்ட அதிர்ச்சியை நான் தாங்கிக் கொண்டேன்.


நல்லவேளையாக அவருக்குக் கண்கள் இல்லை. இல்லையென்றால் வெளிறிப் போன என் முகத்தைக் கண்டால் கூரிய கேள்விகளால் என்னைத் துளைத்து எடுத்து விடுவார்.

என்னுடைய அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, ''அப்படியா? மிக்க மகிழ்ச்சி! தாங்கள் வெற்றியடைய நான் வாழ்த்துகிறேன்!'' என்று நான் நடிக்க வேண்டியதாயிற்று. ''பேட்டியில் உங்களுக்குப் போட்டியிருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''அநேகமாக இருக்கலாம். போட்டி நிறைந்த வாழ்க்கையை நான் விரும்புகிறேன். எதிர் நீச்சலிட்டு அடைகிற வெற்றியை நான் காதலிக்கிறேன். அநேகமாகச் சென்னைக் கிளையின் மானேஜரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கிறேன்'' என்றார்.

''உங்களுக்கு உங்கள் வெற்றியில் நம்பிக்கை இருக்கிறதா?''

''நம்பிக்கையில்தான் மனித இனமே வாழ்கிறது. அதிலும் குறிப்பாக எனக்கு 'நம்





பிக்கை' உணவை விட முக்கியமானது. என் வாழ்க்கையே நம்பிக்கையால் தீட்டப்பட்ட ஓவியம்தான். நாம் கடப்பை ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இன்னும் ஒருநாள் நாம் இந்த ரயிலில் இருக்கப் போகிறோம். நீங்கள் விரும்பினால் என் வாழ்க்கையின் சில போக்குகளை நான் சொல்ல விரும்புகிறேன். தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வதில் எவருக்குமே விருப்பம் இருக்கும். இதற்கு நானும் விதிவிலக்கல்ல'' என்றார் தாமோதரன்.

''நாளை பேசுவோம் சாவகாசமாக'' என்று சொல்லிவிட்டு நான் படுக்கையில் சாய்ந்து விட்டேன்.

தாமோதரன் தமது இரவு உடையை அணிந்து கொண்டு ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்திவிட்டுப் படுத்தார்.

பெட்டியில் வீசிக் கொண்டிருக்கிற நீல நிற மங்கிய ஒளியில், என் கண்கள் மூட மறுத்தன.

பொய் சொன்னது நல்லதாய்ப் போய் விட்டது. இல்லையென்றால் அசட்டுத்தன மாகப் போயிருக்கும். திரும்பிப் பார்த்தேன். தாமோதரன் நிம்மதியாகச் சலனமின்றி உறங்கிக் கொண்டிருந்தார்!

பாவம்! நடக்கப் போகிற இந்தப் பெட்டியே கண் துடைப்பு என்பது தெரியாமல், கண்கள் இல்லாத இந்த மனிதர் இவ்வளவு தூரம் வந்து கலந்து கொள்கிறாரே என்று அவருக்காகப் பரிதாபப் பட்டேன். எனக்குள்ள செல்வாக்கை இவர் அறிவாரா? அகில இந்திய தொழிலாளர்கள் சங்கத்தில் எனக்குள்ள செல்வாக்கை அறிவாரா? சென்ற மாதம் சேர்மன் சென்னை விஜயத்தின்போது சென்னைக் கிளையைப் பற்றி மிக உயர்வாகச் சொல்லி, என் திறமையை அவர்கள் விரைவில் பயன்படுத்திக் கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டதைத் தாமோதரன் அறிவாரா?

பாவம் ! நிம்மதியாகத் தூங்கட்டும் ! வெளிச்சமில்லாமல் இருட்டில் நம்பிக்கையை மட்டும் சுவாசித்துக் கொண்டு வாழ்கிற இந்த மனிதருக்கு இனி வருகிற இரவுகள் இன்னும் இருள் நிறைந்ததாக இருக்கப் போகிறது!

எண்ணங்கள் அதிகமாக அதிகமாக, இதயம் இலேசாகிறது. கண்கள் இலேசாக மயங்கின. நானும் அசந்து தூங்க ஆரம்பித்து விட்டேன்.


தாமோதரன் புத்துணர்ச்சியுடன், மிடுக்கான ஆடை அணிந்து பத்திரிகையின் காலைச் செய்திகளை என்னைப் படிக்கச் சொல்லிக் கேட்டார். எனக்குத் தாமோதரனின் 'என் மீது யாரும் இரக்கம் கொள்ள வேண்டாம்' என்கிற கம்பீரம் புதுமையாக இருந்தது. குருட்டுப் பிச்சைக்காரர்களைத்தான் நான் அதிகம் பார்த்திருக்கிறேன்.

''பிறவியிலேயே விழிகளை இழந்தேன். சாதாரணக் குடும்பத்திலே பிறந்தேன். என்னுடைய தாயும் தந்தையும் எனக்கு இரண்டே இரண்டு சொத்துக்களைத் தந்தார்கள். என் தாயிடம் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளக் கற்றுக்கொண்டேன். என் தந்தையிடம் கடுமையாக உழைக்கக் கற்றுக்கொண்டேன். பிரார்த்தனை, கடும் உழைப்பு இவைகளே என்னை உயர்த்தின.

''பிரெயிலி எழுத்துக்கள் — லண்டனில் உயர்நிலைக் கல்வி, பெரியோர்களின் ஆசி



மணமும், சுவையும் சொல்கிறதே!
இது நரசுஸ் காபி என்று!
நினைவிருக்கட்டும்!
"தெர்மலோ" முறையில் தயாரிக்கப்படும்
ஒரே காபி - நரசுஸ் காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-7
கிளைகள்: பாண்டிச்சேரி, தமிழகமெங்கும்.


பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
மோஸ்தர்கள்
நாகரீகமான பிரிண்டுகள்... மதிமயக்கும் நெசவுநயம்...
விரும்பித் தேர்ந்தெடுக்க விதவிதம்.
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி.
ஸெண்சுரி - 100% பருத்தித் துணிகள்
தி சென்சுரி ஸ்பின். அண்டு. மான்யு. கம். லிமிடெட்., பம்பாய்-400 025
ADROIT/CM/534 P/TAM

இவையெல்லாம் எனக்கு ஒரு சிறப்பான பதவியைத் தேடித் தந்தன.

''பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது எனக்குப் பள்ளி மாணவர் தலைவனாகும் ஆசையே ஏற்பட்டது. அதற்கும் போட்டியிட்டேன். தகுதிக்கு மீறிய ஆசை என்று என்னை எதிர்த்து நின்ற மாணவர்கள் பிரசாரம் செய்து கொண்டேயிருந்தார்கள். இதுவே பரபரப்புக்குக் காரணமாயிற்று. நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். மாணவத் தலைவனாகிப் பல மோதல்களைத் தவிர்த்தேன். 'மாக்' பார்லிமெண்ட் கூட நடத்தினேன். நானே பிரதம மந்திரியாக இருந்தேன். அடேயப்பா! அந்த நாட்கள் எவ்வளவு இனிமையாக இருந்தன! இந்த மானேஜர் பதவியைக் கூடக் கடுமையான போட்டியில் தான் அடைந்தேன். நான் சோதனைகள் பல கடந்திருக்கிறேன். ஆனால் தோல்வியை இதுவரையில் அடைந்ததேயில்லை'' என்றெல்லாம் விளக்கிக் கொண்டே போனார் தாமோதரன்.

''தோல்விகளில் மனிதன் வீழ்ச்சி அடைந்து விடுவதாக நினைக்கிறீர்களா ?''

''ஆரம்பத் தோல்விகளில் பலர் கவிழ்ந்து போயிருக்கிறார்கள். நல்லவேளையாக நான் தோல்விகளைச் சந்திக்கவில்லை. ஒருவேளை தோல்விகள் ஆரம்பத்தில் தொடர்ந்திருக்குமானால் நான்கூட நொந்து போயிருப்பேன்'' என்றார் அவர்.

மதிய உணவுக்குப் பிறகு அவர் அமைதியாக உறங்கினார். ஆனால் என் மனமோ விழித்துக்கொண்டேயிருந்தது. தாதரை ரயில் வந்தடைந்தது. அத்தனை சந்தடியிலும் என் மனம் தெளிவாக இருந்தது. தாமோதரன் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

''மிஸ்டர் இராமன்! இந்த உலகம் என்னைப் பொறுத்த வரையில் மிகச் சிறியது. மீண்டும் உங்களைச் சந்திப்பேன்'' என்ற உறுதியான கைகுலுக்கலுடன் என்னிடம் விடை பெற்றுக் கொண்டார் அவர்.

தயக்கமில்லாத நடை! உறுதியான மனம்! தளராத முயற்சி! இவற்றுக்கெல்லாம் இலக்கியமாகத் திகழ்ந்த தாமோதரன் என் இதயத்தில் நிறைந்து விட்டு என் பார்வையிலிருந்து மறைந்து விட்டார்.

பம்பாயில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுச் சென்னைக்குப் புறப்பட்ட நான் தாதரில் தாமோதரனை மீண்டும் சந்தித்தபோது இரண்டாம் முறையாக அதிர்ச்சியடைந்தேன்.

தங்கும் அறையில் இருந்த அவரைப் பார்த்துவிட்டு, பார்க்காததுபோல் தாண்டிச் செல்ல முடியவில்லை.

''ஹலோ ! எப்படி இருக்கிறீர்கள் தாமோதரன்!'' என்று நான் அவர் கைகளைக் குலுக்கியபோது உட்கார்ந்திருந்த தாமோதரன் மகிழ்ச்சியால் விரைந்து எழுந்தார்.

''ஹலோ! மிஸ்டர் இராமன்! உங்களைப் போட்டியில் சந்திப்பதற்குத் துடித்துக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள்!''

''போட்டியில் நான் கலந்து கொள்வதா? மிஸ்டர் தாமோதரன்! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''



மானேஜர்: நீ நிறைய மார்க்குகள் வாங்கியிருக்கிறாய். பார்க்க வாட்டசாட்டமாக இருக்கிறாய்; 'இன்டர்வ்யூ'விலும் நன்றாகச் செய்தாய். இருந்தாலும் உன்னை நாங்கள் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கில்லை; காரணம் எங்கள் கம்ப்யூட்டருக்கு உன்னைப் பிடிக்கவில்லை !

-- கோட்டா மோகன்

''நீங்கள் மைத்துனி வீட்டுக்குச் செல்வதாக ரயிலில் பொய் சொன்னாலும் இந்தப் போட்டியில் என்னோடு போட்டியிட வரும் இன்னொருவர் நீங்கள் என்பது எனக்குத் தெரியும். சென்டிரல் ரயில் நிலையத்தில் உங்களை வழியனுப்ப வந்தவர்கள் இந்தப் போட்டியின் முடிவாக உங்களுக்குப் பதவி நிச்சயம் கிடைக்கப் போகிறது. அதைக் கொண்டாடும் முறையில் பாராட்டு விருந்துக்குக்கூடத் தேதி குறித்து விட்டோம் என்று பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். இந்தப் போட்டியில் நாம் இருவரும் கலந்து கொண்டு அதன் மூலம் நான் வெற்றி பெற்றிருந்தால் நான் மிகவும் பெருமையடைந்திருப்பேன். என்மீது பரிதாபப்பட்டுத்தானே இந்தப் போட்டியிலிருந்து விலகிக் கொண்டீர்கள்?'' தாமோதரனின் இந்தக் கேள்வி என்னை நன்றாகத் தாக்கி விட்டது.


''இந்தப் பதவிப் போட்டியால் வெற்றி என்னை உயர்த்துவதை விட உங்களைப் போன்றவர்களை மேலும் உயர்த்துவதே இந்தச் சமுதாயத்தின் உயர்வுக்கும் ஏன், இந்த நாட்டின் உயர்வுக்கும் நல்லதோர் அடையாளமாக இருக்கும். உங்கள் தகுதி, திறமை, மன எழுச்சி எல்லாம் கண்ட பிறகு தான் இந்தப் பதவிக்கு நீங்கள் பொருத்தமானவர் என்று தீர்மானித்து நான் போட்டியிலிருந்து விலகிக் கொண்டேன்.


''இப்பதவிக்குத் தகுதியானவர் நீங்கள் என்பதைச் சொல்ல, போட்டியை நடத்தும் சேர்மனுக்கு மட்டுமல்ல, போட்டியில் கலந்து கொள்ளும் தகுதி படைத்த எனக்குமுண்டு; தாங்கள் தகுதியானவர் என்று அவர்கள் முடிவு செய்வதற்கு முன்பே நான் முடிவு செய்து விட்டேன்!

''உங்களைப் போன்றவர்களின் வெற்றி எத்தனையோ இடிந்து போன இதயங்களுக்கு எழுச்சியை ஊட்டும் அரிய வெற்றியாகும். இந்த வெற்றியில் எனக்கும் பங்குண்டு. இதை நான் சொல்லிப் பெருமையடைகிறேன்.''

'என் விளக்கங்களைக் கேட்ட அந்த ஒளியிழந்த கண்களில் நீர் வழிந்து கொண்டேயிருந்தது. அவ்வாறு கசிந்த நீரில் இரு உன்னதமான இதயங்கள் சந்தித்துக் கொண்டன.

பாம்பே டையிங்
உங்கள் இல்லத்தில்
புராதனக் கலையழகினை
மீண்டும். மலரச்
செய்கிறது.





ஜன்னல்கள் பண்டைய
கலையோவியங்களில் புத்துயிர்
பெறுகின்றன. உள்ளத்தைக்
கொள்ளை கொள்ளும் நேர்த்தியான'
அஜந்தா பிரின்டுகள். புத்தழகுக்கலை-
மிளிரும் ரம்யமான மதுபனி
சித்திரங்கள். சரித்திரச் சிறப்பை
நினைவுகூறும் வர்ணமயமான
ராஜபுத்திரக் கலையழகுகள்.
தென்னிந்திய ஆலயங்களின்
எழிலோவியங்கள்—ஆம், 'கணகண'
வென்னும் மணியோசையை
நினைவு கூறுபவை.

கண்கவர்
ஃபர்னிஷிங்குகளுக்கு

பாம்பே
டையிங்



BD.6518 (A)

சிவகாமியின் சபதம்

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்


ஓலைத் திருட்டு

வஜ்ரபாஹு சாவதானமான குரலில், "தம்பி! பொறு! வேலைக் கைப்பற்றுவதற்குப் பதிலாகப் பொறுமையைக் கைப்பற்று. நாங்கள் பேய் பிசாசு இல்லை. 'பிசாசு சொப்பனம் கண்டீரா?' என்று என்னைப் பரிகாசம் செய்தாயே? நீ பிசாசு சொப்பனம் கண்டு அலறிய அலறலில் இந்த விடுதியிலுள்ள எல்லாரும் அல்லவா எழுந்திருக்க வேண்டியதாயிற்று?" என்றான்.

பரஞ்சோதி தான் அத்தகைய கனவு கண்டது உண்மை என்ற எண்ணத்தினால் வெட்கமடைந்து ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தான். பிறகு, "பொழுது விடிந்து விட்டதா? புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டு எழுந்தான்.

"அழகுதான்! இப்போது அர்த்த ராத்திரி. விடுதியில் பத்திரமாய்ப் படுத்திருக்கும் போதே இப்படிப் பயந்து உளறுகிறவன், நடு நிசியில் தனி வழியே எப்படிப் போவாய்? அப்படிப் போவதாயிருந்தால், 'அம்மா!' 'அம்மா!' என்று கனவிலே அலறினாயே, அந்தப் புண்ணியவதி எங்கே இருக்கிறாள் என்றாவது சொல்லிவிட்டுப் போ! பிள்ளையின் கதியைப் பற்றி அன்னைக்குச் செய்தியாவது சொல்லி அனுப்புகிறோம்" என்றான் வஜ்ரபாஹு.

அமரர் கல்கி



இந்த வார்த்தைகள் எல்லாம் கூரிய முட்களைப் போல் பரஞ்சோதியின் உள்ளத்தில் 'கரீல் கரீல்' என்று தைத்தன.


''நீங்கள் நேற்றுச் சாயங்காலம் பயங்கரமான கதைகளைச் சொன்னீர்கள் அல்லவா ? அதனால்தான் சொப்பனம் காணும்படி ஆயிற்று'' என்று பரஞ்சோதி சமாதானம் சொன்னான்.

''போகட்டும் ! இனிமேலாவது சற்று நேரம் நிம்மதியாய்த் தூங்கு. இந்தத் தீபம் இங்கேயே இருக்கட்டும்'' என்றான் வஜ்ரபாஹு என்னும் வீரன்.

அவ்விதமே தீபத்தை வைத்துவிட்டு வஜ்ரபாஹுவும் விடுதித் தலைவனும் அங்கிருந்து சென்றார்கள்.

அவர்கள் போன பிறகு பரஞ்சோதி கண்களை மூடிக் கொண்டு தூங்கப் பார்த்தான். ஆனால், தூக்கம் வரவே இல்லை. புரண்டு புரண்டு படுத்தான். எழுந்து உட்கார்ந்தான். மறுபடியும் படுத்தான். அப்படியும் தூக்கம் வரவில்லை. அவர்கள் வைத்துவிட்டுப் போன தீபம் ஒரு பக்கம் அவனுடைய கண்களைக் கூசச் செய்தது. விளக்கை அணைத்துவிடலாமா என்று ஒரு கணம் நினைத்தான். உடனே, வேறு ஒரு நினைவு பளிச்சென்று தோன்றியது. எழுந்து உட்கார்ந்து தலைமாட்டில் துணியைச் சுற்றி வைத்திருந்த ஓலையைப் பிரித்து வைத்துக் கொண்டு உற்றுப் பார்த்தான். எழுந்து தீபத்தினடிக்குச் சென்று படிக்க முயன்றான். ஆகா! என்ன ஏமாற்றம்! அதில் ஏதோ எழுதியிருந்தது; ஆனால், என்ன எழுதி யிருந்தது? அதுதான் தெரியவில்லை. ஆகா! கல்வி ஒருவனுக்கு எவ்வளவு அவசியமானது? தாய் பாஷை ஒன்றுமட்டும் தெரிந்திருந்தால் கூடப் போதாது. ஒரு தேசத்தில் வழங்கும் மற்றப் பாஷைகளும் தெரிந்திருக்க வேண்டும். இத்தனை காலமாகக் கல்வி பயிலாமல் — தமிழைக்கூட நன்றாய்ப் பயிலாமல் — காலம் கழித்து விட்டதை நினைத்துப் பரஞ்சோதி அப்போது வருத்தப் பட்டான்.

'இத்தனை காலங் கழித்துக் காஞ்சிக்குக் கல்வி பயில்வதற்காகக் கிளம்பி வந்தோமே? அதாவது நடந்ததா? நாம் வந்த சமயத்தில் தானா இந்த யுத்தக் குழப்பங்கள் எல்லாம் வர வேண்டும் ? இந்த ஆபத்தான காரியம் நம் தலையிலேயா கமையாக இறங்க வேண்டும்?' — இப்படி எண்ணமிட்டுக் கொண்டேயிருந்தபோது பரஞ்சோதிக்குத் தூக்கம் வருகிறாற்போல் இருந்தது. கண்ணிமைகள் கனத்துத் தாமாகவே மூடிக் கொள்ளப் பார்த்தன. தீபத்தடியிலிருந்து எழுந்து ஏற்கனவே படுத்திருந்த மேடைக்குப் போகப் பிரஞ்சோதி எண்ணினான். ஆனால், அந்த எண்ணத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. தூக்க மயக்கம் அவனை மீறி மேலோங்கிற்று. அப்படியே தரையில் படுத்தான். சிறிது நேரத்தில் நினைவற்ற நிலையை அடைந்தான். அவன் கையிலிருந்து நழுவிய ஓலை தரையிலே கிடந்தது.



சற்றுப் பொறுத்து அறைக் கதவு மெதுவாகத் திறந்தது. வஜ்ரபாஹு ஓசைப்படாமல் உள்ளே வந்தான். தரையில் கிடந்த ஓலைச் சுருளை எடுத்துக் கொண்டு அறையின் கதவை மீண்டும் சாத்திவிட்டு வெளியேறினான்.

வெளியேறிய வஜ்ரபாஹு இரண்டு மூன்று அறைகளைக் கடந்து சென்று விடுதியின் ஒரு மூலையில் இருந்த பெரிய அறைக்குள் புகுந்தான். அங்கே குத்துவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதன் அருகில் உட்கார்ந்து பரஞ்சோதியிடமிருந்து அபகரித்துக் கொண்டு வந்திருந்த ஓலையைக் கவனமாகப் படிக்கலானான்.

முதலில் சற்று நேரம் அவன் முதல் ஏட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய புருவங்கள் நெரிந்தன; நெற்றி சுருங்கியது. சில சமயம் மேலே நிமிர்ந்து கூரையை நோக்கியவண்ணம் யோசித்தான். சில சமயம் கையை நெரித்துக் கொண்டு பூமியை நோக்கிய வண்ணம் சிந்தித்தான். சற்று



நேரம் தீபத்தை உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். கடைசியாக, அவனுடைய முகம் பளிச்சென்று மலர்ந்தது. உடனே, விரைவாகவும், உற்சாகத்துடனும் அந்த ஓலைக்கட்டிலிருந்த நாலு ஏடுகளையும் படித்து முடித்தான்.

பிறகு, பக்கத்தில் வைத்திருந்த வெற்று ஓலையில் நாலு எடுத்து அதே அளவில் கத்திரித்து வைத்துக் கொண்டு எழுதத் தொடங்கினான். துரிதமாக எழுதி முடித்துப் பரஞ்சோதி கொண்டு வந்திருந்த ஓலையையும் இதையும் ஒப்பிட்டு நோக்கினான். பரஞ்சோதியின் ஓலையை அவ்விடமே பத்திரப்படுத்தி வைத்துவிட்டுத் தான் எழுதிய ஓலையுடனே பரஞ்சோதியின் அறையை நோக்கிச் சென்றான். அங்கே பரஞ்சோதி இன்னும் தீபத்துக்குப் பக்கத்தில்



மயங்கிக் கிடப்பதையும், தீபம் அணையும் தறுவாயில் இருப்பதையும் பார்த்தான். அறையில் அப்போது இலேசான புகை — ஒருவித அபூர்வ மணம் கமழ்ந்து கொண்டிருந்த புகை — சூழ்ந்தது. மூக்கைத் துணியினால் மூடிக் கொண்டு வஜ்ரபாஹு அவ்வறைக்குள் நுழைந்தான். ஓலை முன்னே கிடந்த இடத்திலேயே தான் கொண்டு வந்த ஓலையைப் போட்டுவிட்டுத் தீபத்தில் பற்றி எரிந்து கொண்டிருந்த திரியை உள்ளுக்கு இழுத்து எண்ணெயில் நனைத்து அணைத்தான். இவ்வளவும் அதிசீக்கிரமாகச் செய்துவிட்டு மறு கணமே அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

மீண்டும் தன்னுடைய அறைக்குச் சென்ற வஜ்ரபாஹு பரஞ்சோதியிடமிருந்து தான் அபகரித்த ஓலையை இன்னொரு தடவை நன்றாகப் படித்துப் பார்த்துவிட்டு, அதை ஏடு ஏடாக எடுத்து, விளக்கின் ஜுவாலையில் காட்டித் தகனம் செய்தான். அப்படித் தகனம் செய்து கொண்டிருந்த போது அவனுடைய உள்ளம் தீவிரமாகச் சிந்தனை செய்து கொண்டிருந்தது என்பதை அவனுடைய முகக் குறி காட்டியது.

நாலு ஏடுகளையும் எரித்துச் சாம்பலாக்கிய பிறகு, இன்னும் நாலு வெற்று ஏடுகளை எடுத்து எழுத்தாணியினால் எழுதத் தொடங்கினான். முன்போல் இம்முறை அவன் வேகமாகவும் இடைவிடாமலும் எழுதவில்லை. இடையில் நிறுத்தி நிறுத்தி யோசித்து யோசித்து எழுதினான். அவன் எழுதி முடித்து ஓலை ஏடுகளைக் குழாயில் போட்டபோது, பலபலவென்று கிழக்கு வெளுத்தது. உச்சி வானத்துக்குச் சற்று மேற்கே காணப்பட்ட பாதி மதி பிரகாசத்தை இழந்து பாண்டு வர்ணம் அடைந்து கொண்டிருந்தது. விண் மீன்களும் ஒளி குன்றத் தொடங்கின. பட்சிகளின் தனிக் குரல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கேட்கலாயின.

பரஞ்சோதி கண் விழித்துப் பார்த்த போது, அறைக்குள்ளே பலகணி வழியாக உதய நேரத்தின் இளம் வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. அருகில் தரையில் கிடந்த ஓலையை அவன் ஆர்வத்துடன் தாவி எடுத்துக் கொண்டு அதை உடனே குழாயில் போட்டு இடுப்பிலும் செருகிக் கொண்டான். முதல் நாள் இரவில் அவன் பயங்கரக் கனவு கண்டது, வஜ்ரபாஹுவும் விடுதித் தலைவனும் வந்து விளக்கு வைத்து விட்டுப் போனது, தூக்கம் பிடியாமல் விளக்கண்டை வந்து ஓலையைப் படிக்கத் தொடங்கியது, கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்தது — ஆகிய எல்லாம் அவனுடைய நினைவுக்கு வந்தன. இன்னமும் அவன் தலை இலேசாகச் சுற்றிக் கொண்டிருந்தது. வயிற்றிலும் கொஞ்சம் சங்கடம் இருந்தது.

ஏதோ ஓர் அபூர்வமான வாசனை அவ்வறையில் சூழ்ந்திருப்பதையும் அவன் உணர்ந்தான். ஆனால், இதிலெல்லாம் அவனுடைய கவனம் அதிக நேரம் நிற்கவில்லை. 'ஓலையைத் தரையில் போட்டுவிட்டு இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே, என்ன அசட்டுத் தனம்!' என்கிற எண்ணத்தினால் ஏற்பட்ட வெட்கம் மற்ற நினைவுகளையெல்லாம் போக்கடித்தது. அதே சமயத்தில் குதிரையின் காலடிச் சத்தம்

காதில் விழவே, விழுந்தடித்து எழுந்திருந்து வாசற்புறம் சென்றான். அங்கே விடுதித் தலைவனும் காவலர்களும் நின்று சற்றுத் தூரத்தில் போய்க் கொண்டிருந்த குதிரையைப் பார்த்த வண்ணம் இருப்பதைக் கண்டான்.

"ஓஹோ! வஜ்ரபாஹுவா போகிறார்? அதற்குள்ளே புறப்பட்டுவிட்டாரா?" என்று பரஞ்சோதி வினவியதைக் கேட்டு அவர்கள் அவன் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

குதிரை கண்ணுக்கு மறைந்த பிறகு, "ஐயா! வஜ்ரபாஹு என்கிறவர் யார்? உங்களுக்குத் தெரியுமா?" என்று பரஞ்சோதி காவலர்களைப் பார்த்துக் கேட்டான்.

"உன்னைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றல்லவா நினைத்திருந்தோம்?" என்று காவலர்களில் ஒருவன் கூறினான்.

"இன்னாரென்று தெரியாமலா நேற்றிரவு அவருக்கு அவ்வளவு மரியாதை செய்தீர்கள்?"

"காரணமில்லாமல் மரியாதை செய்யவில்லை. அவரிடம் சிங்க முத்திரை போட்ட இலச்சினை இருந்ததே; உனக்குத் தெரியாதா?"

"சிங்க இலச்சினையென்றால் அதில் என்ன விசேஷம்?"

"வெகு முக்கியமான இராஜாங்கக் காரியமாகப் போகிறவர்கள் சிங்க இலச்சினை வைத்திருப்பார்கள்."

காவலர்களில் ஒருவன், "அவர் யாராக இருக்கும்?" என்று மற்றவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"அமைச்சர்களில் ஒருவராயிருக்கலாம்" என்றான் ஒருவன்.

"சேனாபதி கலிப்பகையை நீக்கிவிட்டு வேறொரு சேனாபதியைச் சக்கரவர்த்தி அனுப்பப் போவதாகக் கேள்வி. புதிய சேனாபதியாக இருந்தாலும் இருக்கலாம்" என்றான் ஒருவன்.

"சேனாபதியை மாற்றுவதற்கு என்ன காரணம்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான் விடுதித் தலைவன்.

"வேறு காரணம் வேண்டுமா, என்ன? வாதாபி சைனியம் வடபெண்ணையை நெருங்கி விட்டதாகக் கேள்வி. அப்படியிருக்க, நம் சேனாபதி வடக்கு மண்டலத்துச் சைனியத்தை இருந்த இடத்திலேயே வைத்துக்கொண்டிருப்பது போதாதா?"

"சக்கரவர்த்தியிடம் யோசனை கேட்கச் சேனாபதி கலிப்பகை காஞ்சிக்கே போயிருக்கிறாராமே?"

"அதனால்தான் சக்கரவர்த்திக்குக் கோபமாம். 'நீர் சேனாபதி பதவி வகித்தது போதும்' என்று சொல்லிவிட்டாராம்."

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த பரஞ்சோதி, "ஐயா! என் குதிரை எங்கே? நானும் கிளம்ப வேண்டும்" என்றான்.

பரஞ்சோதியைப் பற்றி அவர்கள் இன்னும் சிறிது விசாரித்துவிட்டு, "நீ எங்கே போகிறாய்?" என்று கேட்டார்கள்.

"வடபெண்ணைக் கரையில் உள்ள பௌத்த மடத்துக்குப் போக வேண்டும். இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று பரஞ்சோதி வினவினான்.

அவர்கள் வஜ்ரபாஹு சென்ற திசையைக் காட்டி, "இந்த வழியே போனால் உச்சி வேளையில் வடபெண்ணைக் கரை



சேரலாம். அங்கிருந்து கரையோடு மேற்கே போக வேண்டும். போனால் பாபாக்கினி நதி வடபெண்ணையுடன் கலக்கும் இடத்தில் பௌத்த மடம் இருக்கிறது!" என்று கூறி அவனுடைய குதிரையையும் கொடுத்தார்கள்.

பரஞ்சோதி குதிரை மீதேறிக் கிளம்பியபோது, 'அடாடா! வஜ்ரபாஹுவும் இதே வழியில் போகிறவராயிருக்க, சற்று முன்னாலேயே எழுந்து அவருடனே கிளம்பாமல் போனேனே! அவருடன் போயிருந்தால் வழிப் பிரயாணம் எவ்வளவு உற்சாகமாக இருந்திருக்கும்? களைப்பே தெரியாமல் கதை கேட்டுக் கொண்டே ஆனந்தமாய்ப் பிரயாணம் செய்திருக்கலாமே?' என்று எண்ணமிட்டான்.

மடாலயம்

பரஞ்சோதிக்கு, முன் அத்தியாயங்களில் கூறிய ஆச்சரியமான அனுபவங்கள் சேர்ந்து கொண்டிருந்த அதே தினம் மாலை நேரத்தில், காஞ்சிமா நகரில் அவனைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. பல்லவ குலம் தழைக்க வந்த குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மரும், சைவம் தழைக்க வந்த திருநாவுக்கரசு சுவாமிகளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாமல்லபுரத்திலிருந்து திரும்பி வந்த அன்றிரவு மகேந்திர சக்கரவர்த்தி தம் செல்வப் புதல்வரை அழைத்துக் கொண்டு மாறு வேடத்துடன் கோட்டைக்கு வெளியே சென்றார். குதிரைகளை ஒரு மறைவான இடத்தில் நிறுத்தி



விட்டு மங்கலான நட்சத்திர வெளிச்சத்தில் மதிலைச் சூழ்ந்திருந்த அகழியின் கரையோரமாக அவர்கள் நடந்து சென்றார்கள்.

திடீரென்று அகழியில் படகு செலுத்தும் சத்தம் கேட்டு நரசிம்மர் அளவிறந்த வியப்புக்கு உள்ளானார். அவரைச் சத்தம் செய்ய வேண்டாம் என்று சமிக்ஞை காட்டினார் மகேந்திரர். இருவரும் அருகில் இருந்த புதரில் மறைந்து கொண்டார்கள்.

ஆம்; படகு ஒன்று அகழியில் சென்று கொண்டிருந்தது. அதை ஓட்டியவன் சத்தம் அதிகமாகக் கேளாதபடி சர்வ ஜாக்கிரதையாகத் துடுப்புக்களைப் போட்டுக் கொண்டிருந்தான். படகு அக்கரையில் அதாவது, மதில் ஓரத்தில் போய் நின்றது. அதிலிருந்து இருவர் இறங்கினார்கள். அந்தச் சிறு படகை அவ்விருவருமாக இழுத்துக் கரையேற்றினார்கள். மதிலின் பக்கத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ஒரு புதரின் மறைவில் அதைத் தள்ளினார்கள்.

மதிலண்டையில் சென்று அவர்கள் நின்றது ஒரு கணம்! அடுத்த கணத்தில் இருவரும் மாயமாய் மறைந்தார்கள். ஒரு பிரம்மாண்டமான சிலந்திப் பூச்சியானது தன் அருகில் வந்த இரண்டு கொசுக்களை ஒரு நொடியில் பற்றிக் கவ்வி விழுங்கிவிட்டுப் பழைய படி சலனமற்றிருப்பது போல், அந்தக் காஞ்சிக் கோட்டையானது தன்னை நெருங்கிய இருவரையும் கண்ணிமைக்கும் நேரத்தில் விழுங்கிவிட்டு மறுபடியும் அசைவற்றிருப்பது போலத் தோற்றம் அளித்தது.

இதையெல்லாம் பார்த்ததனால் குமார சக்கரவர்த்திக்கு உண்டான பிரமிப்பு நீங்குவதற்கு முன்னால், அங்கு இன்னொரு வியப்பான சம்பவம் ஏற்பட்டது. பக்கத்திலிருந்த வேறொரு புதரிலிருந்து ஓர் ஆள் திடீரென்று கிளம்பி வந்தான். அவன் சக்கரவர்த்திக்குத் தண்டம் சமர்ப்பித்துவிட்டுப் பணிவுடன் நின்றான்.

அவனைப் பார்த்துச் சிறிதும் வியப்புறாத மகேந்திரர், ''சத்ருக்னா! இந்தச் சுவரில் உள்ள கதவு எங்கே திறக்கிறதென்று ஊகிக்கிறாய்?'' என்று கேட்டார்.

''இராஜ விஹாரத்தில் புத்தர் சிலைக்குப் பின்னால் திறக்கலாம் சுவாமி'' என்றான் சத்ருக்னன்.

''சுவரில் கதவு வைத்தவன் மிகவும் கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். இல்லையா?''

''கதவு வைத்தவனைக் காட்டிலும் மேலே வர்ணம் பூசியவன் கெட்டிக்காரன், பிரபு! பகலில் இவ்விடமெல்லாம் வந்து பார்த்தேன். கதவு ஒன்று இருப்பதாகவே தெரியவில்லை.''

''ரொம்ப நல்லது, சத்ருக்னா! நாளைக்கு நான் வட திசைக்குப் பிரயாணப்படுகிறேன்.''

''பிரபு! நானும் ஆயத்தமாயிருக்கிறேன்.''

''இல்லை; நீ என்னுடன் வரவேண்டாம். மறு கட்டளை பிறக்கும் வரையில் இந்த நாகநந்தியை நீ தொடர வேண்டும்....''


பவுடரினால் துலக்கிய
பாத்திரத்தின் மீது பொடிக் கசடு
பின்தங்கியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது
விம்.
கசடு இல்லே!
பிசுக்கு இல்லே!
கீறல் இல்லே!
Vim

"தொண்டை நாட்டை விட்டு அவர் போனால்...?"

"அப்போதுந்தான்."

"சோழ நாடு, பாண்டிய நாடு சென்றால்...?"

"பின்னோடு போக வேண்டும். யாரிடமாவது பிக்ஷு ஓலை ஏதாவது அனுப்பினால்......"

"என்ன செய்ய வேண்டும் என்று தெரியும் சுவாமி! ஆனால், செங்காட்டாங்குடி வாலிபனிடம் அவர் அனுப்புகிற ஓலை.....?"

"அதை நானே பார்த்துக் கொள்கிறேன். எந்த முகாந்திரத்தினாலும் நாகநந்தியைத் தவற விடக் கூடாது. ஏதாவது விசேஷம் இருந்தால் எனக்குச் செய்தி அனுப்ப வேண்டும்."



"ஆக்ஞை பிரபு!"

சக்கரவர்த்தியும் நரசிம்மரும் அங்கிருந்து அரண்மனைக்குத் திரும்பிய போது "இராஜ விஹாரத்தை உடனே மூடிக் கோட்டை மதிலிலுள்ள துவாரத்தையும் அடைத்து விட வேண்டாமா?" என்று மாமல்லர் கேட்டார்.

"கூடாது குழந்தாய் கூடாது. அதற்குக் காலம் வரும்போது செய்யலாம். இப்போது பகைவர்களின் சூழ்ச்சிகளை அறிவதற்கு அந்த இரகசியக் கதவு நமக்கு உதவியாக இருக்கும்" என்று சக்கரவர்த்தி மறுமொழி கூறினார்.

சக்கரவர்த்தி வட திசைக்குப் பிரயாணமான பிறகு, காஞ்சிக் கோட்டைக்குள்ளே மாமல்லருக்குப் பொழுது போவது மிகவும் சிரமமான காரியமாயிருந்தது. ஆயனர் வீட்டில் புத்தர் சிலைக்குப் பின்னால் புத்த பிக்ஷுவும் பரஞ்சோதியும் ஒளிந்திருந்ததை மகேந்திரர் ஊகித்தறிந்தது, மதில் சுவரில் இருந்த இரகசியக் கதவை அவர் கண்டுபிடித்தது முதலிய காரியங்களினால் சக்கரவர்த்தியிடம் குமாரருக்கு ஏற்கெனவே இருந்த மதிப்புப் பன்மடங்கு அதிகமாகியிருந்தது. ஆகவே காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போகக்கூடாது என்ற தந்தையின் கட்டளையை மீறும் எண்ணமே அவருக்கு உதிக்கவில்லை.

ஆனால், ராஜ்யத்தில் பெரிய பெரிய காரியங்கள் நடந்து கொண்டிருக்கும் போது, மகத்தான யுத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தபோது கோட்டைக்குள்ளே ஒரு காரியமும் இன்றி அடைந்து கிடப்பது அவருக்குப் பரம சங்கடத்தை அளித்தது.

கழுக்குன்றத்தில் பல்லவ சைனியங்கள் திரண்டு கொண்டிருக்கின்றனவே, அங்கே போய்ப் படைகளைப் பார்க்கவாவது தந்தையிடம் அநுமதி பெறாமல் போனோமே என்று மாமல்லர் ஏக்கம் அடைந்தார். அப்பால் மாமல்லபுரம் போகவும் அவரிடம் அநுமதி பெற்றிருந்தால்....?

ஆம்; எத்தனையோ எண்ணங்களுக்கிடையில் சிவகாமியைப் பற்றிய நினைவும் மாமல்லருக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. அவள் தீட்டிய தாமரைக்கும் மானுக்கும் மத்தியில் தாம் வரைந்திருந்த வேலை அவள் பார்த்தாளோ, இல்லையோ? பார்த்திருந்தால் அதன் பொருளைத் தெரிந்துகொண்டிருப்பாளா? அதனால் திருப்தி யடைந்திருப்பாளா?

தந்தையிடம் நாம் வாக்குக் கொடுத்திருக்கும் விஷயம் அவளுக்குத் தெரியாதல்லவா? ஆதலின், தன்னைப் பார்க்க வரவில்லையே என்று அவளுக்குக் கோபமாகத்தான் இருக்கும். அவள்தான் இங்கு ஏன் வரக் கூடாது?... ஆனால், அவள் எப்படி வருவாள்? ஆயனருக்குத்தான் தந்தை அவ்வளவு கடுமையான கட்டளையிட்டிருக்கிறாரே? வேலையை விட்டுவிட்டு அவர் வரமுடியாதல்லவா?

இவ்விதம் குமாரச் சக்கரவர்த்தியின் உள்ளம் பலவித சிந்தனைகளில் ஆழ்ந்

இருந்தது. செய்வதற்கு வேலை ஒன்றும் இல்லாதபடியால் அவருடைய மன வேதனை அதிகமாயிற்று.

இந்த நிலைமையில் திருநாவுக்கரசு சுவாமிகள் காஞ்சிக்குத் திரும்பி வந்து விட்டார் என்று அறிந்ததும் மாமல்லர் அவரைத் தரிசித்துவிட்டு வரலாமென்று எண்ணினார். சுவாமிகளிடம் தெரிவிக்கும்படி சக்கரவர்த்தி கூறியிருந்த செய்தி ஒன்று இருந்தது. எனவே, ஒரு நாள் மாலை ஏகாம்பரேசுவரர் திருக்கோவிலுக்கருகில் இருந்த நாவுக்கரசர் மடாலயத்துக்கு அவர் சென்றார்.

நாவுக்கரசர் குமார சக்கரவர்த்தியை அன்புடன் வரவேற்றுத் தாம் சென்றிருந்த ஸ்தலங்களின் மகிமையைப் பற்றிக் கூறினார். சக்கரவர்த்தி வடநாடு சென்றிருப்பதைப் பற்றியும், பல்லவ ராஜ்யத்தில் யுத்தம் வந்திருப்பதைப் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

பின்னர் சுவாமிகள் கூறினார்: ''மாமல்லரே! சக்கரவர்த்தியிடம் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்ள எண்ணியிருந்தேன். அவர் இல்லாதபடியால் தங்களிடம் சொல்லுகிறேன். இந்த இடத்திலிருந்து நமது மடத்தை அப்பாற்படுத்தித் திருமேற்றளியில் அமைத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஏகாம்பரர் கோயில் நகருக்கு மத்தியிலே இருப்பதால் இங்கே அமைதி கிட்டுவதில்லை. மேலும், இங்கே நம்முடைய சீடர்களுக்கும், பக்கத்திலுள்ள கடிகை ஸ்தானத்தில் வடமொழி பயிலும் மாணாக்கர்களுக்கும் ஓயாமல் வாக்குவாதமும் போட்டியும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆரியம், தமிழ் இரண்டையும் அளித்த எம்பெருமான் ஒருவரே என்று அவர்களுக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பயனில்லை. இளங்காளைப் பருவமல்லவா? அப்படித்தான் கொஞ்சம் முரட்டுத்தனம் இருக்கும். ஏகாம்பரநாதர் கோயிலில் கூட்டம் போட்டிருக்கும் காபாலிகர்களின் தொல்லையும் பொறுக்க முடியவில்லை. அதனால் திருமேற்றளியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் சந்நிதிக்குப் போய்விடலாம் என்று பார்க்கிறேன். இவ்விடத்தைக் காட்டிலும் அங்கே அமைதியா யிருக்கிறது.''

சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்த குமார சக்கரவர்த்தி கூறினார்: ''சுவாமி! முன்னம் ஏகாம்பரர் கோவிலிலிருந்து இந்தக் காபாலிகர்களை யெல்லாம் துரத்திவிட வேண்டுமென்று சொன்னேன். தாங்கள்தான் வேண்டாமென்றீர்கள். தங்கள் விருப்பத்தின்படி திருமேற்றளியில் மடத்தை அமைத்துக் கொள்வதில் ஆட்சேபமில்லை. ஆனால், சக்கரவர்த்தி தங்களிடம் தெரிவிக்கச் சொன்ன விஷயத்தைத் தெரிவிக்கிறேன். பிறகு தங்கள் உசிதம் போல் செய்யலாம். யுத்தம் தொண்டை நாட்டுக்கே வந்துவிடலாமென்றும், இந்தக் காஞ்சி நகரம் முற்றுகைக்கு உள்ளாகலாமென்றும் பல்லவேந்திரர் கருதுகிறார். யுத்தம் ஒருவிதமாக முடியும்வரையில் தாங்கள் சோழநாட்டிலும் பாண்டிய நாட்டிலும் தீர்த்த யாத்திரை செய்வது நலம் என்ற அவருடைய அபிப்பிராயத்தைத் தங்களுக்குத் தெரியப்படுத்தச் சொன்னார். அதுவரையில் நமது மடத்தை மூடி வைத்து விடுவது உசிதம் என்றும் சக்கரவர்த்தி கருதுகிறார். இதைப் பற்றி யோசித்துத் தங்கள் சித்தம் போல் முடிவு செய்யலாம்.''

நாவுக்கரசர் சிறிது நேரம் சிந்தனை செய்து விட்டு, ''சக்கரவர்த்தியின் யோசனை எனக்கும் சம்மதமாகத்தான் இருக்கிறது. ஆனால், முன்னமே தெரியாமல் போயிற்று. திருமேற்றளியில் மடத் திருப்பணி ஆரம்பிப்பதற்காக ஆயனரை வரும்படி நான் சொல்லியனுப்பி யிருக்கிறேன்.... ஒரு விதத்தில் அதுவும் நல்லதுதான். நீண்ட யாத்திரை கிளம்புவதற்கு முன்னால் ஆயனச் சிற்பியாரை ஒரு தடவை பார்த்துவிட்டுப் போகலாம்'' என்றார்.

ஆயனர் வருகிறார் என்று கேட்டதும் மாமல்லரின் உள்ளத்தில் குதூகலம் உண்டாயிற்று. ''ஆயனர் எப்போது வருவார், சுவாமி?'' என்று ஆர்வத்துடன் கேட்டார்.

''ஒருவேளை இன்று மாலையே வரக்கூடும்'' என்று நாவுக்கரசர் பெருமான் கூறியதும், ஆயனர் வரும் வரையில் தாமும் அங்கே இருப்பது என்று மாமல்லர் தீர்மானித்துக் கொண்டார். ''சுவாமி! திருச்செங்காட்டாங்குடியிலிருந்து தங்களுக்கு ஓலை கொண்டு வந்த வாலிபனை ஆயனர் நாகார்ஜுன பர்வதத்துக்கு அனுப்பி யிருக்கிறாரே, தெரியுமா?'' என்று கேட்டார்.

''அது என்ன? எனக்கு ஒன்றும் தெரியாதே?'' என்று சுவாமிகள் சொல்ல, நரசிம்மர் பரஞ்சோதியைப் பற்றித் தாம் அறிந்திருந்த விவரங்களைக் கூறினார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போதே, வாசற்புறமிருந்து உள்ளே ஒரு சீடன் விரைவாக வந்து, ''ஆயனர் வருகிறார்!'' என்று அறிவிக்க, எல்லாருடைய கண்களும் வாசற்புறம் நோக்கின.

(தொடரும்)

பாக்தாத் பேரழகி

பாக்தாத் நகரம் என்ற வார்த்தை வந்தாலே அராபியக் கதைகள் நினைவுக்கு வராமல் இராது. அத்துடன் மாய, மந்திர, தந்திரங்களும் நினைவுக்கு வரும். கணேஷ் க்ரியேஷன்ஸ் தயாரிப்பான இந்தப் படம் அந்த நினைவுகளுக்குச் சான்றாக விளங்குகிறது. இம்மாதிரிக் கதைகளில் ஒரு சௌகரியம். எந்தக் காட்சியையும் எப்படி வேண்டுமானாலும் காட்டலாம். மாட, மாளிகை கூட கோபுரங்களையும், வண்ண வண்ண நீர்களைப் பொழியும் நீரூற்றுக்களையும் காட்டலாம்; இத்தகைய வசதிகளுக்காகவே இம்மாதிரி அடிப்படையில் படம் தயாரிக்க முன் வந்தார்களோ என்னவோ!

பாக்தாத் பேரழகி ஜெயலலிதா. பிரமாதமாக நடனம் ஆடி, உள்ளம் களித்து கண்ணீர் உகுத்து, தன் கரம் பற்றப் போகும் வீர வாலிபனுடன் வாக்குவாதம் செய்து, பகைவர்களிடம் வாட் போர் புரிந்து, சகல சாகஸங்களையும் செய்யும் எழிலரசியின் பாத்திரத்துக்கு மேலும் எழில் ஊட்டுகிறார். பாக்தாத் பேரழகி நடனமாடும்போதே இளவரசன் அப்துல்லா சித்திரமாக அவளை வரையும் காட்சியும், இருவரும் சவால் விட்டுப் பாடும் காட்சியும் மிகவும் பாராட்டத் தக்க முறையில் படமாக்கப்பட்டிருக்கின்றன.

நாடிழந்த இளவரசனாக வரும் ரவிச்சந்திரன் தம் உடற்கட்டை நன்றாக வைத்துக் கொண்டிருப்பதற்காக அவரை முதலில் பாராட்ட வேண்டும். துள்ளிக் குதித்துச் சண்டையிடுதல், மாறுவேடம் ஆகியவை அவருக்குக் கைவந்த கலைகள்.

வி. கே. ராமசாமி, நாகேஷ் இருவரும் நகைச் சுவைப் பகுதிக்குப் பொறுப் பேற்றுக்கொண்டு விட்டனர். ஆனால் நாகேஷைக்கடவுளாக நினைத்து ஒரு கும்பல் வழி படுவதாகக் காட்டப்படுவதெல்லாம் அசடு வழிகின்றன. எதை வேண்டுமானாலும் நகைச்சுவை என்று சொல்லி விட முடியுமா?

சாவித்திரி ஒரு தேசத்து ராணி; பெரும் பகுதி சிறையில் இருந்து விடுவதால் அவருக்கு நடிக்க வாய்ப்பில்லை.

குவிஸ்தான் நாட்டு மன்னர் மேஜர் சுந்தரராஜன் நாட்டியக்காரியின் தளுக்கில் மயங்கிப் பகைவனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்தவர். அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியிராத பாத்திரம்.

ஆறு நீண்ட பாடல்கள் நம் பொறுமையைச் சோதிக்கின்றன.

ஈஸ்ட்மென் கலரில் அழகாகத் தயாரிக்கப் பட்டிருக்கும் இப்படத்தின் ஒளிப்பதிவு மிகவும் நன்றாயிருக்கிறது. எம். ஏ. ரஹ்மான் பாராட்டுக்குரியவர்.

வில்லனாக வரும் அசோகன், இழுத்து இழுத்துப் பேசுவதும், அசடு வழியச் சிரிப்பதும் என்ன நடிப்பில் சேர்ந்ததோ!

அபாரமாக 'செட்டிங்ஸ்' போட்டு வண்ணப் படத்தின் வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்திக் கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டியது தான். சச்சு, ஏ. சகுந்தலா, அலம் ஆகிய நடிகைகள் இருப்பதால், படத்தின் கவர்ச்சிக்குக் கேட்பானேன்?

பத்திரிகைகளின் சிறுவர் பகுதிக்கு ஏற்ற ஒரு ராஜா—ராணிக் கதையைப் புனைந்து பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன் தயாரித்து, ''பாக்தாத் பேரழகி'' என்று வெளியிட்டதற்குப் பதிலாக ஒரு நல்ல சரித்திரக் கதையையே தயாரித்திருந்தால், தயாரிப்பாளர் பாராட்டுக் குரியவரா யிருந்திருப்பார்.

சிறந்த படங்களைத் தயாரித்து, டைரக்ட் செய்து நல்ல அநுபவம் முதிர்ந்த ராமண்ணாவின் டைரக்ஷன் படத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

கவர்ச்சி மிகுந்த பொழுது போக்குப் படங்களின் வரிசையில் 'பாக்தாத் பேரழகி' முன்னணியில் நிற்கும்.

— காந்தன்



அலைகள்

சித்திராலயாவின் ''அலைக''ளைப் பார்த்ததும் என் மனத்தில் வாஸ்தவமாகவே மகிழ்ச்சி அலைகள் மோதின.

அடுத்தடுத்து ஒரே மாதிரியான படங்களைப் பார்த்து அலுத்துப் போயிருக்கிற சமயத்தில், ஒரு புது மாதிரியான படம் பார்க்க நேர்ந்தால் ஏற்பட்ட விளைவு.

திரைக் கதையின் ஆரம்பமே, தமிழ்ப் பட உலகுக்குச் சற்றுப் புதுமையானதுதான். அபலையும், அநாதையுமான ஒரு பெண் திண்டிவனம் ஸ்டேஷனில் ரயில் ஏறி (டிக்கட் இல்லாமல்தான்!) சென்னை எழும்பூர் ஸ்டேஷனுக்கு வந்து சேருகிறாள். அவளுக்காக ஒருவன் டிக்கட் பரிசோதகரிடம் பணத்தைக் கட்டி அவளைத் தப்புவிக்கிறான். இதிலிருந்து அவளுக்குத் துன்பத்துக்கு மேல் துன்பம் வருகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதுதான் கதையின் ஜீவநாடி. திரைக் கதையின் ஓட்டம் ரயிலின் ஓட்டத்தோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடுவது புதுமை.

தமிழ்ப் படங்களிலே இல்லாத வழக்கமாக இயற்கைக் காட்சிகளைக் கொண்டே படம் தயாரித்திருப்பது அதிசயம்தான்! செட்டிங்குகளைப் பார்த்துப் பழகிப் போன கண்களுக்கு இது புதுமையாகவே தோன்றுவதோடு வரவேற்கவும் ஆவலாயிருக்கிறது.

அநாதைப் பெண்ணாக வரும், சந்திரகலாவுக்கு அதிக 'மேக்கப்' இல்லாமல் இருப்பது அதிர்ச்சியாயிருந்தது. (பிச்சைக்காரிக்குக் கூடப் பிரமாதமான மேக்கப் போட்டுவிடுவதல்லவா தமிழ்த் திரையுலக வழக்கம் !)

வாழ்க்கையில் வழுக்கி விழுந்த பெண்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதைத் திரைக்கதை நாசுக்காக எடுத்துச் சொல்கிறது.

சந்திரகலா இன்ஸ்பெக்டர் வீட்டில் சமைப்பதும், பற்பசையைத் தின்று ரஸிப்பதும், அவருடன் குழந்தைத்தனமாக 'ஸார், ஸார்' என்று அழைத்துப் பேசுவதும் படத்துக்குச் சுவை சேர்க்கின்றன. கடைசியில், கொலைக் குற்றத்துக்கு ஆளானபிறகும் அந்த 'ஸார்' தன்னை மனப்பூர்வமாக நேசிப்பதைக் கண்டு அதிர்ச்சியும், சந்தோஷமும் அடைந்து அழுகையும், ஆனந்தக் கண்ணீரும் ஒன்றையொன்று முந்திக் கொண்டு வெளிப்படச் சந்திரகலா உணர்ச்சிகளைப் பிரமாதமாக வெளிப்படுத்தி அருமையாக நடித்திருக்கிறார்.

இப்படத்தின் கதாநாயகன் விஷ்ணுவர்த்தன் தமிழ்ப் படத்துக்குப் புதியவர். நல்ல உயரமும், இளமைத் தோற்றமும் கொண்ட அவரையும் புதிய கதாநாயகனை அறிமுகப்படுத்த முன்வந்த துணிச்சலையும் வரவேற்க வேண்டியதுதான்.

கள்ளக் கடத்தலும், விபசார விடுதியும் நடத்தும் பலே கைகாரியாக மனோரமா வந்து தம் நடிப்பினால் அனைவருக்கும் மன நிறைவைத் தருகிறார். 'சோ'வுக்குப் பல படங்களில் பழகிப் போன 'மனைவிக்கு அடங்கிய கணவன்' பாத்திரம். ஆகவே சிரமப்படத் தேவையில்லை.

புது முகம் செல்லகுமார் வில்லனாக வருகிறார். தமிழ்ப் படத்துக்கு ஒரு புது வில்லன் கிடைத்தார் என்று சந்தோஷப்படும் அளவுக்கு நன்றாக நடித்திருக்கிறார்.

நடக்கக் கூடாத நிகழ்ச்சிகளையோ, நம்ப முடியாத சம்பவங்களையோ, ஏற்றுக் கொள்ளத் தயங்கும் கருத்துக்களையோ திணிக்க முயலாமல், புதுமையான ஒரு நல்ல கதையைத் துணிந்து புனைந்து அதற்குத் தக்க முறையில் வசனங்களும் எழுதிச் சிறப்பாக டைரக்ட் செய்திருக்கும் ஸ்ரீதர் பாராட்டுக்குரியவர்.


''அலைகள்'' போன்ற நாடக் கூடிய படங்கள் நீண்ட காலம் ஓடக் கூடியனவாகவும் அமையுமாறு பார்த்துக் கொள்வது ரசிகர் பொறுப்பு.



மைக்ரோஃபைன்ட்
ஆஸ்ப்ரோ

அதிவேகமாகக் கரைந்து, அதிவேகமாகக் கிரகிக்கப் படுகிறது. அதனுல்தான் அது அதிவேகமாக வலியைப் போக்கி விடுகிறது–

சாதாரண வலிநிவாரண மாத்திரைகளைவிட இருமடங்கு அதிக வேகத்துடன் வலியைப் போக்கி விடுகிறது.





சாதாரண மாத்திரைகளைப் போலன்றி, ஆஸ்ப்ரோவின் நுண்ணிய அணுக்கூறுகள் அதிவேகமாகக் கிரகிக்கப் படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. உங்களுக்கு அதிவேக நிவாரணம் அளிக்கின்றன.

கீழ்க்கண்டவைகளுக்கு மைக்ரோ:.பைண்ட் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • உடல் வலி • ஜலதோஷம் • ஃப்ளு • மூட்டுவலி • தொண்டை அழற்சி • பல்வலி

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப் பட்டால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி

ஆஸ்ப்ரோ மட்டுமே மைக்ரோ:.பைன் செய்யப் படுகிறது, அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக.

நிகோலஸ் Ⓝ தயாரிப்பு

A G 57 TM



ராஜாஜியின் ஜெயில் டைரி

ஆந்திர தேசம் தேசிய சேவைக்கு அநேக நல்ல வீரர்களை வழங்கியிருக்கிறது. அவர்களில் ஒருவர் குண்டூரிலிருந்து வந்திருக்கும் வக்கீல் நரசிம்மாச்சாரியார். அவர் க்ஷயரோகம் வந்து தேறியவர். அதனால் அதிக மெலிவாகவும் பலஹீனமாகவும் இருந்த போதிலும் எப்பொழுதும் சுருசுருப்பாகவே இருக்கிறார். உடல்தான் பலஹீனமாக இருக்கிறதேயன்றி உள்ளம் பலம் உடையதாகவே இருக்கிறது. சில மணி நேரத்துக்குள்ளாகவே தமிழ் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார்.

வி. சுப்பாராவுடன் நெருங்கிப் பழகியதன் காரணமாக நான் அவரிடம் வைத்திருந்த மதிப்பு அதிகரித்தது என்பதைத் தவிர அவரைப் பற்றி நான் வேறு எதுவும் மறுபடியும் எழுதத் தேவையில்லை. பத்தேகான் முகமது கௌஸ் என்பவர் உறுதியான ஒத்துழையாமைக்காரர். அவரைப் போன்றவர்கள் ஏராளமாக நம்முடைய இயக்கத்தில் ஈடுபட வேண்டும். ஆனால் இன்று நமக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை.

சித்தூரிலிருந்து வந்துள்ள தையல்காரர் சந்தாமியான் சாகிபும் வேலூரிலிருந்து வந்துள்ள பாத்ஷா சாகிபும் அம்மாதிரியான ஒத்துழையாமைக்காரர்கள். திருப்பத்தூரிலிருந்து வந்துள்ள அப்துல் வகாப் கொஞ்சம் எதிர்ப்பு சுபாவம் உடையவர். அதனால் சில சமயங்களில் தவறு செய்துவிடுகிறார். ஆயினும் அந்தச் சுபாவம் அதிசீக்கிரமாக மறைந்து வருகிறது.

திருவண்ணாமலையிலிருந்து நல்ல இளைஞர்கள் பலர் வந்துள்ளனர். அவர்களுடைய குணமும் சாந்தமும் வீரமும் தமிழ்நாட்டுக்குப் பெருமை அளிப்பனவாக உள.

இந்திய மந்திரி மாண்டேகு துருக்கிப் பிரச்னை சம்பந்தமாக ராஜிநாமாச் செய்து விட்டதாக அறிகிறேன். காந்தியடிகளைக் கைது செய்ய உத்தரவு பிறந்து விட்டதாகத் தெளிவாகிறது.

1922 மார்ச், 12உ

ஞாயிற்றுக்கிழமை: காந்தியடிகள் கைதியாகி விட்டதாகக் காலையில் கேள்விப்பட்டேன். அப்படித்தான் என்று நண்பகலில் உறுதியாயிற்று. இந்தச் செய்தியை எல்லோரும் ஒருவாறு அமைதியாகவே ஏற்றுக் கொண்டோம். முப்பத்தாறு மணி நேரம் உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்வதாகத் தீர்மானித்தோம். அவ்வாறே அன்று மாலையில் திறந்தவெளியில் இந்து பிரார்த்தனையும் முஸ்லீம் பிரார்த்தனையும் ஒன்று சேர்ந்து நடத்தப்பட்டன. எங்கள் பகுதியிலுள்ள இதர கைதிகளும் யாரும் கூப்பிடாமல் தாங்களாகவே வந்து பிரார்த்தனையில் கலந்து கொண்டார்கள்.

1922 மார்ச், 13உ

திங்கட்கிழமை: இன்று காலை, நண்பகல், மாலை, மூன்று நேரமும் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. மாலையில் கூட்டம் நடந்து முடிந்ததும் உபவாசத்தை முடித்துப் பாராயணம் செய்தோம்.

சிறை இலாகா மாகாணத் தலைமை அதிகாரி எங்கள் சிறைக்கு வந்தவர்



எங்கள் அறை வழியாகவும் சென்றார். ஐரோப்பியர்களுக்கு விஸ்கி மது எப்படி ஆடம்பர வஸ்துவோ, அப்படியே மோர், கைதிகள் எல்லோருக்கும் கொடுப்பதும் ஆடம்பரமேயாகும் என்றும் தோலுடனுள்ள துவரம் பருப்பே அதிக போஷணை தரும் என்றும் அவர் கருதுகிறார். போஷணை தருவதாயிருக்கலாம். ஆனால் குடலுக்கு ஒத்து வரவில்லையே, அதனால் மொத்தத்தில் அது நல்லதாக இல்லை என்று நான் கூறினேன். அதை நம் சிறை அதிகாரி ஏற்றுக் கொள்வது போல் தெரிந்தது. ஆனால் மாகாண அதிகாரி முழுத் துவரை தான் நல்லது என்று சாதித்தார். இந்தத் துவரை கொடுக்கும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் அவர்தான். அதனால்தான் அப்படிச் சாதித்தார் என்று பின்னால் அறிந்தேன்.



வெள்ளித்திரையின்
அந்த நாள் முதலாய்
நாங்கள் பெருமளவில் மாறிவிட்டோம்
நீங்கள்?
பின்னி
ஷர்ட்டிங்குகளும்,
சூட்டிங்குகளும்:
விண்வெளி-
யுகத்தின்
எண்ணற்ற
வகைகள்
முற்றிலும் மாறுபட்ட
டிசைன்கள். புதுமைப்
பாணிகள்...தீர கம்பீர
நிறங்கள்.
பின்னி
TERENE இணைந்தது
Interpub/BB/41/73-tam

பச்சைக் குழந்தைக்குப் பால் இல்லை!

அழுத குழந்தைக்குத்தான் பால் கிடைக்கும் என்று கூறுவார்கள். இன்று அழுகிற குழந்தைக்கும் பால் கிடைப்பது அரிதாகி விட்டது. குழந்தைகளுக்கான பால் பவுடர் டின்கள் சமீப காலமாக மாயமாக மறைந்து விட்டன! குழந்தைகளின் கதி என்ன? பெற்றோர்களின் சங்கடத்தைத்தான் எப்படி வருணிப்பது? 'ஒருகால் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் இப்படி மறைமுகமாக வற்புறுத்தப்படுகிறதோ என்னவோ?' என்று பெற்றவர் ஒருவர் அங்கலாய்த்தது நினைவுக்கு வருகிறது? ஏன் இந்த நிலை?

குழந்தை உணவு தயாரிப்பு, விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒரு பிரபல நிறுவனத்தில் சென்று விசாரித்ததில் அங்குள்ள அதிகாரி கூறுகிறார்:

''ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் — இம்மூன்று மாதங்களில் ஒவ்வொரு வருடமுமே பால் உற்பத்தி பொதுவாகக் குறைவது வழக்கம். அதோடு இந்த வருஷம் வட இந்தியாவில் உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரம் முதலிய மாநிலங்களில் கடுமையான நீர்ப் பஞ்சம் ஏற்பட்டதால் மாடுகள் உயிர் பிழைப்பதே அரிதாகி விட்டது. புல், தீவனம் கிடைக்கவில்லை. உத்தரப் பிரதேசத்திலுள்ள 'இட்டா' எனுமிடத்தில் எங்கள் பால் உற்பத்தித் தொழிற்சாலை உள்ளது. ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு எங்களுக்குக் குழந்தை உணவு சப்ளை உ.பி.யிலிருந்து அறவே வரவில்லை. அங்கு நிலவிய கடுமையான வறட்சிதான் காரணம். டிசம்பர் மாதத்தில் நிலைமை சீர்ப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கிறோம்'' என்றார்.

''இந்தத் தட்டுப்பாட்டுக்குக் காரணம், நாட்டின் பல பகுதிகளில் நிலவிய வறட்சி நிலைதானா?'

''ஐம்பது சதவிகிதம் இயற்கையின் விளைவு. மறு பாதி செயற்கையே.''

சேப்பாக்கத்தில் உள்ள 'எழிலகம்' கட்டடத்தில் இயங்கி வரும் 'சிவில் சப்ளைஸ்' இலாகா அதிகாரி ஒருவரிடம் இது பற்றி விசாரிக்கிறோம்.

தட்டுப்பாடு ஏற்பட்ட பிறகு, கைவசம் உள்ள குழந்தை உணவை விநியோகிப்பதில் என்ன ஒழுங்குமுறையைக் கையாளலாம் என்பதில் அதிகாரிகளின் கவனம் திரும்பியது. அது பற்றி அவர் விளக்குகிறார்: ''குழந்தை பிறந்ததற்கான அத்தாட்சியுடன் கடைகளில் பதிவு செய்து கொள்ளும் முறையை அமுலுக்குக் கொண்டு வந்தோம். சென்னை நகரில் நகராண்மைக் கழகம் வழங்கும் சான்றிதழை எடுத்துச் சென்று அங்கீகரிக்கப்பட்ட கடைகளில் பதிவு செய்து கொண்டால் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைக்கு மாதம் மூன்று கிலோ கிடைக்கும். ஒரு வயதுக்கு மேல், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மாதம் இரண்டு கிலோ கிடைக்கும். குறிப்பிட்ட ரகம் பால் பவுடர் கிடைக்காவிடின் வேறு ஏதாவது ரகம் பெற்றுக் கொள்ளலாம்.''

''வெளியூர்களில் நிலைமை என்ன?''

''நகரசபை அதிகாரிகளிடமிருந்து குழந்தை பிறந்ததற்கான சான்றிதழ் பெற்றுக் கொண்டு கடைகளில் பதிவு செய்து கொள்ள வேண்டும். சின்ன ஊர்களில் கிராம முனிசிப் வழங்கும் சான்றிதழில் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார். அதனைப் பெற்றுக் கொண்டு போய்க் கடைகளில் பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாகக் கிராமங்களில் குழந்தைப் புட்டிப் பால்களுக்கு இங்கு நகரங்களில் உள்ள அளவு 'டிமாண்டு' இல்லை'' என்கிறார் அந்த அதிகாரி. கிராமத்துக் குழந்தைகள் பெரும்பாலும் தாய்ப் பாலில் அல்லது நல்ல பசும் பாலில் வளருகின்றன போலும்!

தனியார் துறையில் பொறியியலராகப் பணியாற்றும் திரு அங்கமுத்து என்ற அன்பரிடம் பேச்சுக் கொடுக்கிறேன். ''இந்தத் திட்டத்தை அமுல் நடத்தத் தொடங்கிய புதிதில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே பால் பவுடர் டின் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அப்போது என் குழந்தைக்கு ஒரு வருடமும் பத்து மாதமும் ஆகியிருந்தது. பின்னர் ஒரு வயதுக்கு மேற்பட்ட ஆனால் இரண்டு வயதுக்கு மேற்படாத குழந்தைகளுக்கு மாதம் இரண்டு கிலோ பாலுணவு வழங்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது என் குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. அதனால் பால் பவுடர் கிடைக்கிறதில்லை. என்ன விலையானாலும் சரி, குறிப்பிட்ட ஒரு பிராண்டு பால் பவுடர்தான் நாங்கள் குழந்



தைக்குக் கொடுப்பது வழக்கம். அதற்குப் பதில் வேறு ஒரு பவுடர் வாங்கிக் கொடுத்தால் குழந்தைக்குப் பேதியாகத் தொடங்கும். காய்ச்சல் வரும். இழுப்பும் வந்துவிடும். இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைக்குப் பாலுணவு கிடைக்க வழியில்லை என்ற நிலையில் என் போன்ற பெற்றோர்கள் அனுபவிக்கிற தொல்லை கொஞ்ச நஞ்சமன்று'' என்று திரு அங்கமுத்து கூறுவதைக் கேட்கப் பரிதாபமாக இருக்கிறது.

''குழந்தையின் உணவுப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?'' என்று கேட்கிறேன்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்! எங்கள் வீட்டு வேலைக்காரிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது. அந்தப் பெண்மணி தன் குழந்தைக்குக் கிடைக்கும் மூன்று கிலோவில் கொஞ்சம் மிச்சம் பிடித்து என் குழந்தைக்குக் கொடுத்து வருகிறாள். கொஞ்சம் பெரிய மனசு பண்ணி! இல்லாவிடில் ரொம்பச் சங்கடந்தான்!''

திருவல்லிக்கேணி பைகிராப்ட்ஸ் சாலையில் உள்ள ஒரு கடைக்கு வருகிறேன். வாசலில் கரும் பலகையில் கைவசமுள்ள 'ஸ்டாக்', விலை விவரம் எழுதிப் போட்டிருக்கிறார்கள்.

கடைக்காரர் கூறுகிறார்: ''கூடியவரை குறிப்பிட்ட பிராண்டு பாலுணவு வகைகளையே வாடிக்கைக்காரர்கள் வாங்குகிறார்கள். சில சமயங்களில் குறிப்பிட்ட வகை ஸ்டாக் இல்லாவிட்டால் வேறு ஏதாவதும் வாங்கிச் செல்லுவதுண்டு. இந்த வியாபாரத்தில் உயர்ந்தபட்சம் டின் ஒன்றுக்கு எட்டணா லாபம் கிடைக்கும். மற்றச் சாமான்களின் விற்பனையை உத்தேசித்து எங்கள் வாடிக்கைக்காரர்களின் நன்மைக்கெனக் குழந்தைகளுக்கான பாலுணவை விற்பனை செய்து வருகிறோம். சில கடைக்காரர்கள், இதில் உள்ள சிரமங்களை எண்ணி இந்த வியாபாரமே வேண்டாம் என்று விட்டு விட்டார்கள்.'' அவர் இப்படிக் கூறிக் குழந்தை உணவுகளுக்குப் பதிவு செய்து கொள்ளுவதற்கான நமூனாவின் பிரதி ஒன்றைக் கொடுக்கிறார். 'கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லிட்.' நிறுவனத்தார் அச்சடித்துக் கடைகளுக்கு இலவசமாக வழங்கியுள்ள நமூனா இது. ஓரிரு மாதங்களில் நிலைமை சீர்ப்பட்டுவிடும் என்னும் நம்பிக்கையில் நம்பிக்கை வைப்பது தவிர வேறு வழி ஒன்றும் புலப்படவில்லை!

— 'பாணன்'

வட்டமேஜை

கல்வித்துறை சீர்கெட...

ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ அசோக் மேத்தா அவர்கள் அண்மையில், கல்வி விஷயத்தில் மாநிலங்கள் தன்னிச்சைப்படி நடக்க அதிகாரம் வேண்டும், மத்திய அரசுக்கு இதில் கொஞ்சம்கூட அதிகாரம் இருக்கக் கூடாது என்றும், இவ்விஷயத்தில் தமிழக முதல்வர் கருணாநிதியின் கருத்தைத் தாம் ஏற்பதாகவும் கூறியுள்ளார். அசோக்மேத்தாவின் இக்கருத்து ரொம்பவும் துரதிர்ஷ்டவசமானதாகவே தோன்றுகிறது. அதிகார துஷ்பிரயோகம் கல்வி விஷயத்தில் நடக்க விடுவது நமது தலைமுறைக்கு மட்டுமல்ல, வருங்காலத் தலைமுறையினருக்கும் நாம் செய்கிற துரோகமாகும். அதிகார மட்டத்திலும், அரசியல் மட்டத்தில் ஆட்சி மட்டத்திலும் எல்லா நிலைகளிலும் தனது கட்சிப் பிரசாரத்தைத் தீவிரமாகவும், ரொம்பவும் அசிங்கமாகவும் பரப்பும் தி. மு. க. அரசு கல்வி அதிகாரத்தைக் கையில் கொடுத்தால், அதைக் கட்சிப் பிரசாரத்துக்கு முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டுவிடும். இப்பொழுது இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டே அவர்கள் கல்வித் துறையில் செய்து வருகின்ற வரம்பு மீறிய செயல்களை அசோக் மேத்தாவைப் போன்றவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது. இப்பொழுதே கல்வித் துறையில் எவ்வளவோ கட்சிப் பிரசாரம் நடக்கிறது. கட்சித் தலைவர்கள் பெயரில் கல்லூரிகள், மாநில சுயாட்சி, உதய சூரியன் பற்றிய கட்டுரைப் போட்டி, நேரிடைப் போட்டியில் கட்சிப் பிரசாரக் கேள்விகள், காந்திஜி பற்றி அவதூறுகள், உயர்மட்டப் படிப்பில் ஆங்கிலப் புறக்கணிப்பு, பள்ளிப் பாடப் புத்தகங்களில் கட்சிப் பிரசார ஊடுருவல், இப்படி எத்தனையோ. இவ்வாறிருக்கக் கல்வித் துறையை முழுமையாக அப்படியே அவர்கள் கையில் கொடுத்துவிட்டால் கேட்கவா வேண்டும்?

சேலம்,
31—10—73 ''மகரிஷி''

கல்விப் பணி சிறக்க....

திருச்சிராப்பள்ளியில் இ. ஆர். ஹைஸ்கூலைக் கல்விக் கோயிலாக எழுப்பி, இந்தியா வெங்கும் அதன் மாணவர்களைப் பெரும் பதவிகளில் படரவிட்ட பெருமை காலஞ்சென்ற நடராஜ ஐயரைச் சாரும். அவரது புனிதப் பணியின் நினைவாக நிற்கும் பள்ளியின் தொண்டு மேலும் சிறக்கத் தற்பொழுது இருக்கும் கட்டட வசதி மட்டும் போதாது. அதோடு கலையரங்கு ஒன்றும் அங்கு நிறுவப்பட வேண்டும். திரு ஆர். நடராஜ ஐயரின் நினைவு என்றென்றும் நிலைபெற அவரது உருவச் சிலை ஒன்றும் அமைக்க வேண்டும் என்று பள்ளியின் பழைய மாணவர்களும் கல்விப் பணியில் நாட்டம் கொண்ட பலரும் விரும்பி அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளனர். இந்தத் திட்டம் நிறைவேற ஏறக்குறைய மூன்று லட்சம் ரூபாய்கள் தேவைப்படும். இக்கல்விப் பணியில் பங்கு கொள்ள விரும்பும் ஆதரவாளர்கள், செயலர், திரு நடராஜ ஐயர் நினைவு நிதி, இ. ஆர். ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி — 2 என்ற முகவரிக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்யக் கோரப்படுகிறார்கள்.

திருச்சி — 2
8—11—73 டி.எம். நரசிம்மன்



அவள் மென்மையானவள்... அவள் ஒரு புதிர்...
அவள் மிருதுவானவள், உறுதியானவள்...
தீப்போன்றவள்... அவள் பெண்மையே உருவானவள்...
பட்டுப் போன்ற டால்க்... அன்பைப்போல மிருதுவானது. உங்கள் மேனியைத் தழுவி அரவணைப்பது. உங்களை மோகன லாகிரியில் ஆழ்த்தும் அருமையான புது நறுமணம் கொண்டது. அதுவே வீல் ஆஃப் லவ். ஹேலோ மட்டுமே அளிப்பது. அதைத் தாராளமாக மேனியெங்கும் தூவிக் கொள்ளுங்கள். ஹேலோவிற்கெனவே பிரத்யேகமாக உருவான அதன் நறுமணம் நீண்ட நேரம் உங்களைத் தழுவி, உங்களைச் சுற்றிலும் கமகமவென வீசிக் கொண்டிருக்கும். வீல் ஆஃப் லவ் உங்களை அலங்கரிக்கட்டும். ஹேலோ மட்டுமே அளிக்கும் வாசமுள்ள அன்புத் திரை அது.
ஹேலோ வீல் ஆஃப் லவ் டால்க் வாசமுள்ள அன்புத்திரை... அன்பைப் போல மிருதுவானது.
அவளுக்கு உகந்தது
ஹேலோ
வீல் ஆஃப் லவ்
டால்க்
NEW
Halo

HT.G.I.TH

மூணு பைசாக் கல்யாணம்!

கே. ஜெயலக்ஷ்மி

சர்வர் இரண்டு கப் காப்பியைக் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்து விட்டுப் போனார்.

''உன் அப்பா நேற்று என் வீட்டுக்கு வந்திருந்தார் போலிருக்கிறதே!'' என்று காப்பியைக் கையில் எடுத்துக் கொண்டான் சுரேஷ் பி. காம்.

''ஆமாம். அப்போது நீங்கள் வீட்டில் இல்லையா ? ஞாயிற்றுக்கிழமைதானே?'' அவள் இன்னும் காப்பியைத் தொடவில்லை.

''அவர் வரும்போது நான் வீட்டில் இல்லாமல் இருப்பதுதான் நல்லது என்று தோன்றியது. வெளியே போய்விட்டேன். என்ன சொன்னாராம்?'' காப்பி கப்பில்பாதி குறைந்து விட்டது. உதட்டை உதட்டால் தடவி அதன் சுவையை ரசித்துக் கொண்டான்.

''ஜாதகம் பொருந்துகிறது என்று சொன்னாராம்.''

''அப்பாடி! ம்... அப்புறம்?''

''லௌகிக விஷயங்களைப் பற்றிச் சூசகமாகச் சொன்னாராம். கையில் நாலாயிரம் கொடுத்துவிட வேண்டும் என்றாராம்...''

''பரவாயில்லையே... நான் ஐயாயிரத்துக்குக் குறைய மாட்டார் என்று எண்ணினேன்....''

''இருபது பவுன் நகை, பாத்திரங்கள் மூவாயிரம் ரூபாய். கல்யாணம் நன்றாகச் செய்ய வேண்டுமாம். சத்திரம் பெரிதாக இருக்கட்டும் என்று சொன்னாராம்.''

''ஆமாம். எங்களுக்கு உறவினர் அதிகம் தான்.''

''இதற்கெல்லாம் சம்மதமாயிருந்தால் வருகிற இருபத்தைந்தாம் தேதி பாக்கு. வெற்றிலை மாற்றிக் கொள்ளலாம் என்றாராம்.''

சிறிது நேரம் அமைதி நிலவியது.

''உன் அப்பா என்ன சொல்கிறார்?''

''அவரால் கையில் அவ்வளவு ரூபாய் கொடுக்க முடியாது. நகையும் பத்துப் பவுன்தான் கையில் இருக்கிறது. பாத்திரங்களை வேண்டுமானால் எப்படியோ சரிக்கட்டி விடலாம்....''

''சரி, கவலைப்படாதே, மைதிலி! பார்க்கலாம். இந்த இருபத்தைந்தாம் தேதி இல்லாவிட்டால் இன்னொரு பதினைந்தாம் தேதி கிடைக்காதா என்ன?''

''....ம்...'' அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

''காப்பி ஆறுகிறதே!''

சில்லிட்டிருந்த காப்பியை எடுத்து ஒரே மூச்சில் குடித்துவிட்டுப் பாத்திரத்தைக் கீழே வைத்தாள் மைதிலி.

அவன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே எழுந்தான்.

அவளும் எழுந்து அவனுடன் நடந்தாள்.

அவன் அவளைப் பார்த்துத் தலையை அசைத்து விட்டுத் தன் அலுவலகத்துக்குள் நுழைந்து விட்டான்.

மைதிலி தன் அலுவலகத்தினுள் வந்து சேர்ந்து சுவர் ஓரமாக இருந்த இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாள்.

''இன்னும்மே! வெயாபாரம் எப்படிக் கீது.....?''

யாரோ தட்டி எழுப்பியது போன்ற உணர்வில் திடுக்கிட்டு எழுந்த மைதிலி, ஜன்னலை மறைத்திருந்த துணியைச் சிறிதளவு விலக்கிவிட்டுத் தெருவில் தன் பார்வையைப் பதித்தாள்.

''ஒண்ணும் சொகமில்லே..மாசக் கடைசி பதினைஞ்சு தேதிக்கே வந்துட்டுது. ...ஆமா...



நீ எதுக்காவ தெனைக்கும் இங்கே வந்து நிக்கறே?'' என்று கோபமாக வினவியபடி தலையிலிருந்த மொக்கு மாவுக் கூடையை இறக்கிக் கீழே வைத்தாள் முத்தம்மா.

''வந்தாத் தலையைச் சீவிடுவியாக்கும்?''

''கண்டிப்பா செஞ்சு காட்டிடுவேன். நானு தாயி தகப்பன் இல்லாதவதான். ஏழைதான். ஆறு தெருவிலே பொறுக்கித் தின்னுற கசுமாலக் களுதையில்லே தெரிஞ்சுக்க...'' தலைச் சிம்மாட்டை எடுத்து உதறிக் கொண்டே உறுமினாள் முத்தம்மா.

''அடேயப்பா! எம்மாங் கோபம் வருது?'' என்று ரங்கன் சிரித்தான்.

''இந்தக் கோவம்தான்யாளனக்குக் காவல். இல்லாங்காட்டி இந்தக் கயவாளிப்பய ஊரிலே ஒரு பொம்பளை தனியா வாழ்ந்து குப்பை கொட்ட முடியுமா?''

''வர்றியா படம் பார்க்கப் போவலாம்?'' அவன் கண்ணைச் சிமிட்டினான்.

''இதோ பாரு... கண்டிப்பா சொல்லிடறேன். உண்மையா ஒனக்கு ஆசையிருந்தா என் கழுத்திலே மூனு முடிச்சுப் போடு. அப்புறமாக் கூப்புடு. நாயாட்டம் ஓடியாறேன். இப்ப அந்தப் பேச்செல்லாம் என்னண்டே வைக்கக்காதே. கோணியை எடுத்துக்கிட்டு நட.'' அவள் அப்படியே தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

''இன்னும்மே நீ! பெரிய பெரிய பேச்செல்லாம் பேசிப்புடறே!''

''எது பெரிய பேச்சு?''

''கல்யாணமில்லேகட்டிக்கச் சொல்லறே!''

''பின்னே..... ஒசியிலே பெண்டாட்டி கிடைச்சுடுவான்னு பாக்கிறியா...?''

''சே! சே! கல்யாணத்துக்கெல்லாம் என்கிட்டே ஏது முத்தம்மா காசு?'' என்ற அவன் குரலில் ஏக்கம் நிரம்பி வழிந்தது.

''என்னு செலவு செஞ்சுடப் போறே... பெரமாதமா? பதினேஞ்சு ரூபாயிக்கு நீ ஒரு பொடவை எடுத்துடு. நான் ஒரு வேட்டி சட்டை எடுத்திடறேன். முடிஞ்சுது கல்யாணம். அதோ புள்ளேயாரு குந்தியிருக்காரு. அவரு எதுக்காலே புருசன் பொஞ்சாதி ஆயிடுவோம்.''

''ஒண்ணு மறந்திட்டியே முத்தம்மா?''

''இன்னு?''

''தாலி!''

''ஆங்... அது ஒரு ரெண்டு ரூபா இருக்குமாங்காட்டியும்! அதை நீதான்யா வாங்கியாறணும்... அதுதான் ஆம்புளேக்கு அளகு.''

''கல்யாணத்தை என்னிக்கு வெச்சுக்கலாம்?''

''இன்னும் பத்து நாள்லே ஒரு நல்ல நாளு வருதாம். அன்னிக்கு ரொம்பக் கல்யாணம் நடக்குதாம். அன்னிக்கே வைச்சுக்கிட்டாப் போச்சு. என்ன சொல்லறே?''

''செஞ்சுப்புடலாம். வரட்டா?'' பக்கத்தில் அரை வயிற்றோடு கிடந்த காகிதக் கோணியை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு நடந்தான் ரங்கன்.

சுவர்க் கடிகாரம் இரண்டு மணி அடித்தது.

ஜன்னல் திரையைச் சரியாக மூடி விட்டு 'டைப்ரைட்டிங்' மிஷினைத் திறந்தாள் மைதிலி.

வெங்காயக் குழம்பின் வாசனை மூக்கைத் தாக்கியது. முத்தம்மா வெளியே சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

''இன்று காலையில் உன் அப்பா வந்திருந்த போது நானும் வீட்டில் இருந்தேன் மைதிலி!''

''அப்பா சொன்னார்.''

''பவுன் விலை அதிகமாக இருக்கிறது. பதினைந்து பவுன் போதும் என்று சொல்லும்படி எங்கம்மாவிடம் நான்தான் சொன்னேன். உங்கப்பா சொல்லவில்லை?''

''சொன்னார்.''

''உன் வீட்டு நிலவரம் எப்படி இருக்கிறது?''

''இரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் கொடுப்பதற்கில்லை என்று பேசிக் கொள்கிறார்கள்.'' சிரத்தை இல்லாமல் பேசினாள் மைதிலி.

''எங்கப்பா சொல்வதிலும் தவறில்லை, மைதிலி. என் கூடப் பிறந்தவர்கள் ஏழெட்டுப் பேர்கள். அவர்களுக்கெல்லாம் ஜவுளி எடுத்தாக வேண்டும். அதனால்தான்....''

''காரணம் எதுவாக இருந்தால் என்ன?''

''கோபமா? வெறுப்பா?''

மைதிலியிடமிருந்து பதில் இல்லை.

''என்மீது வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லை மைதிலி. நான் என்ன செய்ய முடியும்? நீயே சொல்லு.''


''இன்றைக்குத் தேதி இருபத்திரண்டு. இன்னும் மூன்றே நாட்கள்தான் இருக்கின்றன. உங்கப்பாவாலும் இறங்கி வர முடியவில்லை. எங்கப்பாவாலும் ஏறி வர முடியவில்லை. இதற்கு முடிவுதான் என்ன?''

''உங்கப்பாவைக் கொஞ்சம் தீவிரமாக முயற்சி செய்யச் சொல் மைதிலி.''

''பெண்ணைப் பெற்றவர்கள் முயற்சி செய்யாமலா இருப்பார்கள்?''

''மதுரையிலிருந்து ஒருவர் இந்த ஊரிலே வந்து முகாமிட்டுக் கொண்டு காலையிலும் மாலையிலும் வந்து முற்றுகை யிடுகிறார்.. கோயம்புத்தூரிலிருந்து ஒரு மில் முதலாளி 'டிரங்கால்' போட்டுக் கழுத்தறுக்கிறார்.... பிறகு....''

வியப்பு மேலிட அவன் முகத்தைப் பார்த்தாள் மைதிலி. கைக்கடிகாரத்தைப் பார்த்





ஹாட்ரிக் கண்ட வத்ஸலா!

டேபிள் டென்னிஸ் தமிழக சாம்பியன் போட்டி இறுதி ஆட்டத்தில் வருமான வரி இலாகாவில் பணி புரியும் காஞ்சனாவைக் குமாரி வத்ஸலா தோற்கடித்தார். இவர் கீழ்ப்பாக்கம் வைத்தியக் கல்லூரியில் எம். பி. பி. எஸ். முதல் வருஷ மாணவி.

கடந்த இரண்டு வருஷங்களாகவே தமிழக சாம்பியனாக விளங்கும் வத்ஸலா 21-8, 21-5, 21-16 ஆகிய எண்ணிக்கையில் வெற்றி பெற்று 'ஹாட்ரிக்' சாம்பியன் ஆனார்.

''எங்களுக்கும் பிறநாட்டு டேபிள் டென்னிஸ் நிபுணர்களிடம் பயிற்சி கிட்டினால், இன்னும் சிறந்து விளங்க முடியும்!'' என்று தம் ஆவலைத் தெரிவிக்கிறாள் குமாரி வத்ஸலா.

பி. எஸ். உயர்நிலைப் பள்ளி மாணவன் ஹரிக்கும் வைணவக் கல்லூரி மாணவன் சந்திரசேகருக்கும் நடந்த போட்டியில் அவர்கள் ஆடிய ஐந்து 'கேம்'களும் ஏ ஒன்! எனினும் சந்திரசேகர் தம் 'தந்திர மான' ஆட்டத்திறனால் வெற்றியைத் தம் பக்கம் திருப்பிக்கொண்டார். இவருக்கு அயல் நாட்டுப் பயிற்சிக்கு 'சான்ஸ்' கிடைத்தும் போக முடியவில்லை. கல்லூரியில் இவர் பொருளாதாரத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டிருந்தபோதிலும் குடும்பப் பொருளாதாரம் யாரைத்தான் அயல் நாடு போக அனுமதிக்கிறது?

வத்ஸலா, சந்திரசேகரன் போன்ற பல விளையாட்டுக் கலைஞர்களின் அபார ஆட்டத் திறனை அயல் நாட்டு நிபுணர்கள் மேலும் வளர்த்துப் பிரகாசிக்கச் செய்ய வேண்டாமா? இதற்கு அரசு நல்ல திட்டங்களை வகுப்பது மிகவும் அவசியமல்லவா?

-குண்டுமணி

துக்கொண்டே எழுந்து நடந்தாள். அவளுடைய காப்பி மேஜையின் மேல் வைத்த படியே இருந்தது.

வழக்கம்போல் ஜன்னல் திரையை விலக்கிக் கொண்டு பார்த்தாள் மைதிலி.

''எவ்வளவு ரூபா சேர்த்திருக்கே?''

''பதினொணு. நீ?''

''இருவது.''

''தேவலாமே!...''

''வரியா...? துணிக்கடைக்குப் போயி வந்துடலாம்?''

''இன்னு அவசரம் முத்தம்மா?''

''கையிலே துட்டு இருந்தா செலவளிஞ்சி பூடும்.''

''மெய்தான்.''

''வர்ற வெசாளக் கெழமை பத்தரை மணிக்கு 'டாண்'ணு வந்துடு. புள்ளையாரு எதுக்காலே கண்ணாலத்தை முடிச்சடலாம். அன்னைக்கு எம்மாங் கல்யாணம் நடக்கப் போவுதுங்கறே...''

''இன்னும் தாலிவாங்கலியே முத்தம்மா?''

''இன்னும் ரெண்டு நாளு இருக்கே. துட்டு சேர்த்துட மாட்டே?''

''பஜார் பக்கம் விடாமே சுத்தினு சேர்த்துடலாம்.''

''பின்னே என்னவாம்? வா!''

இருவரும் எதிரே இருந்த ஜவுளிக் கடைக்குள் நுழைவது தெரிந்தது மைதிலிக்கு.

இருபத்தைந்தாம் தேதி. காலை பத்தரை மணி இருக்கும்.

டைப்ரைட்டிங் மிஷினைக்கூடத் திறக்காமல் ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள் மைதிலி.

எதிரே விருந்த பிளாட்பாரத்தில் பிள்ளையார் கோயில் வாசலில் நின்றுகொண்டிருந்தாள் முத்தம்மா. இடையில் பெரிது பெரிதாகப் பூப்போட்ட வாயல் சேலையும் தலை நிறையக் கனகாம்பரமுமாக நின்றாள். பிள்ளையார் கோவிலின் எதிரிலிருந்த மூஞ்சூறு உருவத்தின்மீது அப்பியிருந்த குங்குமத்தில் கொஞ்சம் எடுத்துத் தன் நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

நேரம் விரைந்து கொண்டிருந்தது.

மணி பதினொன்று. டைப்ரைட்டிங் மெஷினைத் திறந்தாள் மைதிலி.

''ஏனய்யா இம்மாம் லேட்டா வர்றே?''

மறுபடியும் ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள் மைதிலி.

''மூஞ்சியைக் கவுந்துக்கிட்டு வந்து நிக்கிறியே ஏனும்?''

''தாலி வாங்க முடியலே முத்தம்மா. கையிலே துட்டு சேரலே...''

''பூ! அதானே வெசயம்... வுட்டுத் தள்ளு. மூணு பைசா வெச்சிருக்கியா?''

''ம்...வெச்சிருக்கேன்.''

''போ! அந்தச் செட்டியார் கடையிலே ஒரு மஞ்சாக் கெளங்கு வாங்கிட்டு வா. போ, வெசயா.''

ரங்கன் ஓடிப் போய் ஓடி வந்தான்.

தன் இடையில் செருகியிருந்த மஞ்சள் கயிற்றில் அவன் வாங்கி வந்த மஞ்சள் கிழங்கை முடிந்தாள் முத்தம்மா.

அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ரங்கன் முத்தம்மாளின் கழுத்தில் மூன்று முடிச்சுக் களைப் போட்டு விட்டான். முத்தம்மா தன் கையிலிருந்த கர்ப்பூரத்தை எடுத்து மூஞ்சூறு எதிரில் வைத்தாள். ரங்கன் தன் சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்துக் கர்ப்

பூரத்தைக் கொளுத்தினான். அது சுடர் விட்டு எரிந்தது.

இருவரும் பிள்ளையாரின் எதிரில் விழுந்து வணங்கினார்கள்.

''வா... சாப்பாடு சாப்பிடலாம்.''

கணவனை அழைத்துக் கொண்டு தன் பிளாட்பார வீட்டுக்குள் கிரகப் பிரவேசம் செய்தாள் முத்தம்மா.

இருவரும் ஏதோ சாப்பிட்டார்கள் போலிருந்தது. கரிக் குழம்பின் வாடை மைதிலியின் முகத்தைச் சுளிக்க வைத்தது.

''வாத்தியார் படம் வந்திருக்குது முத்தம்மா. ஒன்னை அழைச்சுக்கிட்டுப் போவலாம்னு ஆசையா யிருந்தேன். தாலி வாங்கவே துட்டு இல்லே. படம் பாக்கறது எப்படி?'' என்று ரங்கன் கூறியது மைதிலியின் காதில் விழுந்தது.

''துட்டுச்சேந்தாப் போய்க்கினாப் போவுது. விடுவியா....'' என்று முத்தம்மா பதிலிறுப்பதும் கேட்டது.

மைதிலி தன் 'ஹாண்ட் பாக்'கைத்திறந்து பார்த்தாள். அதில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டும் ஒரு ரூபாய் நோட்டும் கொஞ்சம் சில்லறையும் இருந்தன. ஐந்து ரூபாய் நோட்டைக் கையில் எடுத்துக் கொண்டு ஜன்னல் அருகில் சென்றாள்.

முத்தம்மாவும் ரங்கனும் கை கழுவ வெளியே வந்தார்கள்.

''முத்தம்மா!'' என்று கூப்பிட்டாள் மைதிலி.

''என்னங்க...?'' என்று கொஞ்சம் எம்பிக் கொண்டு கேட்டாள் முத்தம்மா.

''இந்தா!'' என்று ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினாள் மைதிலி.

''என்ன வாங்கியாரணுங்க?''

''ஒண்ணுமில்லே. உனக்கு என் கல்யாணப் பரிசு! இரண்டு பேருமா சந்தோஷமா சினிமாவுக்குப் போங்க'' என்று கூறிவிட்டுத் திரையை நன்றாக இழுத்துப் போட்டுவிட்டுத் தன் இருக்கைக்கு வந்து அமர்ந்தாள் மைதிலி.

பிறகு கடமை அவளைத் தன்னை மறக்கும் படி செய்து விட்டது.

மணி ஒன்று அடித்தது.

எல்லோரும் எழுந்து சென்றார்கள். அவள் செல்லவில்லை. கால்கள் வழக்கத்தையொட்டி இழுக்கத்தான் செய்தன. இருந்தாலும் அவள் நகராமல் உட்கார்ந்துதான் இருந்தாள்.

''என்ன மைதிலியம்மா! காப்பி சாப்பிடப் போவலே?'' என்று கேட்டான் ஆபீஸ் பணியாள்.

''இல்லே. வேலய்யா. நீயே ஒரு கப் வாங்கி வந்துவிடு'' என்று கூறினாள். ஏனோ வாய் விட்டு அழவேண்டும் போலிருந்தது. பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டு சமாளித்துக் கொண்டாள்.

அன்று சுரேஷ் பி. காமும் காப்பி சாப்பிட ஹோட்டலுக்கு வந்திருக்க மாட்டான். ஏனென்றால் அவனுடைய வீட்டில் இன்று அவனுடைய திருமணத்துக்கான நிச்சய தார்த்தம் நடந்து கொண்டிருக்கும்!

விண் மீன்கள்

ஆகாயப் பந்தலில்
அழகாகப் பூத்திருக்கும்
அனலிலாப் பூக்களின்
அலங்கார அணிவகுப்பு!

வானத்து தேவதைகள்
வையத்து மாவிடரை
மையலுடன் நோக்கிச்
சிமிட்டும் ஒளிவிழிகள்!

மண்ணுலக மாந்தரெல்லாம்
மனமகிழ்ந்து பார்க்கும்
விண்ணுலகின் கார்த்திகைத்
தீப வரிசைகள்!

விண்ணுலக வள்ளல்கள்
மண்ணுலக மக்களுக்கு
அள்ளித் தெளிக்கும்
வெள்ளிக் காசுகள்!

வானமெனும் வாசலில்
வரவேற்புக் கோலங்கள்
வரைந்திட வைத்துள்ள
வண்ணப் புள்ளிகள்!


வானமெனும் நீலப்பட்டு
காலமகள் கையிட்டுக்
கசங்கி நைந்ததால்
காணும் பொத்தல்கள்!

வானமெனும் வீதியில்
வரிசைகள் ஏதுமின்றி
வாரியிறைத் திருக்கும்
வண்ணமணி விளக்குகள்!

வானமே கூரையாய்
வாழ்கின்ற வறியவர்க்கு
இறைவன் அமைத்துள்ள
இலவச விளக்குகள்!

- கமலக்கண்ணன்

ஆயத்தமாக இருங்கள்!



ஃபாஷனுடன் கைகோத்து நிற்கிறது வலிமை!

இப்போது ஃபாஷனோடு கூடிய மிதியடிகளில் வலிமை இணைந்துள்ளது. உதாரணமாக ஸி.எஸ்.ஸி.யின் கேப்டன் டெர்பி. இது பார்வைக்கு ஒயிலானது, அணிவதற்கு மென்மையும் இதமும் மிகுந்தது, எனினும் வலிமையும் நீண்டகால உழைப்பாற்றலும் பெற்றது!

இன்றே அருகமைந்த ஸி.எஸ்.ஸி. விற்பனையாளரிடம் ஸி.எஸ்.ஸி.யின் புதிய தினுசுகளிலிருந்து உங்களுக்குப் பிடித்தவற்றைத் தேர்ந்தெடுங்கள்!

மிகுந்த சிக்கனம், தகுந்த இதம்—
அதுவே ஃபாஷனோடு இணைந்த சுகம்!



கேப்டன் டெர்பி

CSC FOOTWEAR

தயாரிப்பாளர்கள்:
கரோனா ஸாஹு கோ. லிட்.
பதிவு அலுவலகம்:
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு,
பம்பாய்-1

ஆங்கிலத்தில் காற்றை விதைத்தவன் புயலை அறுவடை செய்வான் (He who sows the wind will reap the whirl wind) என்று ஒரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழி மலையாளத்திலும் சகஜமாகப் புழக்கத்தில் உள்ளது போலும்! அதன் அடிப்படையில்தான் இந்தப் படத்துக்குத் தலைப்பு வழங்கப்பட்டுள்ளது. தலைப்பு மட்டுமின்றி அந்தப் பழமொழியின் முழுப் பொருளையும் படத்தில் காண்கிறோம்.

சந்திரன் என்ற பணக்கார கண்டிராக்டர் பெண் சபலம் படைத்தவன். சில இடங்களில் இவன் துர்நடத்தை காரணமாகச் சக்கையாக உதையும் வாங்குகிறான். இருப்பினும் இந்த அசுரக் குணம் அவனைப் பிடித்து ஆட்டுகிறது. இவன் காற்றை விதைத்துப் பயங்கரப் புயலை அறுவடை செய்து தவிக்கும் போது மிகப் பரிதாபமாக இருக்கிறது. சந்திரன் என்ற பாத்திரத்தைப் புனைவதில், டைரக்டர் திரு கவி வெற்றி பெற்று விட்டார். எப்பொழுது இந்தப் பாத்திரம் வெற்றியடைந்ததோ, அப்போதே இந்தப் படமும் வெற்றியடைந்து விட்டது!

சந்திரன், ராதா என்ற இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு சென்னைக்கு அழைத்து வருகிறான். அதன் பின்தான் ராதாவுக்குத் தன் கணவனின் இந்தக் கீழ்த்தரமான குணம் தெரிய வருகிறது. இந்நிலையில் அவள் கருவுற்று ஒரு பெண் குழந்தையைப் பெறுகிறாள். இது அவளுடைய துயரத்தையே அதிகரிக்கிறது. கணவனைத் திருத்த முயல்கிறாள். முடியவில்லை. இந்த நிலையில் ராதா, சூசம்மா என்ற கிறிஸ்துவப் பெண்ணை அழைத்து வந்து வளர்க்கிறாள். சூசம்மாவும், ராதை - சந்திரன் மகளான நீனாவும் மிக அந்நியோந்நியமாக வளர்கிறார்கள். சூசம்மா நல்ல பருவமடைந்த மங்கையாகப் பரிணமிக்கிறாள். அவளது இளமை, சந்திரனின் கயமைக் குணத்தைக் கிளறிவிடுகிறது. பிறகு கதை புயலாக மாறுகிறது.

இந்தக் கதையை டைரக்டர் கவி மிகச் சீரிய உத்திகளைக் கையாண்டு அற்புதமாக நடத்திச் செல்கிறார். கதை சில இடங்களில் துரித கதியில் போகிறது. சில இடங்களில் நின்று நிதானமாகப் போகிறது. இவ்விரண்டு போக்கையும் அந்த அந்தக் காட்சி பார்ப்பவர்கள் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமோ அதற்கேற்ப அமைத்திருக்கிறார். சூசம்மாவினிடம் மோகம் கொண்ட சந்திரனின் மனம் படும் அல்லலை எவ்வளவு அழகாகவும் நிதானத்தோடும் காட்டியிருக்கிறார்! அவனால் தவிர்க்க முடியாத ஆசைக்கும் பாவத்துக்கு அஞ்சும் அவனது மனச்சாட்சிக்கும் நடக்கும் போராட்டத்தை வெகு நல்ல உத்திகளைக் கையாண்டு காட்டுகிறார்.

சூசம்மா என்ற அந்த அபலைப் பெண், சந்திரனின் மகள் நீனா நிமித்தம் அந்த வீட்டில் தங்க வேண்டி நேருகிறது. அவ்வீட்டில் அவள் சந்திரனின் மனைவி என்ற அந்தஸ்தின்றி வாழ முடியாது என்று உணர்ந்த சூசம்மா சந்திரனிடம் சென்று, ''என்னை ஏற்றுக் கொள்'' என்று கேட்கும் இடம் நெஞ்சைத் தொடுவதாக இருக்கிறது.

இப்படிப் பலப் பல நகாசு வேலைகளைப் படம் முழுதும் செய்திருக்கிறார். சந்திரனாக உம்மர் மிக நன்றாக நடித்திருக்கிறார். அதே போல் விஜய நிர்மலாவும், சுஜாதாவும் தங்கள் தங்கள் பாத்திரத்துக்கு ஏற்பச் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். 'கிறிஸ் ஆர்ட்ஸார்' இந்தப் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.

மனம் வருந்திப் பிரார்த்தித்தால் எவ்வளவு பாவம் செய்தவருக்கும், அன்பும் தயையும் காட்டி, மன்னித்து ஆதரவு அளிக்க ஏகநாதர் இருக்கிறார் என்பதுதான் படம் புகட்டும் பாடம். ஏகநாதர் மட்டுமா இருக்கிறார்? ஒவ்வொரு சமயத்தைச் சேர்ந்த சமயாச்சாரியார்களும், இதே போதனையை அல்லவா செய்கிறார்கள்!

- எஸ். வி. எஸ்.

காற்று விதைத்தவன்




“நீ செய்யற காரியம் உனக்கே அழகா இருக்காடா ?” என்று கோபமாகவும், ஆத்திரமாகவும் கேட்டாள் காமாட்சியம்மாள்.

“நான் என்னம்மா பண்ணட்டும்! எவ்வளவோதான் முயற்சி பண்ணிப் பார்க்கிறேன். மாதா மாதம் கடன்தான் மிஞ்சுகிறதே ஒழிய, பைசாக் காசுகூட மிச்சமில்லே” என்று நிதானமாகப் பதில் சொல்லிக் கொண்டே வலப் பக்கம் உள்ள அறையைக் கவனித்தான் பாஸ்கரன்.

ரகுபதி, சிகரெட் புகையைச் சன்னல் கம்பிகளுக்கிடையில் ஊதிக் கொண்டே உட்

இதயம் இருக்கிறது



ப.மு. இளங்குமரன்

கார்ந்திருந்தான். ராகவன், லைப்ரரிப் புத்தகமொன்றைப் படித்து முடிக்கும் ஆவலில் அமிழ்ந்து கிடந்தான்.

“ரெண்டு பேரு சம்பாத்தியம் இருந்தும் நீயுமா பஞ்சப் பாட்டுப்பாடணும்? ஏன்டா! இப்படி!” என்று காமாட்சியம்மாளின் குரலில் காரம் குறைந்து கொண்டிருந்தது.

“அண்ணு சொல்றது அத்தனையும் பொய்யம்மா. அவன் பேச்சை நீ நம்பவே நம்பாதே!..... கஷ்டமான நேரத்திலே நீ உன் கழுத்தில் கிடந்த – நமக்குன்னு ஒரே ஓர் ஆஸ்தியான பத்துப் பவுன் தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்ததே ரொம்பத் தப்பு! ஆமாம்மா!” – குடித்த சிகரெட் துண்டை நசுக்கி வெளியே வீசிவிட்டு, அறையிலிருந்து வெளிப்பட்டான் ரகுபதி.

பக்க மேளம் கொட்டும் காரியக்காரத் தம்பியை எரிச்சலோடு ஏறிட்டுப் பார்த்த பாஸ்கரன், “டேய், முட்டாள்! உன்னை யாருடா சம்மன் இல்லாமல் ஆஜராகச் சொன்னது? உன் வேலையைப் போயிப் பாருடா!” என்று இரைந்தான்.

“சம்மனோடுதான் நான் ஆஜராயிருக்கேன். தெரிஞ்சுக்கோ... பார்த்தாயா, அம்மா! உன் பிரியமான மூத்த பிள்ளை பேசுகிற பேச்சை!” என்று அம்மாவின் கோபத்துக்கு மேலும் நெய் வார்த்தான் ரகுபதி.

“ரகுபதி என்ன சொல்லிட்டான்னு நீ இப்படி அவன் மேல் பாயறே!.... நீ செய்தது உனக்கே நியாயமாப் படறதா பாருடா! வருஷம் ஒண்ணாச்சு.... இன்னும் பாங்கில் அடமானம் வைச்ச பத்துப் பவுன் சங்கிலியைத் திருப்பித் தர்ற பாட்டைக் காணோம்” என்ற காமாட்சி அர்த்தபுஷ்டியுடன் அறையைப் பார்த்தாள். அவளுடைய பார்வை, ‘நீயும் வந்து பேச்சில் கலந்து கொள்’ என்று ராகவனை அழைப்பது போலிருந்தது.

படித்த பக்கத்தின் மேல் முனையை அடையாளத்துக்கு மடித்து லைப்ரரிப் புத்தகத்தை மூடி வைத்த ராகவன், வேகமாகக் கூடத்துக்கு வந்தான்.

''ஆமாண்ணு ! ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு கழுத்தில் போட்டிருந்த சங்கிலியையும் கழற்றி அம்மா உங்கிட்டே கொடுத்திட்டா. இப்படி ஒரு வருஷம் வரைக்கும் அம்மா கழுத்தை வெறும் கழுத்தாய்ப் பார்க்க யாருக்குத்தான் சங்கடமாக இருக்காது ?''

கடைக்குட்டித் தம்பியின் பேச்சுத் திறமையில் இலை மறை காயாக ஊடாடும் குற்றச்சாட்டைப் புரிந்துகொள்ள முடியாத சிறு பிள்ளை அல்ல பாஸ்கரன்.

''சீக்கிரமே சங்கிலியை மீட்டுக் கொண்டு வந்து கொடுத்திடறேம்மா....அது வரையில் பொறுத்துக்க..... என்னம்மா....!'' என்றபடி விருட்டென்று வெளியேறித் தன் வீட்டைப் பார்க்க நடந்தான்.

''அம்மா! நான் சொன்னபடி ஆயிரம் ரூபாயை என்னிடம் கொடுத்தால், ஒரே மாதத்தில் அதை இரண்டாயிரமாக்கி உன்னிடம் திருப்பிக் கொடுத்திடுவேன்..... நல்ல சான்ஸ். மறுபடியும் கிடைக்குமாங்கிறது சந்தேகம்தான்.'' – தாயின் முகத்தை ஊடுருவிப் பார்த்தபடி ரகுபதி கூறினான்.

''கூட இருந்து கேட்டுக் கொண்டுதானே இருந்தே; பாஸ்கரன் சங்கிலியை ரொம்பச் சீக்கிரமே மீட்டுக் கொண்டு வந்து கொடுப்பான்.'' – மூத்தவனுக்கு ஏனோ வக்காலத்து வாங்கிப் பேசினாள் அவள்.

''போம்மா, நீ ஒண்ணு! சமயத்திலே கிடைச்சாத்தானம்மா ஒரு தட்டுத் தட்டலாம்... ம்...பாஸ்கரன் எப்போது கொண்டு வந்து தருவான்னுதான் பார்ப்போமே?'' என்று அங்கலாய்த்தான் ரகுபதி.

அவன் உள்ளூரிலுள்ள பாங்கு ஒன்றில் மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் காஷியராக வேலை பார்த்தான். தினமும் கரன்ஸி நோட்டுக்களின் நடுவில் தாராளமாகப் பழகியதாலோ என்னவோ, அவனுக்குப் பணத்தின் மீது அலாதியான துச்சம் பிறந்து விட்டது. அந்தத் துச்சம் அவனைச் சூதாட்டக் கிளப்பின் நிரந்தர உறுப்பினனாக மாற்றி விட்டுத்தான் ஓய்வு எடுத்தது. 'சூதாட்டப் புலி' என்பது ரகுபதிக்கு அவன் நண்பர்கள் சூட்டிய பட்டப் பெயர். வைத்த பட்டத்தில் பழுதொன்றுமில்லை.

பத்து வருடங்களுக்கு முன்பே கைம்பெண் கோலத்தைத் தலைமேற் கொண்ட காமாட்சியம்மாள் ரகுபதியின் சம்பளத்தில் காலத்தைப் போக்க வேண்டியவளானாள். ராகவன் பி.காம். படித்து விட்டு வேலைக்காக நாலா பக்கங்களிலும் சிபாரிசுகளுடன் முயன்று கொண்டிருந்தான்.

பாஸ்கரன் கல்யாணம் செய்து கொண்ட மறு வருஷமே தனிக் குடித்தனம்



சென்று விட்டான். அப்படிப் போய் விளையாட்டுப்போல் வருஷங்கள் ஏழு முடிந்து விட்டன.

மாதா மாதம் அம்மாவுக்குப் பண உதவி செய்வதில் பாஸ்கரன் தயக்கம் காட்டியதில்லை; அவனுடைய மனைவியும் அதற்கு எதிர்ப்புக் காட்டியவள் அல்ல. கடைசிக் கொழுந்தனுக்கு அடிக்கடி ஏற்படும் செலவுகளுக்கு அவள்தான் முகம் சுளிக்காமல் பணம் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

ரகுபதி முழுசாகச் சம்பளம் வாங்கி அதை அப்படியே அம்மாவிடம் கொடுத்த (அப்)பாவியல்ல! அவனும் அவனுடைய நடத்தைக்காகப் பெரிதாக வருத்தப்பட்டுக் கொண்டவனும் அல்ல. கொடுப்பதைக் கொண்டு குடும்பத்தைப் பாங்காக நடத்த வெகு பிரயாசைப்பட்டாள் அவள்.

இந்த நேரத்தில்தான் பாஸ்கரன் அவன் மனைவிக்குத் திடீரென்று உடல் நலம் குன்றிப் 'பீஸ்' கொடுத்து வைத்தியம் பார்க்க வேண்டிய நிலைக்கு ஆளானான்.

பணம் நீராகக் கரைந்தது.

சமாளிக்க முடியாமல் திண்டாடிய பாஸ்கரன் கடைசியில் அம்மாவிடம் உதவி கேட்டு விட்டான்.

, காமாட்சியம்மாளும் மருமகளுக்காக — மகனுக்காகத் தன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியைக் கழற்றித் தந்தாள்.

பாங்கில் அடகு வைத்து ரூபாய் ஆயிரம் புரட்டி வைத்தியம் பார்த்தான் பாஸ்கரன். அவன் மனைவி பிரேமாவைப் பிடித்திருந்த வியாதி ஆயிரம் ரூபாயைக் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டு துப்புரவாக மறைந்தது.

பிரேமா மீண்டும் உத்தியோகம் பார்க்கத் தொடங்கினாள்.

நாட்களும் பல கழிந்தன.

"அந்தச் செயினை மீட்டு வந்ததாகச் சொன்னீர்களே!.... பிறகு ஏன் அத்தையிடம் கொண்டு போய்க் கொடுக்காமல் நீங்களே வைத்திருக்கிறீர்கள்?" — பிரேமா சந்தேகத்துடன் கணவனைப் பார்த்தாள்.

"என்னோட வேலைபார்க்கிற என்சிநேகிதன் ஒருத்தனுக்குத் தலை போகிற விதத்தில் பண முடை, காலில் விழாத குறையாகக் கெஞ்சும் போது, என் மனசு கேட்கவில்லை பிரேமா! மறுபடியும் நகையைப் பேங்கில் அடமானம் வைத்து அவனுடைய கஷ்டத்தைப் போக்கினேன். இந்த நேரத்தில் அம்மா நகையைக் கேட்டால் நான் என்ன பதிலைச் சொல்றது! அவனும் வர்ற போனஸில் பணம் கொடுப்பதாகப் 'பிராமிஸ்' பண்ணியிருக்கிறான்" — பாஸ்கரன் தன் மனைவிக்குப் பொறுமையாக விளக்கம் சொன்னான்.

"நிலைமை இப்படி இருக்கிறது. ஆனால் அத்தை நினைக்கிறதோ வேறே மாதிரி. மகனும் மருமகளும் கூடிப் பேசி நம்ம நகையை என்னவோ செய்திட்டாங்கன்னு தான் தப்பபிப்பிராயப் படுவாங்க." — கணவனைப் பார்த்துக் கொஞ்சம் கோபத்தோடு பிரேமா பேசினாள்.

"அப்படியெல்லாம் அம்மா என் மேல் வீணாகப் பழி போட மாட்டாள். அந்த நகையைப் பத்தி இப்போ பேச்சே வரக் காரணமில்லே. ஆனால் உன் மூத்த கொழுந்தன் ரகுபதி இருக்கிறானே, அந்த மேதாவி ஏதோ பிஸினஸ் பண்ணறதுக்குப் பணம் தேவைன்னு அம்மாவைக் கேட்க, அவள் என்னிடம் நகையைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கிறாள்."

"ரகுபதி அப்படி என்ன புத்திசாலித்தனமாய்ப் பிஸினஸ் பண்ணப் போகிறான்?" என்று ஆச்சரியத்தோடு பிரேமா கேட்டாள்.


"என்னவோ வெளியில் கிடைக்காத கண்ட்ரோல் சாமான்களாம். அதைக் கறுப்பு மார்கெட்டில் வாங்கி விற்பனை பண்ணினால் ஒண்ணுக்கு ரெண்டா இலாபம் கிடைக்குமாம்" என்று சொன்னான் பாஸ்கரன்.

அவன் பேசிய தோரணையிலிருந்து எதையும் ரசித்துக் கொள்ள முடியாத பிரேமா, "எது எப்படி இருந்தாலும், ரொம்பச் சீக்கிரமா நீங்க செயினைத் திருப்பிக் கொண்டு வந்து அத்தையிடம் தர்றதுதான் நல்லது" என்றபடி பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

பாஸ்கரன் மௌனமாகச் சிரித்துக் கொண்டான். பிரேமாவிடம் எந்தவிதப் பதிலையும் தராமல் யோசனையுடன் இருப்பதுபோல் முகத்தைச் சுருக்கி வைத்துக் கொண்டான்.

இண்டர்வ்யூ முடிந்து வெளியே வந்த ராகவன் முகத்தில் ஈயாடவில்லை; உடலும் உள்ளமும் ஒரேயடியாகச் சோர்ந்துவிட்டிருந்தன.

ராகவனைப் பொறுத்தமட்டில் இண்டர்வியூவில் நல்ல முறையில் நடந்து கொண்டான்.


Hosiery made of pure
GRASIM
STAPLE FIBRE
has a better appearance, fuller feel, equal stretch, excellent durability, and high dimensional stability
If you are in the manufacturing line, Grasim Staple Fibre could lead you to bigger Sales, bigger Profits. A slight modification in your knitting methods such as increasing the courses per inch will help you to manufacture firm and compact knitted garments from 100% Staple Fibre.
GR
THE GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD.
Birlagram, Nagda (M.P.)

அவன் மேல், வேலைக்கு ஆள் சேர்க்கும் கமிட்டிக்கு நல்ல அபிப்பிராயம்தான் ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கமிட்டி கடைசியில் அவனிடம் சொல்லிவிட்ட ஒரு கண்டிப்பான நிபந்தனைதான் அவன் மனத்தையும், உடலையும் வெகுவாகத் தளர்வடையச் செய்தது.

'வேலை ஒப்புக்கொள்ளும் தினத்தில் ரூபாய் ஆயிரத்தைந்நூறு டெபாஸிட்டாகச் செலுத்தியாக வேண்டும்' என்பதுதான் கமிட்டி சொன்ன நிபந்தனை.

நிரந்தரமான உத்தியோகம்; மனத்துக்குப் பிடித்தமான பதவி; போகப் போகத் திறமைக்குத் தக்கவாறு பதவி உயர்வு; ஊதிய முன்னேற்றம்; அடிக்கடி ஆபீஸ் சம்பந்தமாகப் பல ஊர்களுக்குப் போய் வருகிற வாய்ப்புக்கள்.

கிடைக்கக் கூடிய வேலையா இது? அதற்காகத்தான் நூறு ரூபாய் நோட்டுக்களாகப் பதினைந்து கேட்கிறார்களோ!

ராகவனுக்கு வழி ஒன்றுமே புலப்படவில்லை. அம்மாவிடம் கேட்பதே பாவம்; அவனிடம் ஒரு காசுகூடப் புரட்ட வழியில்லை; ரகுபதியிடம் கேட்பதைவிடச் சும்மா இருப்பதே உத்தமம்; அவனுக்குச் சூதாடித் தீர்க்கவே சம்பளம் சரிக்கட்டி வரவில்லை; பெரிய அண்ணனிடம் போகவும் சங்கடமாயிருந்தது; அம்மாவிடம் வாங்கிப் போன சங்கிலியைப் பாங்கியிலிருந்து மீட்டுக் கொடுக்கவே அவர் படுகிற அவஸ்தை தெரியும்.

' அப்படியானால் கணிசமாக மாதம் நானூறு ரூபாய்ச் சம்பளத்தைக் கொடுக்கும் இந்த அருமையான உத்தியோகம் எனக்குக் கிடைக்காதா?' என்று தனக்குள் முனகிக் கொண்ட ராகவன் ஏமாற்றத்தோடும், வேதனையோடும் எச்சிலை விழுங்கினான்.

வாசற்படி மிதித்த ராகவனை முகம் மலர வாஞ்சையுடன் காமாட்சி வரவேற்றாள்.

ராகவன் விழிவிழி என்று விழித்தான்.

''வாடா, ராகவா வா!.... நீ போன காரியம் ஜெயமாயிடுச்சா ராஜா?'' என்றபடி மகனைத் தழுவி உச்சி மோந்தாள்.

ராகவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எரிச்சலோடு அம்மாவை ஏறிட்டுப் பார்த்தான். அம்மாவின் வயதால் இடுங்கிப் போன கண்களில் நீர்த் திரை பளபளத்தது.

''அம்மா!...என்னம்மா இது!...ஏனம்மா நீ இப்படிக் கண்ணீர் விடறே?....''

மௌனமாகத் தான் வைத்திருந்த ஒரு கடிதத்தை ராகவனிடம் கொடுத்தாள். கடிதத்தைப் பாஸ்கரன் எழுதியிருந்தான்.

அன்புள்ள அம்மாவுக்கு, வணக்கம்.

ஆபீஸ் விஷயமாக சீனியர் அதிகாரிகளோடு அவசரமாக இன்று காலை சென்னைக்குப் புறப்படுகிறேன். அதனால் நேரில் வராமல் கடிதம் எழுத நேர்ந்தது.

தம்பி ராகவனுக்கு உத்தியோகம் கிடைத்து விட்டது. ஆமாம்! ரூபாய் ஆயிரத்தைந்நூற்றையும் டெபாஸிட்டாகச் செலுத்திவிட்டேன். எனக்குக் கிடைத்த போனஸ் தொகையுடன், போதாததற்கு உன் நகையையும் வைத்துப் பணம் புரட்டி முழுதும் கட்டிவிட்டேன்.

அம்மா! பாங்கில் சங்கிலி அடகு இருப்பதாக நான் கூறியது பொய். காரணம், ரகுபதியை நம்பி நீ அவனிடம் சங்கிலியைத் தருவதை நான் விரும்பவில்லை. அவனிடம் போகும் பணம் சூதாட்டத்துக்குத்தான் பயன்படும் என்பதை நன்றாக அறிவேன். ராகவனுக்குச் சமயத்தில் உதவ முடியாது என்பதால் பிரேமாவுக்குக் கூடத் தெரியாமல் சங்கிலியைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன்.

அம்மா! கடைசித் தம்பியின் எதிர்காலத்துக்காக நான் மனமறிந்து பொய் சொன்னதற்கு மன்னித்துக்கொள். விரைவில் சங்கிலியைத் திருப்பித் தருகிறேன்; இது உறுதி. ராகவனுக்கு உத்தியோகமாகி விட்டதால் அது இனி ரகுபதியிடம் போய்ச் சேர்ந்தாலும் நான் அது குறித்துக் கவலைப்படவே மாட்டேன்.

பாஸ்கரன்

கடிதத்தைப் படித்துவிட்டு ராகவனுக்கும் கண்களில் நீர்த் திரையிட்டது.

திறமையான நடிப்புக்குச் சரியான தண்டனை!

முன்னொரு சமயம் கல்கத்தாவில் கொடுமைக்காரன் நீலனைப் பற்றிய ஒரு நாடகம் நடந்து கொண்டிருந்தது. நாடகத்தைப் பார்க்கக் கல்கத்தாவின் பிரமுகர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். ஸ்ரீ ஈசுவர சந்திர வித்யாசாகரும் வந்திருந்தார்.

நாடகத்தில் நீலன் ஒரு குடியானவப் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்ளும் கட்டம் வந்தது. நடித்தவர்கள் வெகு அற்புதமாக நடித்ததால், ஸ்ரீ வித்யாசாகர் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்தார். நீலனின் நடத்தையைக் கண்டு பொறுமல் மேடை மீது ஏறினார். தம் செருப்பைக் கழற்றி, நீலனாக நடித்துக் கொண்டிருந்தவரைப் பலமாக அடித்தார்.



அப்படி அடித்த பிறகுதான் ஸ்ரீ வித்யாசாகருக்குத் தாம் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தோம் என்கிற நினைவு வந்தது. நாணத்தினால் தலை குனிந்தார். மன்னிப்புக் கோரினார்.

அப்பொழுது நாடக இயக்குநரான ஸ்ரீ கிரீஷ் சந்திரகோஷ் ஓடி வந்தார். ''தாங்கள் நடிகரை இப்படி அடித்ததே எங்களுக்கு நாடகம் நன்கு அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் அத்தாட்சிப் பத்திரமாகும். ஆகவே, அந்தச் செருப்பைத் தாங்கள் எங்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும்'' என்றார்.

ஸ்ரீ கிரீஷ் சந்திரகோஷ் அந்தச் செருப்பை ஓர் அழகிய பெட்டியில் வைத்து, அது தங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்கிற விவரத்தை அடியில் எழுதி வைத்தார்.

— நாடோடி



“ஸாப்பி”
கடலை மிட்டாய்

சுவை, உணவுச் சக்தி,
முருமுருப்புத் தன்மையில்
இணையற்றது “ஸாப்பி.”
இயல்பான புரதச்சத்து
நிறைந்த “ஸாப்பி”
வைடமின் A, B. B2,
இரும்பு, தாதுச்
சத்துக்களுடன் ஆன
தயாரிப்பு.

20, 50, 100, 200 கிராம்
பொட்டலங்கள் கிடைக்கும்

தித்திக்கும் வேளையின்
திதிப்பான ஆகாரம்



இது ‘டால்மியா உத்யோகின்’
ஒரு தரமான தயாரிப்பு.



ராஜ விளையாட்டை ராணிகளும் ஆடலாம்!

"ராஜ விளையாட்டு கிரிக்கெட்டை 'ராணி'களும் ஆடலாமில்லையா?" என்று காந்திநகர் ஷோபா, மீரா என்ற இரு சிறுமிகள் ஆசைப்பட்டனர். இவர்களுக்கு உற்சாகமளித்துக் கிரிக்கெட் மட்டை, பந்து உபகரணங்களை வாங்கித் தந்தார் கிரிக்கெட் வீரர் வி. வி. குமார். 1973 மார்ச் மாதம் 11ந் தேதி ஒன்பது பெண்களுடன் காந்தி நகர் பெண்கள் கிரிக்கெட் கிளப் அங்குரார்ப்பணமாயிற்று. உடனே கிரிக்கெட் மோகம் நுங்கம்பாக்கம் பெண்களையும் பற்றிக் கொண்டது. சுதா ஷா, மீனு ஷா இருவரும் 1973 ஜூலையில் 'ஸ்கை லார்க்ஸ்' என்ற பெண்கள் கிரிக்கெட் கிளப்பினை உருவாக்கினர். இவ்விரண்டு கிரிக்கெட் கிளப்புகளுக்கும் கிரிக்கெட் பயிற்சியாளர் என். ஜே. வெங்கடேசன் பயிற்சி முகாம் நடத்திப் பத்து நாட்கள் கிரிக்கெட் ஆட்டத்தின் அடிப்படைகளைப் போதித்தார். இவ்விரு பெண்கள் கிரிக்கெட் கிளப்புகளையும் பற்றிக் கேள்விப்பட்டு நவம்பர் 2, 3, 4 தேதிகளில் அவர்களுடன் பம்பாய் பெண்கள் கோஷ்டி 'மாட்ச்' ஆட வந்துவிட்டது!

காப்டன் நிடா டெலாங் பம்பாயில், பெண்கள் கிரிக்கெட்டைப் பற்றி விளக்குகிறார்: "பம்பாயில் நான்கு வருஷங்களாகப் பெண்கள் கிரிக்கெட் பிராபல்யமாகி வருகிறது. நான்கு பெண்கள் கிரிக்கெட் கிளப்புகள் இருக்கின்றன. எங்களுக்கு ஸோல்கர், பார்க்கர், ஷிவல்கர் ஆகிய பம்பாயின் பிரசித்தி பெற்ற ஆட்டக்காரர்கள் வந்து அவ்வப்பொழுது பயிற்சி தருகிறார்கள். நாங்கள் பூனாவோடு 'மாட்ச்' ஆடியிருக்கிறோம்."

காந்திநகர் பெண்கள் கிளப், பம்பாய் கோஷ்டியைத் தோல்வியடையச் செய்து பெருமை பெற்றது. அதன் காப்டன் உமா சொல்கிறார்: "நாற்பது ஓவர் ஆட்டத்தில் எங்கள் கோஷ்டியில் விமலா ராமகிருஷ்ணன் 25 ரன்கள், மாலா ராமநாதன் 17 நாட்அவுட். ஷோபாவும், நானும் ஒன்பது விக்கெட்டுகளை 23 ரன்களில் எடுத்துவிட்டோம். எங்கள் முதல் வெற்றி எங்கள் ஆட்ட ஆசையை அதிகரித்திருக்கிறது."

"இத்தனை குறுகிய காலத்தில் எப்படி நல்ல பயிற்சி பெற முடிந்தது?"


"நாங்கள் சிறுவர்களுடன் மாதத்துக்கு ஒருமுறை 'மாட்ச்' ஆடுகிறோம். அவர்கள் விட்டுக் கொடுக்காமல் ஆடுவதால் எங்கள் ஆட்டமும் நன்றாக முன்னேறிவிட்டது!"

"நுங்கம்பாக்கம் 'ஸ்கைலார்க்ஸ்' இரண்டே ரன்களில் பம்பாயிடம் தோல்வியுற்றாலும், இரு கோஷ்டிகளும் இறுதி வரை உக்ரமாக ஆடியது இஸ்ரேல் – அரபுப் போர் மாதிரி இருந்தது! இரு தரப்பு ஆர்வமும் மெச்சத் தகுந்தது!" என்றார் இருபால் சிங். படத்தில் கல்வி அமைச்சர் மெரீனா மாட்சில் இரு கோஷ்டிகளையும் கைகுலுக்கி வாழ்த்தினார்.

– குண்டுமணி

அட்டைப்பட விளக்கம்

கட்டிப் பிடிக்க முடியுமா?



இந்துக் கலைகளைத் தழுவி முஸ்லிம்கள் கட்டிய அழகிய கட்டடங்களுள் ஒன்று குதுப்மினார். அடிமை அரசர்களுள் முதல்வனான குத்புதீன் கட்ட ஆரம்பித்ததை அடுத்தாற்போல் பட்டத்துக்கு வந்த இல்துமிஷ் கட்டி முடித்தான். பிரார்த்தனைக்குக் கூடும் இடமாகவும் வெற்றி ஸ்தூபியாகவும் கருதப்படும் 234 அடி உயரமுள்ள குதுப்மினாருக்கு அருகே இரும்புத் தூண் ஒன்று உள்ளது.

துருப் போடாத, முழுமையான, 23 அடி உயரமுள்ள இத்தூணில் கலந்த இறனை அதிகமாகக் காணமுடியாது போனாலும் 1500 பருவ மழைகளைக் கண்டிருந்தும் துளிக்கூடத் துருப் பிடிக்கவில்லை என்பது நம்மை அதிசயத்தில் ஆழ்த்துவதாகும். இரண்டாவது சந்திரகுப்தனுக்கு நினைவுச் சின்னமாக அம்பாலா அருகே ஒரு குன்றின் உச்சியில் கட்டப்பட்டுப் பின்னர் இடம் பெயர்ந்து குதுப்மினார் அருகே வந்துள்ளதாகக் கருதப்படுகிறது. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னால்கூட இத்தகைய துருப் பிடிக்காத அற்புதத் தூணைச் சிறந்த ஐரோப்பிய கொல்லர்களாலும் தயாரித்திருக்க முடியாது என்று உறுதியாகச் சொல்கிறார் ஏ. எல். பாஷாம் என்ற மேனாட்டுச் சரித்திர ஆசிரியர், The wonder that was India என்ற தமது பிரசித்தி பெற்ற நூலில்.

இரும்புத் தூணில் முதுகைச் சாய்த்து அதனைக் கட்டிப்பிடிக்க முடிந்தால் அது பெரிய அதிர்ஷ்டமாகக் கருதப்படுகிறது. இங்கு விஜயம் செய்துள்ள அயல்நாட்டுத் தம்பதி தங்கள் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்ப்பதை இவ்விதழ் மேலட்டையில் காண்கிறீர்கள்.

வண்ணப்படம்: ஆர். பி. எஸ். மணி தகவல்கள்: தம்பி சீனிவாசன்

ஞானக்குயில்

ஜெகசிற்பியன்

33. ஞானக்குயிலின் கீதம்

'இந்தப் பாக்கியத்தம்மாள்தான் எவ்வளவு அழுத்தமானவள்! எத்தனை நெஞ்சுறுதி படைத்தவள்!' — என்று மனத்துக்குள் அசை போட்டான் நரசு.

''அம்மாக்கிட்டே யிருந்து கடிதாசி வந்ததா தம்பீ?'' என்று கேட்டாள் பாக்கியத்தம்மாள்.

''வந்தது சின்னச்சி !'' என்றான் நரசு இளஞ்சிரிப்புடன்.

''நானும்கூட அவங்களுக்குக் கடிதாசி எழுதணும்னு இருக்கிறேன்; எப்போ எழுதப் போறேனோ, தெரியலே!'' என்றவாறு அங்கிருந்து உள் அறைக்குப் போய்விட்டாள்.

''திருமலை எங்கே?'' என்று தன் ஆத்திரத்தை அடக்க முடியாமல் கேட்டு விட்டான் நரசு.

''அவர் காலம்பற எங்கோ வெளியே கிளம்பிப் போனார்!'' என்று சாதாரணமாகப் பதிலிறுத்தாள் சுகந்தி.

'' வெளியே போய்விட்டானா ?.... சற்றுமுன், அவன் மேலே இருக்கிறான் என்றாயே ?''

''ஆமாம், சார் ! அவர் இந்த மாடியில் எங்களோடு குடியிருக்கிறார்னு சொன்னேன்.''

நரசுவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''ஓ,..... அப்படியா?'' என்றவாறு தன் அவசரப் புத்தியைத் தானே பழித்துக் கொண்டான். ''திருமலை எப்போ வருவான் ?''

'' அதை நிச்சயமா சொல்றதுக்கு இல்லை, சார் ! நினைச்ச போது வர்றார், போறார். சில சமயம் ரெண்டு மூணு நாட்கள் சேர்ந்தாற்போல் வராமலும் இருந்து விடுறார்.''

மேலே ஒன்றும் கேட்காமல் தலையாட்டிக் கொண்ட நரசுவுக்குத் திருமலையின் போக்கு உள்ளூற ஒருவிதக் குழப்பத்தையும் திகிலையும் உண்டுபண்ணியது. அத்துடன், 'இந்த மாடிப் போர்ஷனை அந்த வங்காளி காலி பண்ணாத



போது பாக்கியத்தம்மாள் தன் மகளுடன் இதிலே எப்படிக் குடி வந்தாள்? ஒருகால் திருமலை அவரிடம் கேட்டு இவர்களுக்கு இவ்வுதவியைச் செய்திருப்பானோ? அப்படியானால் இந்த அம்மாளை அவன் எங்கே பார்த்து, எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டிருப்பான்?' என்றெல்லாம் கேள்விகள் எழுந்து அவனுடைய மூளையைக் குடைந்தன.

சுகந்தி அவன் அருகில் நெருங்கி வந்து மிகத் தணிந்த குரலில், ''சார்! உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?'' என்று கேட்டாள்.

'என்ன?' என்பது போல் அவளை இதமாக நோக்கினான் நரசு.

''உங்க நண்பர் திருமலை, கூடிய சீக்கிரம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருக்கிறார்!''

என்பதுகூடத் தெரியாமல் நிற்கும் அந்தப் பெண்ணின் பேதைமையை எண்ணி அவனுடைய மனம் சிலிர்ப்பு அடைந்தது.

''நான் புறப்படறேன், சுகந்தி! உன் அம்மாவிடம் சொல்லிவிடு. அவங்க என்னமோ வேலையா யிருக்கிறாங்க போல் இருக்குது'' என்று இளநகையுடன் கூறிய நரசுவின் பார்வை அருகில் கிடந்த ஒரு புத்தகத்தின்மேல் சென்றது.

அன்றொரு நாள் திருமலை தன் கல்லூரிப் புத்தகம் என்றும், அதை மூர்மார்க்கெட்டில் விற்கப் போவதாகவும் சொன்ன அதே புத்தகம்தான் அது. உள்ளார்ந்த வியப்புடன் நரசு அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினான்.



வியப்பால் வாயடைத்துப் போன நரசுவின் முகம் மகிழ்ச்சிப் பெருக்கால் மலர்ந்து விரிந்தது. அவன் அவளைக் கனிவுப் புன்னகையுடன் கண்ணிமைக்காமல் பார்த்தான். இப்படி ஒரு விஷயத்தைச் சொல்லும்போது கொஞ்சம் வெட்கப்பட்டுக் கொள்ள வேண்டும்

'மாலின் சிந்தனைகள்.'

அவன் தனக்குள் மெல்லத் தலையாட்டிக் கொண்டான். எடுத்த புத்தகத்தை இருந்த இடத்தில் வைத்து விட்டுச் சுகந்தியிடம் விடைபெற்றுக் கொண்டு சிந்தனை வயப்பட்டவனாய்த் தெருவில் இறங்கி நடக்கலானான்.

மாதா மாதம் தவறாமல் மதுரத்தம்மாள் தன் மைந்தனுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தாள். நரசு நாள் தவறாமல் சென்னையிலுள்ள ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும், சர்க்கார் காரியாலயத்திலும் புகுந்து புகுந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தான். இதுவரையில் குறைந்தபட்சம் ஓர் ஐந்நூறு அப்ளிகேஷன்களாவது எழுதியிருப்பான்; நூறு இண்டர்வ்யூக்களுக்குக் குறையாமல் போயிருப்பான். ஆயினும் லஞ்சம், பெரிய இடத்துச் சிபாரிசு, ஜாதிக் கண்ணோட்டம், கட்சிவெறி இவையே மலிந்துள்ள இந்தத் 'தர்ம மிகு' சென்னைப் பட்டணத்தில், இராப்பகலாகக் கஷ்டப்பட்டுப் படித்து வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருந்த அவனது பி. காம். பட்டத்தைச் சீந்துவார் யாருமே இல்லை.

அலுப்பும் சலிப்பும், வேதனையும் விரக்தியும் ஏமாற்றமும் எரிச்சலும் அடைந்த அவன் ஒரு நாள், தன் தாயார் அனுப்பிய மணியார்டர்களின் ரசீதுகளையெல்லாம் எடுத்து எண்ணிப் பார்த்தான். பன்னிரண்டு ரசீதுகள் இருந்தன! சென்னையில் முழுசாக ஒரு வருடத்தை ஓட்டிவிட்டான். ஆனால் தேடி வந்த காரியமோ பூஜ்யத்தை விட்டு அசையவில்லை. அதனால், இனியும் இந்தப் பட்டணத்தில் இருந்து பயனில்லை என்று அவனுக்குத் தோன்றியது. பேசாமல் ஊர் போய்ச் சேர்ந்து விடுவது என்ற முடிவுக்கும் வந்துவிட்டான்.

இந்த ஒரு வருடத்தில் வேலை தேடி அலைந்த அநுபவங்களைத் தவிர, அவன் கண்டும் கேட்டும் கவனத்தில் நிறுத்திக் கொண்ட விஷயங்கள் மிகச் சிலவே.

அந்தப் பெரிய ஹோட்டல் மீண்டும் திறக்கப்பட்டது. விஜயரங்கன் திரும்பி வந்து தன் ஓவிய வேலையைத் தொடங்கி முடித்துப் பணம் வாங்கிக் கொண்டு போய் விட்டான். இப்போது அவனுக்கும், அந்தத் தியேட்டர் முதலாளியின் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாகியிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

கல்கத்தாவுக்குச் சென்றிருந்த மனோகரி சென்னைக்குத் திரும்பிவிட்டாள். அவளுடைய தாயார் கௌரியம்மாளின் உடல் நிலை பூரணமாகி இப்போது மாடிப் படிகளில் ஏறி இறங்குகிறாள்.

ஹோட்டல் சாப்பாடு அலுத்து விடும் போதெல்லாம் அவன் வேதமூர்த்தியின் வீட்டுக்குப் போய்க் கௌரியம்மாளின் அன்புக் கரங்களால் பரிமாறப்படும் அறுசுவை உணவுகளை வயிறார உண்டுவிட்டு வருவான். அப்புறம் நாளாவட்டத்தில் இந்தப் பழக்கத்தையும் பெருமளவு குறைத்துக் கொண்டான். இப்போது அவ்வீட்டாரைப் பார்த்தே நான்கு மாதங்களுக்கு மேல் ஆகிறது. மனத்தில் ஒன்றும் பிணக்கும் சுணக்குமில்லை; வேலை தேடும் முயற்சியில் ஏற்பட்ட தோல்விச் சோர்வே அவனை அப்படி எதிலும் எவரிடத்திலும் விருப்பமற்றவனாக்கிவிட்டது. ஆனால் —

திருமலையின் விஷயத்தில் அவன் நடந்து கொண்டவிதம்?.... அதை நினைத்தால் அவனுக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஆமாம்; ஓராண்டுக்கு முன்னால் ஒரு நாள் காலை திருமலையின் வீட்டுக்குப் போய்ப் பாக்கியத்தம்மாளையும் சுகந்தியையும் பார்த்துவிட்டு வந்தானே, அதன் பிறகு அந்தப் பக்கமே அவன் போகவில்லை.

ஏன் போகவில்லை? ஏனோ அவனுக்குப் போக வேண்டுமென்றே தோன்றவில்லை; அவனைப் பார்க்க வேண்டும் என்ற நினைவும் எழவில்லை. ஒரேயடியாக அவனை மறந்து விட்டானா? அப்படியும் சொல்வதற்கில்லை. திருமலை இவனை வந்து பார்க்கவில்லை. இதுதான் இவனுக்குக் கோபம். அதனால் அந்த வீட்டுப் பக்கமே தலை காட்டவில்லை.


திருமலை ஏன் நரசுவை வந்து பார்க்காமலே இருக்கிறான்? இந்த ஹோட்டலில் இவன் தங்கியிருப்பது அவனுக்குத் தெரியாதோ? அப்படிச் சொல்ல முடியாது. பார்க்க வேண்டும் என்றால் எப்படியும் இந்த விலாசத்தைத் தேடிப் பிடித்து வரலாம். வேதமூர்த்தியின் வீட்டில் போய்க் கேட்டால் சொல்லிவிட்டுப் போகிறார்கள்! எனவே, அவன் ஏதோ காரணத்தால்தான் இவனைப் பார்க்காமலே இருக்கிறான். அந்தக் காரணம் என்னவாயிருக்கும்?

நரசு பல ஊகங்களைச் சோடித்தான். சோடனை விரிய விரிய அவனுக்கு வீம்பு வலுக்கும்; கோபம் மிகுதியாகும். இப்படியே காலம் ஓடிவிட்டது. ஆனால் கடந்த சில தினங்களாக வருத்தமும் துயரமும் அவனை வாட்டத் தொடங்கின.

'என் ஆருயிர் நண்பன் என்னை ஏன் வந்து பார்க்கவில்லை? அந்த மாசற்ற ரோஜாவான புஷ்பசுகந்தியை அவன் இதுகாறும் மணந்துகொண்டுவிட்டிருப்பானோ? அட பாவி, என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் எப்படியடா உன்னால் ஒரு கல்யாணத்தைச் செய்து கொள்ள முடிந்தது? அவ்வளவுக்கு என்னை அந்நியனாகவா நினைத்து விட்டாய்?' — இவ்வாறெல்லாம் எண்ணிச் சில சமயம் கண் கலங்கி விடுவான்.



கண்ணு, நாம்
ஓடோனில்
உபயோகிக்கிறோம்



ஓடோனில் துர்நாற்றங்களை உடனடியாக அழிக்கிறது. பாத்ரூம் போன்ற இடங்களைத் தூய்மையாகவும் நறுமணத்துடனும் வைக்கிறது.

ஓடோனில் பல்வேறு நறுமணங்களில் கிடைக்கின்றன. ஓடோனில் வகைவகையான அளவுகளில், தினுசுகளில், டப்பாக்களில் கிடைக்கின்றன.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்

BALSARA

CHAITRA-BLS-6 TAM

இன்றும் அப்படித்தான் திருமலையை நினைத்தபடி தன் அறையில் உட்கார்ந்திருந்த நரசு, 'ஏன்? நான்தான் போய் அவனைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன? ஊருக்குப் போகுமுன் ஒரு தடவை பார்த்துவிடலாமே!' என்று தன்னையே கேட்டுக் கொண்ட மறு கணம், சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டான்.

திருமலை முன்பு குடியிருந்த வீட்டில் வேறு யாரோ புதிதாகக் குடி வந்திருந்தனர். தெரு வாசலிலேயே தயங்கி நின்ற நரசு மாடியை நோக்கினான்.

மாடி வீட்டின் கதவு திறந்திருந்தது. ஆனால் சன்னல்கள் சாத்திக் கிடந்தன. 'பாக்கியத்தம்மாள் இப்போது அவ்வீட்டில் குடியிருப்பாளா, அல்லது வேறு எங்கேனும் போய்விட்டிருப்பாளா?' — எதற்கும் மேலே போய்த்தான் பார்க்கலாமே என்ற துணிவுடன் படிக்கட்டில் ஏறினான். பாதிப் படிகளைக் கடந்தபோது உள்ளேயிருந்து யாரோ மெல்லப் பாடும் குரல் கேட்டுத் தயங்கி நின்றான்.

''எல்லாம் ஏகவே
எனக் கெல்லாம் ஏகவே,
தொல்லைமிகு இவ்வுலகில்
சுகம் இல்லையே...!''

நரசுவின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. அவன் ஓசைப் படாமல் மேலே ஏறிப் போய் அறைக்குள் எட்டிப் பார்த்தான். அங்கே —

அங்கே உத்தரத்தில் கட்டிய ஓர் ஏணை தொங்கியது. அந்த ஏணையில் சின்னஞ் சிறு பெண் குழந்தை ஒன்று தூங்கிக் கொண்டிருந்தது. ஏணையின் கீழே தரையில் முழங் கால்களை மடித்துப் போட்டு உட்கார்ந்து கொண்டிருந்த புஷ்ப சுகந்தி வலது கை விரல்களால் ஜபமாலை உருட்டியவாறு இடக் கையால் ஏணையை ஆட்டியவாறு மெலிந்த குரலில் தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள்!

''சுகந்தி !''

அவள் திரும்பிப் பார்த்தாள். கண்ணிமைகள் இலேசாகத் துடிதுடித்தன. முகத்தில் மென்மையானதொரு மலர்ச்சி.

''தோத்திரம் சார் ! வாங்க சார்!''

கால்கள் பின்னவிட உள்ளே போய் ஒரு நாற்காலியில் அமர்ந்தான் நரசிம்மன். அவள் எழுந்து ஏணையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு தலை குனிந்து நின்றாள்.

'' பாக்கியம் சின்னைச்சி எங்கே சுகந்தி ? உள்ளே இருக்கிறாங்களா ?''



திருடனைக் காட்டிக் கொடுக்கும் மை!

திருடர்களைச் சிக்க வைக்கச் சில விசித்திரமான சாதனங்கள், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

விலை உயர்ந்த ரெடிமேட் ஆடைகளைத் தயாரிக்கும் நிறுவனத்தார் கண்ணுக்குப் புலப்படாத மையில், தம் முகவரியை அச்சிட்டுக் கொள்ளலாம். இதனை விசேஷ விளக்கின் உதவியுடன் மட்டுமே பார்க்க, படிக்க முடியும். எனவே இந்தத் துணிகள் திருட்டுப் போனால் திரும்பக் கண்டுபிடிக்கும்போது அடையாளம் காண்பது எளிதாகும்.

திருடர்களை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தால் அவர்கள் மீது பீச்சுவதற்கு ஒருவிதத் திரவத்தைத் தயாரித்து இருக்கின்றனர். உடலில் இது பட்ட இடங்களில் சிவப்பாக மாறிவிடும். மற்றொரு திரவத்தைத் தடவினால் இது மறையும். பெரிய நகரங்களில் டாக்சி டிரைவர்களைப் போக்கிரிகள் மிரட்டிப் பணத்தைப் பறிப்பதுண்டு. அவ்வித சூழ்நிலையில் காரில் ஒரு பொத்தானை டிரைவர் அழுக்கியதும் ஒருவித ரேடியோ சமிக்ஞை மூலம் மத்திய அலுவலகத்தை அல்லது வேறு டிரைவர்களை உதவிக்கு அழைக்க முடியும். மற்ற டிரைவர்கள் விரைந்து சென்று ஆபத்தில் சிக்கியுள்ளவரைப் பாதுகாக்கலாம்.

-பு. பீ. எஸ்.

சுகந்தி பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாய் இருந்தாள். நரசு பரபரப்புடன் அங்குமிங்கும் பார்த்துவிட்டு மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்.

''இல்லை, சார் !''

'' எங்கே ? வெளியே போயிருக்கிறாங்களா ?''

''மோட்சத்துக்குப் போய் இருக்கிறாங்க !''

'ஹக்.' — நரசு தன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டான். அவனுக்குத் தலை சுற்றுவது போல் இருந்தது. கண்கள் இருண்டு கொண்டு வந்தன. சற்று நேரத்துக்குப் பின்னால் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ''எப்போ இது..... நடந்தது ?'' என்று குழறிக் கேட்டான்.

'' ஒரு மாசம் ஆகிறது.''

''என்ன உடம்புக்கு?''

''ஒண்ணுமில்லே. நல்லாத்தான் இருந்தாங்க. திடீர்னு ஒருநாள் நெஞ்சு வலிக்குதுன்னு படுத்தாங்க. அரை மணி நேரத்தில் எல்லாம் முடிஞ்சு போச்சு.''

தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட நரசு சட்டென்று நிமிர்ந்து, ''திருமலை எங்கே?'' என்று ஒருவிதத் துடிப்புடன் வினவினான்.

சுகந்தி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். பதில் ஏதும் சொல்லாமல்

மௌனமாய் நின்றாள். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல் அமைதியாக நடந்து சென்று மேசை டிராயரிலிருந்து ஒரு தமிழ்ச் செய்தித் தாளை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

அது பழுப்படைந்து போன ஒரு பழைய செய்தித் தாள். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முற்பட்ட ஒரு நாள் பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் ஒரு செய்தி சிவப்புப் பென்சிலால் கட்டம் போடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியை வாய்க்குள்ளாகவே படித்தான் நரசு.

''....பைப் பாரத் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் சசிவர்ணம் என்பவரின் வீட்டில் பத்துப் பேர்கள் கொண்ட ஒரு தீவிரவாத வன்முறைக் கோஷ்டி நள்ளிரவில் புகுந்து அவரைக் கொலை செய்யவும், பொருட்களைக் கொள்ளையிடவும் முயன்றபோது ஏற்கனவே அங்கு தயாராய் வந்து மறைந்திருந்த இரகசியப் போலீஸார் சுட்டதன் காரணமாய் ஒருவன் ஸ்தலத்திலேயே மாண்டான். இருவருக்குப் பலத்த காயம். மற்றவர்கள் தப்பி ஓடி விட்டனர். இறந்தவனின் பெயர் திருமலை. அவன் ஒரு பி. காம்., பட்டதாரி. போலீஸ் மேலும் தீவிரப் புலன் விசாரணை நடத்தி வருகிறது......''

சிலையாகச் சமைந்துவிட்ட நரசுவின் கண்களில் புனலெனக் கண்ணீர் வழிந்தது. உணர்ச்சியற்ற மரக்கட்டையைப் போல் நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுகந்தி.

தூளியில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை மெல்ல நெளிந்தது. பிறகு அழ ஆரம்பித்தது. நரசு எழுந்து போய்க் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்து மடியில் வளர்த்திய படி உட்கார்ந்தான்.

'' இங்கே எப்படித் தனியாக இருக்கிறே சுகந்தி ?''

இப்போதுதான் சுயஉணர்வு பெற்றவள் போல் அசைந்து நிமிர்ந்த சுகந்தி, ''இருக்கிறேன், சார் ! நாளைக்கு இந்த வீட்டைக் காலி செய்துவிடச் சொல்லி விட்டார் வீட்டுக்காரர் !'' என்றாள் அமைதியாக.

''இவ்வளவு காலம் நீங்க எப்படிக் காலம் தள்ளினீங்க ?''

''அம்மாவுக்கு மாசா மாசம் எங்கிருந்தோ மணியார்டரில் பணம் வந்துகிட்டிருந்தது. அப்புறம் நாலு மாசங்களுக்கு முன்னால் அது நின்னுபோச்சு. அதிலிருந்து கஷ்டம்தான்.''

நரசு குழப்பம் அடைந்தான். பாக்கியத்தம்மாளுக்கு எங்கிருந்து பணம் வந்திருக்கும் என்பதை அவனால் அநுமானிக்க முடியவில்லை. சுகந்தி இருக்கும் நிலையில் இதுபற்றி அவளைத் துருவிக் கேட்கவும் அவனுக்கு மனம் வரவில்லை. நெடுநேர யோசனைக்குப் பின் ஒரு திடமான முடிவுக்கு வந்தவன் போல் நிமிர்ந்து தெளிவான குரலில் சொன்னான்:

''சுகந்தி! இப்போ நான் சொல்லப் போறதை நீ கொஞ்சம் கவனமாகக் கேட்கணும். உன்னை என்னோடு எனது சொந்த ஊருக்கு அழைச்சுப் போறதுன்னு முடிவு செய்திருக்கிறேன். என் வீட்டிலே வந்து தங்கிவிடு. என்னை உனது உடன் பிறந்த அண்ணனாகவே ஏற்றுக் கொள். என் அம்மா உன்னைத் தன் சொந்த மகள் போல் வைச்சுக்குவாங்க. நான் சொல்ற எதையும் அவங்க தட்ட மாட்டாங்க. ஆனால்...''

ஒரு தேவதைபோல் நின்று கொண்டிருந்த சுகந்தி அவனை விழியசைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'' உன்னுடைய நன்மைக்காகவும், என் அருமை நண்பன் திருமலையின் இந்த அன்புச் செல்வத்தின் நன்மைக்காகவும் மட்டுமல்ல; எங்கள் குடும்ப நலனுக்காகவும் சொல்கிறேன். இந்தக் குழந்தையோடு எங்கள் வீட்டுக்கு நீ வருவது அவ்வளவு நல்லதல்ல. அதனால் உனக்குப் பரிச்சயமான அந்தக் கன்னிகா மடத்தில் இதைக் கொண்டு போய் ஒப்படைச்சுட்டு வா ! அங்கே நல்ல விதமாய் வளரட்டும். வளர்ந்து பெரியவனானதும் இதன் நல்வாழ்வுக்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். இது சத்தியம்.''

இந்நேரம் வறண்டு கிடந்த சுகந்தியின் கண்களில் இப்போது கரை பிளந்த வெள்ளம் போல் கண்ணீர் பெருக்கெடுத்துக் கொட்டியது.

''அப்படியே ஆகட்டும், அண்ணா!''

வழக்கம்போல் அந்தக் கன்னிகா மடத்தின் பெரிய வாசற் கதவு சாத்திக் கிடந்தது.

கறுப்பில் சிவப்புக் கறையிட்ட புடவையும், வெள்ளை முழுக் கைச் சட்டையும் அணிந்து, மார்பில் தனது இரண்டு மாதப் பெண் குழந்தையை அணைத்தவாறு வந்து நின்ற சுகந்தி, நடுங்கும் கரத்தால் அந்தக் கதவிலே தொங்கிய கயிற்றை மும்முறை இழுத்தாள். எங்கோ மணியடிக்கும் ஓசை !

ஒரு பதினைந்து நிமிடங்களுக்குப் பின் அந்தப் பெரிய கதவில் பொருத்திய

USB/MS 47/ந-

Links the several worlds of women

Every fortnight, Femina reaches out to over two million readers across Asia. It brings to them a discerning, balanced and urbane interpretation of the Indian woman today—and through her, of the country she has helped to change.

Policy-maker, home-keeper or ego-preserver, the Indian woman is, like her counterparts in Asia, destroying old myths and carefully defined roles. She is emerging as the force that motivates much of the change in the sub-continent.

Femina records her life, her changing values, her experiences...every fortnight in colour and black and white.




femina

A FORTNIGHTLY FOR EVERY WOMAN

A TIMES OF INDIA PUBLICATION

ரேகா அனந்த்பாய் • ஸ்ஹாஸ் டாக்லே



சிறிய கதவு மட்டும் திறந்தது. அவள் குனிந்து உள்ளே புகுந்து நடந்தாள்.

மடத்தின் வரவேற்பு அறை. அந்த அறை வாயிலின் மேல் படியில் ஒரு சிலை நின்றிருந்தது. சிலையா அது? இல்லை; மடத்துத் தலைவி ஜீத்தா மேரி!

குழந்தையை அணைத்தவாறு கீழ்ப் படியில் வந்து தலைகுனிந்து நின்றாள் சுகந்தி. சில நிமிட நேரம் அவ்விருவரும் அப்படியே நின்றிருந்தனர்.

ஜீத்தா ஒவ்வொரு படியாகக் கீழே இறங்கி வந்தாள். சுகந்தியைத் தாய்மைப் பரிவோடும் பாசத்தோடும் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். வாய் திறந்து ஒன்றும் கேட்கவில்லை; ஒரு வார்த்தையும் பேசவில்லை. இரு கைகளையும் நீட்டிச் சுகந்தியிடமிருந்து அந்தக் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

முதல் முறையாக அவளை நிமிர்ந்து பார்த்தாள் சுகந்தி. "என்னை மன்னிச்சுடுங்க, மதர்!" — குழந்தாளிட்டுக் குனிந்து அவளது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

ஒரு கையால் குழந்தையை அணைத்தபடி, மறு கையால் அவளின் உச்சந் தலையைத் தொட்டாள் மடத்துத் தலைவி. "எழுந்திரு, மகளே! கடவுள் உன்னோடு இருப்பார்!"

குனிந்த தலை நிமிராமல் சுகந்தி பின்னால் நகர்ந்து அப்படியே திரும்பி மடத்துக் காம்பவுண்ட் வாசலை நோக்கி நடந்தாள். அவளையே பார்த்துக் கொண்டு சிலை போல் நின்றிருந்த ஜீத்தாவின் கண்களில் இப்போது இரு துளி நீர் உருண்டு உதிர்ந்தது.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு தொலைவில் மண்வெட்டியுடன் ஒரு பூச்செடியருகில் நின்றிருந்த தோட்டக்கார ராயப்பன் தன் முழங் கையால் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

•

வைகறைப் போதில் ஒரு ஜட்கா வண்டி மதுரத்தம்மாளின் வீட்டு வாசல் எதிரே வந்து நின்றது. வண்டிக்காரன் இரண்டு பெட்டிகளை இறக்கிக் கொண்டு போய்த் திண்ணையின் மேல் வைத்தான்.

நரசிம்மன் வண்டியைவிட்டு இறங்கினான். அவனுக்குப் பின்னால் புஷ்பசுகந்தியும் கீழே இறங்கினாள்.

"அம்மா !"

பூஜையறையிலிருந்து அப்போதுதான் கூடத்து அறைக்கு வந்த மதுரத்தம்மாள் நிமிர்ந்து நோக்கினாள்.

"என்னம்மா, இப்படிப் பார்க்கிறீங்க? நான்தாம்மா, உங்க மகன் நரசிம்மன்! மெட்ராசுக்கு வேலை தேடப் போனேன் இல்லையா? வேலை கிடைக்கலே; ஆனால் எனக்கு ஒரு நல்ல தங்கச்சி கிடைச்சாள்! உங்களுக்கும் ஒரு மகள் வேணுமில்லையா ? இதோ, அழைச்சு வந்திருக்கிறேன்! இவள் பெயர் புஷ்பசுகந்தி! 'இவளுக்கு நீங்கதான் இனிமேல் அம்மா ! உங்க மகன் சொல்றேன், அம்மா! உங்க மகனை நீங்க நம்பறீங்க இல்லையா ?"

சிறு பையன் போல் உற்சாக மகிழ்ச்சியுடனும் கேலிச் சிரிப்புடனும் இவ்வாறு உரக்கச் சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் நரசு.

மதுரத்தம்மாள் தன் மைந்தனையும் அந்தப் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தாள். இருபது வருடங்களுக்கு முன்னால், இதே போல், ஒரு நாள், அவளுடைய கணவர் சேதுபதி இப்படித்தான் பாக்கியத்தம்மாளை அழைத்து வந்து வாசலில் நிறுத்திவிட்டுத் தம் தாயாரிடம் இம்மாதிரியே சொன்னார். ஆனால் அவர் 'தங்கை' என்று சொல்லவில்லை. அது ஒன்றுதான் வித்தியாசம். அந்தக் காட்சி இப்போது மதுரத்தம்மாளின் மனக் கண்ணில் அப்படியே படமாக விரிந்தது. சேதுபதியின் தாயார், தன் மைந்தன் சொன்னதை நம்பியது போல் இவளும் தன் மகன் சொல்வதை முழுவதுமாக நம்பினாள்.

அவள் முகத்தில் ஓர் அபூர்வ ஒளி படர்ந்தது. அமைதியாக நடந்து போய் வாசலில் ஒதுங்கி ஒடுங்கி நின்றிருந்த

புஷ்பககந்தியை மெல்ல அணைத்தபடி உள்ளே அழைத்து வந்தான்.

ஐப்பசி மாதத்துப் புது வெள்ளம் மாயூரத்துக் காவிரியில் கரையை அணைத்துப் புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. துலாக் கட்டத்தில் ஏகக் கூட்டம்.

கடந்த ஓராண்டு காலத்து வெப்ப வேட்கையெல்லாம் தீரக் கழுத்தளவு நீரில் நின்று மூங்கி மூங்கி எழுந்து கொண்டிருந்தான் நரசிம்மன்.

''ஐயோ, குடம்! செப்புக் குடம்! தயவு பண்ணி அதைப் பிடிச்சுக்குங்க!''

முகத்தில் வழிந்த நீரை அவசரமாக வழித்துவிட்டுக் கொண்டு நிமிர்ந்தான் நரசு. அவன் அருகில் ஓர் அழகான செப்புக் குடம் பளபளவென்று மிதந்து வந்து கொண்டிருந்தது. ஒரே தாவில் அதை எட்டிப் பிடித்துக் கையில் எடுத்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஆற்று நீர் அலம்பும் படிக்கட்டின் மேல் ஈரக் கூந்தலும் நனைந்த சேலையுமாக ஒரு கந்தர்வப் பெண் போல் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தாள் கண்ணம்மா.

அவளைக் கண்டு ஆச்சரியத்தால் திக்குமுக்காடிப் போன நரசு குடத்துடன் மெல்லப் படியேறி வந்தான். அவள் வேண்டுமென்றே தன் குடத்தை அவன் அருகில் மிதக்க விட்டிருக்கிறாள் என்பதை இப்போது அவன் புரிந்து கொண்டான்.

''இது உன் குடம்தானே?''

''..............''

''மறுபடியும் இதை ஆற்றிலேழுழ்கடிச்சுட்டு ரயிலேறி ஓடப் பார்க்கிறயா?''

''நான் ஏன் ஓடறேன்? இது என் அம்மாவின் குடம்!''

நரசிம்மன் அவளது நீலோற்பலமலர்கள் போன்ற கண்களை ஊடுருவிப் பார்த்தான். அவளும் அவனுடைய விழிகளையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள். அவர்களின் அந்த அர்த்தமற்ற சிரிப்பில் முதல் முறையாக அவ்விருவரும் ஏதோ ஒன்றைஅர்த்தப்படுத்திக் கொண்டனர்.

அவள் அவனுடையகையில் இருந்த செப்புக் குடத்தை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு விறு விறு வென்று மேலே ஏறி விரைந்தாள்.

''அடடே! மதுரத்தம்மாளின் பிள்ளையா? எப்போ மெட்றாஸிலேயிருந்து வந்தீங்க?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தாள் நேசமணியம்மாள்.

தொலைவில் சென்று கொண்டிருந்த கண்ணம்மாவையே தன்னை மறந்து பார்த்துக் கொண்டு நின்ற நரசு சட்டென்று சமாளித்தவாறு, ''ஆமாம், அம்மா! இன்னிக்குக் காலம்பறதான்'' என்று குழறினான்.

''உத்தியோகம் எல்லாம் கிடைச்சுட்டுதா தம்பீ?''

''இல்லேம்மா...! அதனால்தான் திரும்பி வந்துட்டேன்.''

''இங்கே என்ன பண்ணப்போறீங்க?''

''அடுத்த தேர்தலிலே நிற்கப் போறேன்.''

அவன் விளையாட்டுக்குச் சொல்கிறான் என்று எண்ணிச் சிரித்துக் கொண்டே படித்துறையில் இறங்கினாள் நேசமணியம்மாள்.

மணி ஒன்பதரைக்கு மேல் ஆகிவிட்டது. ஈரத் துவாலையை உதறியவாறு வீட்டுக்குள் பிரவேசித்தான் நரசு. அவனுடைய தாயார் பள்ளிக்குப் புறப்பட்டுப் போய் விட்டிருந்தாள்.


முன்பு பாக்கியத்தம்மாளுக்கெனத் தரப்பட்டிருந்த ஓர் அறையிலிருந்து மெல்லிய குரலில் பாடும் ஒலி கேட்டு ஓசையின்றி நடந்து போய் உள்ளே எட்டிப் பார்த்தான்.

''எல்லாம் ஏசுவே,
எனக் கெல்லாம் ஏசுவே!
தொல்லைமிகு இவ்வுலகில்
சுகம் இல்லையே!
ஆயினும் சகாயனும்
நேயனும் உபாயனும்...
எல்லாம் ஏசுவே,
எனக்கெல்லாம் ஏசுவே!''

முக்காடிட்ட தலையுடன் முழங்கால்களை மடித்துப் போட்டுத் தரையில் சுவர் பக்கமாகத் திரும்பி உட்கார்ந்திருந்த புஷ்பககந்தி, ஜபமாலையை உருட்டியவாறே கண்களில் கண்ணீர் வழியத் தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள்.



அருமையான காபி ப்ரூ,
அறிவில் சிறந்தவள் என் மனைவி



சுமார் மூணேகால் ரூபாய்க்கு 30 கப்புக்கு மேல் ஸ்ட்ராங் காபி தயாரிக்கலாம் என்கிறாள் என் மனைவி பத்மா. ப்ரூ மிகச்சிறந்தது. ஒவ்வொரு கப்பும் நல்ல ருசியுள்ளது.

ஒவ்வொரு கப் ப்ரூவுக்கும் வறுத்து அரைத்த சிறந்த காபியின் விலையைவிட அதிகமில்லை

எனக்கு நினைவு தெரிந்த நாளாக நான் காபித் தூளையே உபயோகித்து வருகிறேன்.

இப்பொழுது இன்ஸ்டண்ட காபிகளில் ப்ரு ஒன்றையே விரும்பி சாப்பிடுகிறேன். ஏனென்றால் ப்ருவின் ருசி சிறந்த காபியின் ருசியேதான்.

ப்ரு ஸ்ட்ராங்கானது. திடமானது. சிறந்த மணம் கொண்டது. அவசரத் தேவையின் போதோ எதிர்பாரா விருந்தினர் வரும் போதோ ப்ரு ரொம்ப சௌகரியமாய் இருக்கிறது.

ப்ரு—ஓர் அபாரமான கண்டுபிடிப்பு.

ப்ரூ ருசி சிறந்த காபியின் ருசி



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)